

# தர்மசக்கரம்







ரக்தாக்ஷி ஞூ சித்திரை மீ சக்கரம் 33 ஆரம் 4

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

## ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல உயர்நிலைப்பள்ளி

திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா.

### குருகுலத்தில் புதிய மாணவர்களைச் சேர்ப்பது சம்பந்தமான அறிக்கை

இந்தப் பள்ளியில் 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலும் உள்ளன. 8 ஆம் வகுப்பிலும் அதற்கு மேலான வகுப்புகளிலும் புதிய மாணவர்களைச் சேர்ப்பது இல்லை. 4, 5, 6, 7 ஆம் வகுப்புகளில் மட்டும் புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். புதிய மாணவர்களைச் சேர்க்க விரும்புவோர் மே மாதம் 30 ஆம் தேதி காலை 9 மணிக்குள் மாணவர்களுடன் இங்கு வரவேண்டும். அப்பொழுது மாணவர்களை நேரில் பார்த்து, அவர்களுடைய உடல்நிலை, படிப்பு, வேறு இயல்புகள் இவற்றைப் பரிசோதித்து அவர்களுக்கு இடமளிக்கப்படும். மற்ற நாட்களில் மாணவர்களைச் சேர்ப்பது இல்லை. பரீட்சைகள் மே மாதம் 30 ஆம் தேதி காலை 10-00 மணிக்குத் துவங்கி அன்று முற்பகலிலும் பிற்பகலிலும் நடைபெறும். மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான முடிவுகள் அன்று மாலையிலும் இரவிலும் ஒவ்வொரு வகுப்பாக அறிவிக்கப்படும். இதற்காக விண்ணப்பத்தாள் எதுவும் எழுதியனுப்ப வேண்டியதில்லை. மாணவனை எடுத்துக் கொள்வதாக அறிவித்தவுடன் பொறுப்புத் தொகை ரூ. 300ம், சாமான்கள் பொருட்டு ரூ. 300ம் ஆக, ரூ. 600 முன் பணமாகச் செலுத்த ஆயத்தமாக இருக்கவேண்டும். இங்கு இடம் பெற்ற பிறகு, முன்பு படித்த பள்ளிக்கூடத்திலிருந்து பள்ளிக்கூட மாற்ற சர்டிபிகேட் வாங்கித் தந்தால் போதுமானது. உணவு, உடை, வாடகை, முட்டுவழி மற்றும் எல்லாச் செலவுகளுமாக வகுப்புக்கு ஏற்ப மாதம் ரூ. 250 முதல் ரூ. 300 வரை ஆகும். இலவசமாகவோ குறைந்த செலவிலோ மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. போதனுமொழி தமிழ். மேலும் விவரம் வேண்டுவோர், 75 பைசா ஸ்டாம்பு அனுப்பிவைத்து "வித்யாவன குருகுலச் சட்ட திட்டங்கள்" என்னும் சிறு புத்தகத்தைப் பெற்று விவரம் தெரிந்துகொள்ளலாம்.

**S. ஈசுவரன்**
*தலைமை ஆசிரியர்*

**சித்பவானந்த**
*தலைவர்*

---

### மாணவ மாணவிகளுக்கு விடுதி வசதிகள்

மாணவர்களை மேல்நிலை வகுப்புகளில் (11, 12) சேர்ப்பதற்கு:

விவேகானந்த மேல்நிலைப்பள்ளி, திருவேடகம் மேற்கு-624 217, மதுரை மாவட்டம்.

மாணவர்களைக் குருகுலக் கல்லூரியில் சேர்ப்பதற்கு:

விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு-624 217, மதுரை மாவட்டம்.

குழந்தைகளை நர்ஸரியிலும், ஆரம்பப்பள்ளியிலும் (ஆண், பெண்) சேர்ப்பதற்கு:

ஸ்ரீ சாரதா பாலமந்திர், சேலம்-636 007.

மாணவிகளை உயர்நிலைப்பள்ளியில் சேர்ப்பதற்கு:

ஸ்ரீ சாரதா வித்யாலயா, சேலம்-636 004.

மாணவிகளைக் கல்லூரியில் சேர்ப்பதற்கு:

ஸ்ரீ சாரதா கல்லூரி, சேலம்-636 004.

என்னும் விலாசங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளுங்கள்.

# தர்ம சக்கரம்

## மாத சஞ்சிகை

சக்கரம் 33 || ரக்தாக்ஷி ௵ சித்திரை மீ || ஆரம் 4

## பொருளடக்கம்




## சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா : ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட்செய்த ரூபாய் நூற்றைம்பதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா : ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா : மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி' யினின்று ஈடுசெய்து கொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப்பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-50     வெளிநாடு தனி இதழ் ரூ. 4-00

**உள்நாடு வருட சந்தா: ரூ. 15-00     வெளிநாடு வருட சந்தா: ரூ. 45-00**

# அந்தர்யோக விவரங்கள்

**சேலம் ஜில்லா—சேந்தமங்கலத்தில் 21—4—84 சனிக்கிழமை**

*இடம்:* கன்னிகா பரமேஸ்வரி அம்மன், கல்யாண மண்டபம்
*நேரம்:* காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

**பெரியார் மாவட்டம்—பவானியில் 22—4—84 ஞாயிற்றுக்கிழமை**

*இடம்:* ஸ்ரீ ஐயப்பா சேவா மிஷன், ஸ்ரீ சங்கமேஸ்வரர் ஆலயம் சமீபம், பவானி
*நேரம்:* காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
*உணவு வசதி:* மதிய உணவுக்கு ஸ்ரீ ஐயப்பா சேவா மிஷனில் காலை 10-00 மணிக்குள் உணவுக்குச் சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பெங்களூரில் 29—4—84 ஞாயிற்றுக்கிழமை**

*இடம்:* கன்டோன்மெண்ட் அஜந்தா டாக்கீஸ் எதிரிலுள்ள ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடம்
*நேரம்:* காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

**திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 29—4—84 ஞாயிறு**

*இடம்:* அருள்மிகு அகஸ்தியர் திருக்கோவில்
*நேரம்:* காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

**தர்மபுரி ஜில்லா—காவேரிப்பட்டணத்தில் 30—4—84 திங்கட்கிழமை**

*இடம்:* தபோவனம்
*நேரம்:* காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
*உணவு வசதி:* நேரில் உணவுச் சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

**மதுரை ஜில்லா—கொடுவிலார்பட்டியில் 6—5—84 ஞாயிற்றுக்கிழமை**

*இடம்:* அத்வைத ஆனந்த ஆச்ரமம்
*நேரம்:* காலை 9-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை
*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

**மதுரை ஜில்லா—மேலூரில் 11—5—84 வெள்ளிக்கிழமை**

*இடம்:* சபரிமலை ஐயப்ப சுவாமி பிரார்த்தனை மண்டபம்
*நேரம்:* காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

---

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும், தாய்மார்களும் அந்தர்யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும்,பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

# தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

| சக்கரம் 33 | ரக்தாக்ஷி ௵ சித்திரை ௴ | ஆரம் 4 |
|---|---|---|

## பிரார்த்தனை

क्वोपदेशः क्व वा शास्त्रं क्व शिष्यः क्व वा गुरुः ।
क्व चास्ति पुरुषार्थो वा निरुपाधेः शिवस्य मे ॥

— अष्टावक्रसंहिता

*க்வோபதேச: க்வ வா சாஸ்த்ரம் க்வ சிஷ்ய: க்வ வா குரு:*
*க்வ சாஸ்தி புருஷார்த்தோ வா நிருபாதே: சிவஸ்ய மே*

*— அஷ்டாவக்ரஸம்ஹிதா*

*நிர் உபாதியில் நிலைத்திருக்கும் எனக்கு உபதேசம் எதற்கு? நூலாராய்ச்சி எதற்கு? குரு சிஷ்ய இணக்கம் எதற்கு? புருஷார்த்தங்கள் எதற்கு?*

தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாம்ஆர்? எம(து)ஆர்? பாசம்ஆர்?
என்ன மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன் தன் குறிப்பே குறிக்கொண்டு
போமா(று) அமைமின் பொய்நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன்அடிக்கே.

*— திருவாசகம்*

# அருள் விருந்து

எளிமையில் இனிமையும் அழகும் நிறைந்துள.

முறையான இயக்கம் மனிதனை மேலோனுக்குகிறது.

நலனை உயிர்களனைத்தும் யாண்டும் நாடி நிற்கின்றன.

சிற்றின்பத்தை ஒதுக்குமளவு மனிதன் பெரிய மனிதனுகிருன்.

அறநெறியைக் கடைப்பிடிப்பவர்க்கு அஞ்சுதற்கு ஒன்றுமில்லை.

மனிதனை மனிதனிடத்திருந்து பிரித்துவைப்பது சமய அனுஷ்டானமாகாது.

எங்குச் சென்ருலும் மனிதன் தன் மனப்பான்மையினின்று பிரிந்திருக்க மாட்டான்.

பொருளற்ற தீர்க்காயுளைவிடப் பொருள் பொதிந்துள்ள அற்ப ஆயுள் மேலானது.

உலகத்தவர் பேணி வருகின்ற பொருளற்றதைச் சான்ருேன் புறக்கணிக்கிருன்.

சமுதாயத்துக்குப் பயன்படும் செயல்களில் பெரியவை சிறியவை என்னும் வேறுபாடு இல்லை.

அற்ப எண்ணங்கள் மனதினின்று அகல அகல மனிதன் பண்பாட்டில் மேலோங்குகிருன்.

உள்ளத்தினுள் வீற்றிருக்கும் மனச்சாட்சிக்கு நிகரான துணை மனிதனுக்கு வேறு ஏதும் இல்லை.

சத்திய விரதத்தைக் கடைப்பிடிப்பவன் நலன் அனைத்தையும் அடையப் பெறுபவனுகின்ருன்.

துன்மார்க்கத்தைத் துடைத்திருந்தாலொழிய ஆருயிர்களுக்கு இன்னல்கள் அழிந்துபட்டுப் போகா.

மனத்தகத்து வீற்றிருக்கும் பேரறிவுப் பெரிய பொருளை அணுகும் அளவு அது நல்ல வழிபாடாகிறது.

முன்னேர் செய்துள்ள நலன்களை யாண்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதலே அவர்களுக்குச் செய்யும் சிரார்த்தச் சடங்காகிறது.

## பரமஹம்சர் புகட்டிய

# பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் தொடர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார். அவர் இயம்பியதாவது: "தக்ஷிணேசுவர ஆலய நிர்வாகியாகிய மதுர நாத விசுவாஸ் ஒரு நாள் ஏதோ ஒரு பரவச நிலையில் இருப்பவர் போன்று தென்பட்டார். குடிகாரன் போன்று அவர் நடந்துகொண்டார். அந்நிலையிலிருந்த அவர் தம் கடமைகளைச் சரியாக ஆற்ற இயலாத பாங்கில் இருந்தார். "இவர் இப்படி நடந்து கொள்வாராகில் இவருடைய பூஸ்திதிகளை எல்லாம் யார் கவனித்துக்கொள்வார்? ஒருவேளை வயதில் இளைய வராயிருந்த அந்த அர்ச்சகர் இவர்மீது ஏதாவது ஏவல் செய்திருக்கக்கூடும்" என்று பலர் இயம்பினர்கள்.

"நரேந்திரன் இங்கு வர ஆரம்பித்தபொழுது ஒருநாள் அவனுடைய நெஞ்சை நான் தொட்டுப் பார்த்தேன். உடனே அவன் புறவுலக நினைவை இழந்துவிட்டான். திரும்பவும் புறவுலக ஞாபகம் வந்தபொழுது கண்ணீரும் கம்பலையுமாக அவன் என்னிடம் இயம்பியதாவது: "தாங்கள் ஏன் அத்தகைய அதீத நிலையை என்பால் வரவழைத்தீர்கள்? எனக்குத் தாய் தந்தையர்கள் இருக்கிறார்கள்." இத்தகைய அகங்கார மமகாரம் அஞ்ஞானத்தின் விளைவாம்.

"குரு ஒருவர் தம்முடைய சிஷ்யரிடம் பகர்ந்ததாவது: "இது மாய உலகம்; மனிதனை ஏமாற்றும் பாங்குடையது. ஆதலால் இதை நீத்து விட்டு என்னைப் பின்தொடர்ந்து வா." அதற்கு அச்சிஷ்யன் கொடுத்த விடையாவது: "ஐயனே, என் தாய் தந்தையர், மனைவி ஆகியோர் என்னை உள்ளன்போடு நேசிக்கின்றனர். அவர்கள் என்னிடம் காட்டும் அன்பை நிலையற்றது என நான் கொள்வது எங்ஙனம்?" இம்மறுமொழிக்குக் குரு விடுத்த விடையாவது: "நீ இப்பொழுது அகங்கார மமகாரத்தில் ஊறியிருக்கின்றாய். ஆதலால் அவர்கள் எல்லாரும் உன்னை உள்ளன்போடு நேசிக்கின்றார்கள் என்று இயம்புகின்றாய். ஆனால் இவை யாவும் நீ படைத்துள்ள மதிமயக்கமேயாம். நான் உனக்கு ஓர் உபாயம் சொல்லித் தருகிறேன். அதினின்று நீ உன் உற்றார், உறவினர் உன்மீது வைத்துள்ள அன்பு எவ்வளவு தூரம் உறுதியானது என்பது உனக்கே நன்கு விளங்கும்." பிறகு குரு அவனிடம் குளிகை ஒன்று கொடுத்தார். "வீட்டிற்குச் சென்ற பிறகு இதை நீ அருந்து. அதன் பிறகு நீ செத்த பிணம் போன்று கிடப்பாய். ஆயினும் நீ பிரக்ஞை இழந்துவிடமாட்டாய். நிகழ்வன யாவற்றையும் நீ கேட்டுக்கொண்டும் பார்த்துக் கொண்டும் இருப்பாய். நீ அந்நிலையில் இருக்கின்ற பொழுது நான் உன் வீட்டுக்கு வருவேன். நீயும் படிப்படியாகப் பழைய நிலையை அடையப் பெறுவாய்" என்றார்.

குரு சொன்னபடியே சிஷ்யன் செய்தான். அதன் விளைவாக அவன் பிணம் போன்று படுக்கையில் படுத்துக் கிடந்தான். வீட்டார் எல்லாரும் கோவென்று கதறி அழுதனர். அவனைப் பெற்றெடுத்த தாயும் மணந்து கொண்ட மனைவியும் தரையில் படுத்தபடி உருண்டு புரண்டு அழுது கொண்டிருந்தனர். ஏனைய உற்றார், உறவினரும் கிட்டத்தட்ட இதேபாங்கில் விசனத்தில் மூழ்கி இருந்தனர். அப்பொழுது சான்றோர் ஒருவர் உள்ளே வந்து உற்றார் பட்ட துயரத்துக்குக் காரணம் யாது என்று வினவினர். 'இவ்விளைஞன் மாண்டு போனான்' என்று அவர்கள் இயம்பினர்கள். வந்தவர் செத்தவன் போன்றிருந்த இளைஞனுடைய கையைப் பிடித்து நாடி பார்த்தார். பிறகு அவர் அவன் சாகவில்லை என்று உறுதி கூறினர். 'என்னிடம் மருந்தொன்று இருக்கிறது. நான் அதை அவனுக்குக் கொடுப்பேனாகில் அவன் முற்றிலும் குணமடைந்துவிடுவான்' என்று சொன்னார். அதைக் கேட்ட உற்றார் உறவினர் அக்கணமே அகமகிழ்வு எய்தினர். விண்ணுலகமே மண்ணுலகிலிருந்த தங்களுடைய இல்லத்துக்கு வந்துவிட்டதாக அவர்கள் உணர்ந்தார்கள். ஆங்குப் பிரசன்னமாயிருந்த சான்றோர் மேலும் இயம்பியதாவது: "நான் மேலும் உங்களுக்குச் சொல்லி எச்சரிக்கை

செய்ய வேண்டிய மற்றொரு விஷயம் உள்ளது. நான் கொடுக்கும் மருந்தில் ஒரு பகுதியை முதலில் யாரேனும் ஒருவர் அருந்தவேண்டும். மற்ற பகுதியைச் செத்தவன் போன்று கிடக்கும் இவ்விளைஞனுடைய வாயில் போட்டு உள்ளே நான் செலுத்தி விடுவேன். இதன் விளைவாக நான் கொடுக்கும் மருந்தின் முற்பகுதியை அருந்துபவர் இறந்து பட்டுப்போவார். இவ் விளைஞனை உள்ளன்போடு நேசிக்கும் உற்றார் உறவினர் பலர் இங்கு இருப்பதை நான் பார்க் கிறேன். நிச்சயமாக இத்தனை பேரில் யாரா வது ஒருவர் இம்மருந்தை ஏற்றுக்கொள்ள முன்வருவார் என்று நான் உறுதியாக நம்புகி றேன். அவனை மணந்த இளம் மனைவியும் பெற் றெடுத்த தாயும் தாங்கொணுத் துயரத்தில் மூழ் கியிருப்பதை நான் பார்க்கிறேன். உண்மையா கவே அவ்விருவருள் யாராவது ஒருத்தியாவது நான் கொடுக்கும் மருந்தை ஏற்றுக்கொள்ளுங் கள்.'' ஒரே அழுகை மயமாயிருந்த வீட்டில் இப்பொழுது அமைதி நிலவியது. அப்பொழுது தாய் சொல்லியதாவது: ''இது ஒரு பெரிய குடும்பம். நான் செத்துப்போய்விட்டால் இத் தனை பேரைப் பார்த்துப் பராமரிப்பதற்கு வேறு யார் இருக்கின்றனர்?'' இங்ஙனம் இயம்பிவிட்டு அவள் சிந்தனையில் ஆழ்ந்து மூழ்கியிருந்தாள். சற்று நேரத்திற்கு முன்பு அழுதுகொண்டிருந்த மனைவி சொல்லியதா வது: ''பிறப்பெடுத்தவர் எல்லாரும் செல்லும் மார்க்கத்தில் என் கணவனும் சென்றுவிட்டார். என் தமக்கை பெற்றெடுத்துவிட்டுப்போன இந்த இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். நானும் மடிந்துபோய்விட்டால் தாயை இழந்த இச்சிறுவர்களைப் பேணி வளர்ப்பதற்கு வேறு யார் இருக்கின்றனர்?

நிகழ்ந்தவை யாவற்றையும் செத்தவன் போல் படுத்துக்கிடந்த இளைஞன் பார்த்தும் கேட்டும் வந்தான். உலகத்தவர்கள் வைக்கும் அன்பு அனைத்தும் சுயநலத்தை அடிப்படை யாகக் கொண்டது என்பதை அவன் நன்கு அறியலாயினன். தூக்கத்திலிருந்து விழித்தது போன்று எழுந்து நின்றான். பிறகு ஆட்கொள்ள வந்தவரிடம் அவன் இயம்பியதாவது:''ஐயனே! எனக்கு இங்கு இனி வேலை இல்லை. புறப் பட்டுப்போவோம்.'' இவ்வரலாற்றைக் கேட்டு வந்த அனைவரும் திகைத்துப்போயினர். இது போன்ற மற்றொரு நிகழ்ச்சி நேர்வதாயிற்று. சிஷ்யன் ஒருவன் தன் குருவிடம் இயம்பிய தாவது: ''ஐயனே! என் மனைவி என்னை ஆழ்ந்து நேசிக்கிறாள். நாங்கள் இருவரும் உடலில் இரண்டு; மனதில் ஒன்றுபட்டிருக் கிறோம். அத்தகைய அரிய நிலையிலுள்ள நான் உலகத்தைத் துறக்கவேண்டிய அவசியமில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.'' அந்த சிஷ்யன் ஹடயோகம் பழகி வந்தான். உட லைப் பண்படுத்துவது அந்த யோகத்தின் குறிக்கோள் ஆகும். குருவானவர் அந்தச் சிஷ்ய னுக்கு வெவ்வேறு அரிய பெரிய யோக முறை களையெல்லாம் புகட்டி வந்தார். அவைகளுக் கிடையில் அந்தச் சிஷ்யனுடைய மனைவியின் மனப்பான்மையை வெளிப்படுத்துதற்கேற்ற முறை ஒன்றையும் கையாண்டார். ஒருநாள் அந் தச் சிஷ்யனுடைய வீட்டில் அடித்துப்புடைத் துக்கொண்டு அழுகின்ற குரல் நாலாபக்கமும் பரவியது. உடனே நாலாபக்கமும் இருந்து அண்டைவீட்டுக்காரர்கள் ஆங்கு ஓடிவந்தார் கள். அவர்கள் கண்டது ஒரு விபரீதமான காட்சியாகும். ஹடயோகம் பழகிவந்த அந்த வீட்டுக்காரன் மாரடைப்பால் மாண்டுகிடந் தான். அது மட்டுமன்று; அவனுடைய உடல் கை கால்களை நீட்டிக்கொண்டு கிடந்தது. அவைகளை மடக்க யாருக்கும் சாத்தியப்பட வில்லை. மனைவியோ தரையில் விழுந்து கண் ணீரும் கம்பலையுமாக அழுது புரள்வாளாயி னள். ''எனக்கும் இக்கதி வந்து நேருமா? என் பிராண நாதா, என்னுடைய பிற்கால வாழ் வுக்கு ஒன்றும் சேமித்துவைக்காது திடீரென்று மாண்டு போனீரே! இத்தகைய பரிதாபகர மான நிலை ஒரு நொடிப்பொழுதில் எனக்கு வந்தமையும் என்று நான் எதிர்பார்க்க வில்லையே?'' என்று புலம்பினள்.

இதற்கிடையில் செத்துக்கிடந்த பிணத்தை வெளிப்படுத்துதல் பொருட்டு உற்றார், உற வினர்கள் எல்லாரும் ஒன்றுகூடிக் கட்டில் ஒன்று கொண்டுவந்தார்கள். ஆனால் அவர் கள் எண்ணியபடி அப்பிரேதத்தை வெளிப் படுத்தமுடியாத இக்கட்டு ஒன்று நேர்ந்திருப் பதை அவர்கள் கண்டார்கள். சரீரமோ கைகளையும் கால்களையும் நாலாபக்கமும் நீட்

டிக்கொண்டு விறைத்துக் கிடந்தது. ஆதலால் வாயில் வழியாக அதை வெளியில் எடுத்துச் செல்ல அவர்களுக்கு இயலவில்லை. அதை வெளிப்படுத்த முயன்றவர்களில் ஒருவன் ஓடிப்போய் கோடரி ஒன்று கொண்டு வந்து கதவைத் தாங்கிப்பிடித்திருந்த நிலையை வெட்ட ஆரம்பித்தான். கோடரியின் சப்தம் கிளம்பியபொழுது மனைவியானவள் கதறிப் பதறி அழுதுகொண்டிருந்தாள். வாயிலண்டை அவள் ஓடிவந்தாள். அதை வெட்டிக்கொண்டிருந்தவரிடம் அழுதுகொண்டே அவள் செய்த ஆட்சேபமாவது: "ஆ! என்ன செய்கின்றீர்கள்?" "இப்பிரேதத்தை வெளிப்படுத்துவது சாத்தியமன்று. ஆகையினால் கதவு வாயிலை நாங்கள் வெட்டுகிறோம்" என்றான் அவன். கண்ணீர் சிந்திக்கொண்டே அவள் "தயவுசெய்து இந்த வேலையில் இறங்கவேண்டாம். நானோ இப்பொழுது கைம்பெண்ணாகி விட்டேன். என்னைக் காப்பாற்றுவதற்கு யாரும் இல்லை. என் கணவன் விட்டுச்சென்ற இக்குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பு என் தலையில் வீழ்ந்திருக்கிறது. இவ்வாயிலை நீங்கள் வெட்டிப் பாழ்படுத்தினால், அதற்கு ஈடுசெய்ய எனக்கு இயலாது. நான் பரம ஏழையாகிவிட்டேன். நண்பர்காள், சாவைத் தவிர்க்க யாருக்குமே இயலாது. முன்னெச்சரிக்கையின்றி மனைவியையும் மக்களையும் விட்டுப் பிரிந்துபோன என் கணவன் இனித் திரும்பி வரப்போவதில்லை. எனவே, கதவு வாயிலைப் பாழ்படுத்துவதற்குப் பதிலாக இனிச் சுட்டுச் சாம்பலாக்கப்போகின்ற இப்பிரேதத்தின் கைகளையோ கால்களையோ துண்டித்து அதை வெளியே கொண்டுவர முயலுங்கள்" என்று முறையிட்டாள். அவள் தனக்கேற்பட்ட நெருக்கடியை எடுத்து இயம்பிய உடனே செத்துப்போனவன் போன்று கிடந்த ஹடயோகி திடீரென்று எழுந்து நின்றான். அவன் அருந்தியிருந்த மருந்தின் வேகம் தணிந்து போயிற்று. ஆகையினால்தான் தூங்கி எழுந்திருப்பது போன்று அவன் எழுந்து நின்றான். அப்படி நின்றவன் மனைவியிடம் இயம்பியதாவது: "அடி படுபாவியே! என் கைகளையும் கால்களையும் துண்டிக்க நீ துணிந்தாய்! இதுதான் நீ என்மீது கொண்டுள்ள வாஞ்சையா?" இப்படி இயம்பிவிட்டு மனைவி மக்கள் வீடுவாசல் ஆகிய அனைத்தையும் துறந்தவனாய் அந்த ஹடயோகி கிளம்பிப் போய்விட்டான்.

பெண்பாலர்கள் சிலர் தாங்கள் புலம்பி அழவேண்டிய நெருக்கடி நேர்வதை முன்னதாகவே யூகிக்கின்றனர். அவர்கள் மூக்குத்தியையும் காதணிகளையும் கழற்றி எடுத்துப் பெட்டியில் பத்திரமாக வைத்து விடுகின்றனர். அதன் பிறகு தரையில் வீழ்ந்து அழுகின்றனர். செத்துப்போன தமது உற்றார் உறவினர்களைக் குறித்துப் பாசாங்காக அழுகின்றனர். சில நாட்களுக்குப் பிறகு பெட்டியில் பத்திரமாக வைத்த அவைகளையெல்லாம் மீண்டும் எடுத்து மாட்டிக்கொள்கின்றனர். அன்னவர்கள் உடலை அலங்கரிக்கும் விஷயத்தில் மீண்டும் கண்ணுங்கருத்துமாய் இருக்கின்றனர்."

நரேந்திரர்: "தக்க ஆதாரம் இல்லாவிட்டால் ஈசன் மானுட வடிவெடுத்து அவதரிக்கிறார் என்பதை நான் எப்படி நம்புவது?"

கிரீஷ் சந்திரகோஷர்: "கடவுள் மனிதனாக அவதரித்து வருகிறார் என்பதில் மனிதன் விசுவாசம் வைக்கவேண்டும். கண் எதிரில் தென்படும் அப்பொருள்கள் இங்கே இருக்கின்றன என்பதற்குப் பிரமாணம் யாது? அவைகள் இங்கே இருக்கின்றன என்று நாம் நம்புவதே அதற்கு அத்தாட்சி அல்லது பிரமாணமாகிறது."

ஒரு பக்தர்: "தத்துவ ஞானிகள் நமக்குப் புலப்படும் உலகம் நம்முடைய மனப்பான்மைக்கப்பால் இருக்கின்றது என்பதை எப்பொழுதாவது நிரூபித்துக் காட்டியிருக்கிறார்களா? அவர்கள் கூறுவது யுக்திக்குத்தான் ஏற்புடையதாகிறது. ஆயினும் அது இருக்கின்றது என்பதன் மீது மனிதன் உறுதியான நம்பிக்கை வைத்திருப்பதே அது இருப்பதற்கு அத்தாட்சியாகிறது."

கிரீஷ்சந்திரகோஷர் நரேந்திரரிடம் பகர்ந்ததாவது: "கடவுள் தாமே வந்து மானுட வடிவெடுத்து வரும் வல்லமை தமக்கு இருக்கிறது என்று சொன்னால் நீ நம்பமாட்டாய். அப்படிப் பகர்கின்ற பேர்வழி ஆஷாடபூதி என்றும் பொய் வேஷக்காரன் என்றும் நீ ஆக்ஷேபணை செய்வாய்."


# எந்நாள் கண்ணி

( தாயுமானவர் இயற்றியது )


**11-4 சூத்திரமெய்ப் புற்றகத்துக் குண்டலிப்பாம்பு [ஒன்று ஆட்டும்**
**சித்தனைஎன் கண்ணால் தெரிசிப்பது எந்நாளோ.**

சூத்திரம்-இயற்கை. சித்தன்-சிவன்.

சிவசக்தியின் சேர்க்கையால் பிரபஞ்சம் முழுதும் வடிவெடுத்துள்ளது. அத்தகைய பிரபஞ்சத்தை ஆராய்ந்துபார்த்தால் அதில் ஓர் அதிசயம் தென்படும். அதில் நலன், கேடு ஆகிய இரண்டும் வேண்டியவாறு வடிவெடுத்திருக்கின்றன. மேற்போக்காக ஆராயுமிடத்துத் தீமையின் ஆதிக்கமே முன்னிலையில் வந்து நிற்கிறது. இயற்கையை எக்கோணத்தில் எக்காலத்தில் பார்த்தாலும் அதனிடத்துக் கேடே பெரிதும் தென்படுகிறது. அத்தகைய இயற்கையின் ஒரு சிறிய அம்சமாக மானுட சரீரம் அமைந்திருக்கிறது. சரீர வாழ்க்கையில் அமைந்துள்ள சிறப்புக்கள் மிக மிகச் சில. சீர்கேடே அதிகமாக வடிவெடுத்திருக்கிறது. அடிக்கடி நோய்வாய்ப்படுவது, கோபதாபத்துக்கு அடிமையாவது, எடுத்த முயற்சிகளில் பெரும்பாலும் தோல்வியடைவது சரீர வாழ்க்கையின் நிகழ்ச்சிகளாக வந்தமைந்துள்ளன. இவை யாவும் சக்தியின் விளையாட்டேயாம். இத்தகைய கேடுகளுக்கிடையில் மனிதன் உயிர் வாழ்க்கையில் தாக்குப் பிடித்திருப்பதுதான் அதிசயம் என்று நவீன மருத்துவ நூல் பகர்கின்றது. இத்தகைய குறைநிலையை நிறைநிலையாக மாற்றியமைக்கச் சிவசக்திக்கு வல்லமை இல்லையா? என்னும் கேள்வி எழலாம். கேடே அதிகமாக நிறைந்துள்ள இவ்வையக வாழ்வை இறைவன் ஏன் அமைத்து வைத்துள்ளான் என்னும் கேள்வி எழக்கூடும். இத்தகைய கேள்விகள் ஆராய்ச்சியாளர்களிடையே இடையறாது எழுந்துகொண்டுமிருக்கின்றன. ஆனால் இவைகளுக்குப் பொருத்தமான விடை காண்பதும் அரிதாம். ஆகையினால் ஆத்ம சாதகன் ஒருவன் வீணிலே இத்தகைய ஆராய்ச்சி பண்ணுவதற்குப் பதிலாக இயற்கையின் பாங்கை உள்ளபடி ஏற்றுக் கொள்ளுதல்தான் முறை. வனத்தில் ஏன் முட்கள் தரையில் இவ்வளவு அதிகமாக விழ்ந்து கிடக்கின்றன என்னும் கேள்விக்கு நிகர் உலகின்கண் அமைந்துள்ள கேடுகளை ஆராய்தல். மனிதனுக்கு வாழ்க்கையில் அமைந்துள்ள குறிக்கோள் முள் நிறைந்துள்ள வனாந்தரத்தைத் தாண்டி அப்பால் போவதாம். அப்படிப் போவதற்குத் தரையில் கிடக்கும் முட்களை எல்லாம் அப்புறப்படுத்துவது ஒரு முறை. காலுக்குப் பாதரக்ஷை அணிந்து கொள்வது மற்றொரு முறை. முதல் முறையைக் கையாள மனிதனுக்கு இயலாது. இரண்டாவது முறையோ கையாளுதற்கு எளிது. அதன்படி நடந்து கொள்ளுதலே அறிவாளி ஒருவன் கடமையாகும். உலகின்கண் உள்ள குறைநிலைகளைப் பற்றிப் பலர்பேசவும் எழுதவும் செய்துவருகின்றனர். அதனால் பலன் ஏதும் வாய்ப்பதில்லை. தீமையைச் சகித்தல் என்னும் சாதனத்தைக் கையாண்டு அமைதியாக இவ்வையக வாழ்வை விட்டு வெளியேகுதல் வேண்டும். அதன் பொருட்டுச் சாதகன் இவ்வுலகின் அமைப்பைச் சிறிது மறந்து பழகவேண்டும். இதை அமைத்துள்ள இறைவன்பால் கருத்து மிகச் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்துதற்கேற்ப அவன் கண்ணுக்குத் தென்படும் காட்சி சிறிது சிறிதாக மாறி அமைகிறது. 'தீங்கு மிக நிறைந்தது இத்தரணியின் அமைப்பு' என்னும் கோட்பாடு ஒரு கோணத்தில் காணுமிடத்து உண்மையே. இறைவனிடத்துக் கருத்தைச் செலுத்தி அவன் நன்றுடையான், தீது இலான் என்னும் மனப்பான்மையைச் சாதகன் கையாண்டுவந்தால் அவன் அதிவிரைவில் முன்னேற்றம் அடைகிறான். இத்தகைய இரண்டாம் முறையையே சான்றோர்கள் அனைவரும் கையாண்டிருக்கின்றனர். அதன் விளைவாக அவர்கள் காட்சியினின்று உலகின்கண் உள்ள கேடுகள் யாவும் படிப்படியாக மறைந்து பட்டுப் போயின. ஆகையினால் ஆத்ம சாதகன் கையாளவேண்டிய முறையைச் சுருக்கமாக இங்ஙனம் அமைத்துக் கொள்ளலாம்: 'கேடுகள் நிறைந்துள்ள உலக வாழ்க்கையைப் பற்றியே எண்ணி எண்ணி மனம் புண்படாதே.



कर्मण्यकर्म यः पश्येदकर्मणि च कर्म यः । स बुद्धिमान्मनुष्येषु स युक्तः कृत्स्नकर्मकृत् ॥



அதில் உனக்கு வந்து அமையும் கேடுகளைச் சகித்துப் பழகுகின்ற அளவு நீ மன உறுதி பெறுகின்ருய். உறுதியான மனதைக் கொண்டு ஆத்ம சாதனங்கள் பயின்று வா. இறைவனிடம் உன் மனதை முழுதும் செலுத்திப் பழகு.' இங்ஙனம் பயிலுவதே பிரபஞ்ச வாழ்வைக் கடந்து துன்பத்துக்கெல்லாம் அப்பால் இருக்கின்ற பாரமார்த்திகப் பெருவாழ்வைப் பெறுவதற்கு உற்ற உபாயமாகும் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

11–5 அந்தரத்தே நின்றுஆடும் ஆனந்தக்
[கூத்தனுக்கு என்
சிந்தை திறைகொடுத்துச் சேவிப்பது
[எந்நாளோ.

ற கொடுத்தல்–அன்புடன் தெய்வத்துக் டைத்தல்.

இவ்வுலகம் வேறு, தெய்வம் வேறு அன்று. ர்க்கின்றவனுடைய மனபரிபாகத்துக்கேற்ப வுலகம் புலப்படுகிறது. கெட்ட மனம் டயவனுக்கு இவ்வுலகம் கேடு நிறைந்த ரகமாகக் காட்சி தருகிறது. நலத்தில் நிலை பெற்றிருப்பவனுக்கு இவ்வுலகம் முற்றிலும் மங்களகரமானது. பின்பு, சாதகன் ஒருவன் மனபரிபாகம் அடைந்து வரவர அவனுக்கு இவ்வுலகமே தெய்விகம் நிறைந்ததாகத் திகழ்கிறது. இதை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவர் இன்பமாளிகை என்று கூறினர். முற்றிலும் மனபரிபாகம் அடைந்திருப்பவனுக்கு இதன் காட்சி அற்புதமானது.

பூமியிலே சமதரையில் இருப்பவனுக்கு நிலவுலகம் மேடு பள்ளம் உடையதாகக் காட்சி தருகிறது. ஆனல் அவன் ஒரு மலையின்மீது ற ஏற மேடு, பள்ளமெல்லாம் மறைந்துபட் போகின்றன. தரையில் நின்றுகொண் ருந்தபொழுது மரங்கள் சில வானளாவச் சங்குத்தாக வளர்ந்திருப்பதைப் பார்க்கிருன். ன் காலின் கீழ் உள்ள புல்லையும் பார்க்கின் ன. பின் மலைமீது ஏற ஏற, புல்லும் செங்குத்தாய் வளர்ந்த மரமும் ஒரே ஒப்பமான காட்சியைத் தருகின்றன. மலை உச்சிக்குப் போயானபிறகு இவ்வையகம் வேறொரு காட்சி தருகிறது. எங்குத் திரும்பிப் பார்த்தாலும் ஒரே வெட்டவெளியாகத் தென்படுகிறது. அதே பாங்கில் மனபரிபாகம் அடைந்திருப்பவனுக்கு அகம், புறம் என்னுதபடி ஒரே அறி ' பெருவெளியாக இது தென்படுகிறது. அதில் சாதகன் மேலும் கருத்தைச் செலுத்துகின்றபொழுது ஆனந்தம் அதன்கண் பொங்கித் ததும்பிக்கொண்டிருப்பதைக் காண்கிருன். அந்நிலையில் அது சிதாகாசம் அல்லது சிதம்பரம் எனப் பகரப்பெறுகிறது. அத்தகைய அரிய பெரிய காட்சி எல்லார்க்கும் வாய்ப்பதன்று. உவகையோடு மனதைப் பரத்தினிடத்தே ஒப்படைக்கின்றவனுக்கு அல்லது திறை செலுத்துகின்றவனுக்கு அக்காட்சி சாத்தியமாகிறது. திறை செலுத்துதல் என்பது அரசனுக்குக் குடிமக்கள் கப்பம் கட்டுவது போன்றதன்று. அவர்கள் கப்பங்கட்டுதலில் மனமகிழ்வும் மனக்கசப்பும் அடைவதுண்டு. ஆனல் இறைவனுக்குச் செலுத்தும் திறையோ உள்ளன்போடு கூடியது. அது தியாகத்தின் சிகரமாகிறது. மானுட ஜன்மத்தின் முடிவான நிலை அதுவேயாம். பிரபஞ்சத்திலுள்ள காலமெல்லாம் நான், எனது என்னும் செருக்கைக் காப்பாற்றி வந்துள்ள ஒரு ஜீவாத்மா இப்பொழுது உவகையுடன் அவையிரண்டும் தனக்கு உரியன அல்ல, பரமனுக்குரியவை என்று அவனுக்கே உரியவைகளாக்கிவிடுகின்ருன். நான், எனது என்ற இரண்டையும் பரமனுக்கு உரியனவாக்குகின்றவளவு ஜீவன் பெருநிலையடைகின்ருன். பெருநிலையடையும் பொழுதுதான் ஜீவனுக்குப் பேரானந்தம் உண்டாகிறது

பொருள் ஒன்று, அது தருகிற காட்சி பலப்பல. அவரவர் மனப்பான்மைக் கேற்ற காட்சியை அந்த ஒரே பொருளிடத்து மக்கள் காண்கின்றனர். யாண்டும் சிதாகாசமாயிருந்து ஆனந்தத் தாண்டவம் ஆடிக்கொண்டிருப்பதே அதன் நிஜநிலையாகும். அந்த ஆனந்தத் தாண்டவத்தில் நானும் கலந்து கொள்ளும் பேறு பெறுவேனுக. அத்தகைய அரியபெரிய காட்சிக்கு என் உள்ளத்தை உவகையுடன் பறிகொடுப்பேனுக. அங்ஙனம் உள்ளத்தை அக்காட்சியில் பறிகொடுப்பதன் விளைவாக வருகிற பேரானந்தம் அதிவிரைவில் எனக்கும் சொந்தமாகவேண்டும் என்பது இக்கண்ணியின் பொருளாகும்.

# தன்னலமற்றுப் பணிசெய்யுங்கள்

( சுவாமி விவேகானந்தர் )

கிராமங்கள் தோறும் செல்லுங்கள். கிராம மக்களுக்கு நலம் செய்யுங்கள். கிராமங்களுக்கு நலன் செய்வதன் வாயிலாக உலகுக்கே நலன் செய்ய முற்படுங்கள். மற்றவர்கள் முக்தி அடைவதற்காக நீங்கள் நரகம் செல்லவும் ஆயத்தமாய் இருங்கள். மரணம் வருவதைத் தடுக்க முடியாது என்ருல் வீர மரணம் அடைய வேண்டும். கல்லைப் போலவும், கட்டையைப் போலவும் இருந்து மடிவதைவிட வீரனுக மடிவது உயர்வு அல்லவா? வாழ்வு பயன்பட்டு அழியவேண்டும். கத்தி துருப்பிடித்து அழிந்து போவதைவிட தேய்ந்து அழிந்து போவது மேலானது அன்ருே? அங்ஙனம் நம் வாழ்வு பிறருக்குச் சிறிது நலனுவது செய்து அழிந்து போவது மேல்.

சுயநலமற்ற பணியில் ஈடுபடுங்கள். அளப்பரிய சக்தி உங்களுக்கு வரும். சுயநலமற்ற பணியில்ஈடுபடுமளவு உங்கள் தேவைக்கு மேல் உங்களுக்குச் சக்தி வருவதை உணர்வீர்கள். பிறருக்காகச் செய்யும் சிறிய பணியும் நம் உள்ளத்தில் உள்ளசக்தியைத் தட்டி எழுப்புகிறது. பிறருடைய நன்மையைக் குறித்து நினைக்கும் பொழுதே நம் இதயத்தில் சிங்கத்துக்கு நிகரான பலம் வருகிறது. உங்கள் எல்லாரையும் நான் நேசிக்கிறேன். நீங்கள் அனைவரும் பிறருக்காக உழைத்து அப்பணியில் உயிர் விடுவதை நான் விரும்புகிறேன்.

சுயநல நோக்கமில்லாமல் பயன் கருதாப் பணிவிடை செய்பவன் சிறந்த செயல் செய்பவன் ஆகின்ருன். பணத்துக்காகவோ, புகழுக்காகவோ, வேறு எதற்காகவோ பணி செய்யாது, பிறருக்கு நலன் செய்யவேண்டும் என்பதற்காகப் பணி செய்பவன் புத்தனுவான். அத்தகையவனிடமிருந்து வெளி வரும் சக்தி உலகத்தையே மாற்றி அமைக்கக்கூடிய செயலைச் செய்கிறது.

அன்பு வெற்றி அடைகிறது. உன் சகோதரர்களாக விளங்கும் மக்களை நீ நேசிக்கின்ருயா? ஏழைகளிடத்தும், துன்பப்படுவோரிடத்தும், பலவீனர்களிடத்தும் தெய்வத்தைக் காணுதவன் வேறு எங்கே சென்று காணமுடியும்? அத்தகைய மக்களைத் தெய்வங்களாகப் பாவித்து அவர்களை வழிபடாதவன் தெய்வத்தை எங்ஙனம் வழிபடமுடியும்? அவர்களை முதலில் வழிபடக் கற்றுக்கொள்ளுங்கள். கங்கைக்கரையில் இருந்துகொண்டு யாராவது நீருக்காகக் கிணறு வெட்டுவார்களா? மக்களுக்குச் செய்யும் பணி மகேசுவரனுக்குச் செய்யும் பணி என்பதை நம்புங்கள். அவ்வன்புப் பணியில் சர்வசக்தியும் அடங்கியிருக்கிறது.

தெய்வப் பணிவிடை செய்ய வாய்ப்புப் பெற்றவர்கள் பாக்கியவான்கள். தெய்வத்துக்குத் தொண்டு செய்ய வேண்டுமேயன்றி தெய்வத்துக்கு உதவி செய்ய முடியாது. உதவி செய்கின்ருேம் என்ற எண்ணத்தையே மனதைவிட்டு அகற்றிவிடுங்கள். நீங்கள் யாருக்கும் உதவி செய்ய முடியாது. உதவி செய்வதாக நினைப்பதன் மூலம் நீங்கள் உங்களையே ஏமாற்றிக்கொள்கிறீர்கள். மக்களுக்குச் செய்யும் பணிவிடையைத் தெய்வத்துக்குச் செய்வதாக எண்ணி அதை வழிபாடாகச் செய்யுங்கள். ஏழை எளியவர்களிடம் தெய்வத்தைக் கண்டு பழகுங்கள். உங்களுடைய முக்தியின்பொருட்டு அவர்களுக்குப் பணிவிடை செய்யுங்கள். ஏழை எளியவர்கள் உங்களுக்கு நல்ல வாய்ப்பைக் கொடுத்திருக்கிருர்கள். அவர்களுக்குப் பணிவிடை செய்வதன் மூலம் தெய்வத்துக்கு நாம் பணிவிடை செய்கின்ருேம். நோயாளி, பைத்தியக்காரன், குஷ்டரோகி, பாவி ஆகியவர்களின் வடிவங்களில் இறைவன் தோன்றி நமக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பை அளிக்கின்ருர்.

உன்னை மறந்து பழகு. இதை முதலில் நீ கற்றுக்கொள். நீ தெய்வ நம்பிக்கை உடையவனுக இருந்தாலும் சரி, நாத்திகனுக இருந்தாலும் சரி, உன்னை மறந்து பழகுகின்ற செயலைச் செய். சமுதாய நலனுக்காக உன்னுடைய சுகத்தை, விருப்பத்தைத் தியாகம் செய்து பழகுகிறபொழுது நீ ஒரு புத்தனுக மாறி அமைகின்ருய். அப்பொழுது உன்னை எதுவும் கட்டுப்படுத்த முடியாது. நீ சுதந்திர புருஷனுகத் திகழ்வாய்.

# பராசக்தியின் மகிமை

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1983ல் திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் நவராத்திரி விழா அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[ *114* ஆம் பக்கத் தொடர்ச்சி ]

மனிதன் எல்லாவிதமான சூழ்நிலைகளுக்கும் பொருந்தியவனுக அமைந்திருக்கின்றுன். அவன் நீரில் நீந்த முடியும்; வானில் பறக்க முடியும். மனிதன் தன் அறிவைப் பெருக்கிக் கொண்டு வருகின்றுன். ஆனுல் அவன் நிம்மதியும், ஆனந்தமும் அடையப்பெற்றிருக்கிருனு என்ருல் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நவீன மனிதனுக்கு ஐம்பூதங்களைக் கட்டி ஆளத்தெரியும். விஞ்ஞானத்தின் மூலம் அவன் அதை ஒருவாறு சாதித்திருக்கின்றுன். கடலில் நெடுந்தூரம் பயணம் செய்வதற்குக் கப்பலைப் பயன்படுத்துகின்றுன். நீருக்குள் செல்வதற்கு நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டு பிடித்திருக்கின்றுன். வானத்தில் பறந்து செல்வதற்கும் கருவி கண்டு பிடித்திருக்கின்றுன். இவ்வாறு மனிதனுக்குச் செய்ய சாத்தியம் என்றுலும் அவன் பூரணமாக இன்பத்தைப் பெறவில்லை.

ஒவ்வொரு உயிரும் இன்பத்தைப் பெற வேண்டுமென்று படாதபாடுபட்டு வருகின்றது. இப்பிரபஞ்சத்தில் துன்பம் கலவாத இன்பம் இல்லை. இது இப்பிரபஞ்சத்தைப் பற்றிய உண்மை. கடவுள் ஏன் துன்பத்தைப் படைத்தார் என்று கேட்பவர்கள் இருக்கின்றுர்கள். பசி என்ற துன்பம் இல்லாவிட்டால் புசிப்பதில் இன்பம் இல்லை. பசி ஏற்படாவிட்டால் நமக்குப் பிணி ஏற்பட்டு விட்டது என்கின்ருேம். மனிதனும், மற்ற எல்லா உயிர்களும் துன்பம் கலவாத இன்பத்தைத்தான் நாடுகின்றன. ஆனுல் மனிதன் மட்டுமே அதைப் பெற முடியும்; மற்ற உயிர்கள் துன்பம் கலவாத இன்பத்தைப் பெற முடியாது. மனிதன் உண்மையை அறிகின்ற அளவு துன்பம் கலவாத இன்பத்தைப் பெற முடியும்.

'எப்பொருள் எத்தன்மைத்தாயினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்பது கோட்பாடு. பிரபஞ்சமாக விளங்கிக் கொண்டிருப்பவள் பராசக்தி; அதே பராசக்தி சிவ சொரூபமாகவும் இருக்கின்றுள். இயற்கைத் தாயிடம் சரியான இணக்கம் வைப்பதற்குச் சமயம் நமக்குத் துணைபுரிகின்றது. நாம் சமயத்தை முறையாகக் கையாளுவதன் மூலம் இயற்கையை வெல்லுகின்ருேம். பணம் சம்பாதிப்பதற்கு எல்லாரும் முயல்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்கின்ற முயற்சிக்கு ஏற்றவாறு பணமும் வந்து அமைகின்றது. சம்பாதித்த பணத்தைச் செலவு செய்கின்றபோது தங்கள் பரிபாகத்தை விளக்கிக் காட்டுகின்றுர்கள். பணத்தைச் செலவழிப்பதன் மூலம் துன்பத்தைப் பெறுகின்றுர்கள். மனிதன் இன்பத்தை நாடினுலும், அவன் துன்பத்தைப் பெற்று வருகின்றுன் என்ருல் அவனிடத்துள்ள அறியாமையே அதற்குக் காரணம் ஆகும்.

சமய அனுஷ்டானம் என்பது உண்மையை உள்ளபடி அறிவதாகும். உண்மையை அறிகின்ற அளவு துன்பத்தைத் தவிர்க்கலாம். உண்மையை அறிவதற்குச் சமயம் துணைபுரிகிறது. துன்பத்தைத் துடைத்துத்தள்ள எல்லா உயிர்களும் முயல்கின்றன. அம்முயற்சியில் மனிதன் மட்டுமே வெற்றி அடைகின்றுன்; மற்ற உயிர்கள் ஏகதேசம் வெற்றி அடைகின்றன. மனிதன் மட்டும் பூரண வெற்றி அடைகின்றுன். பிரபஞ்சத்தைக் கடந்து அப்பால் செல்லுவது மனிதனுக்குச் சாத்தியம். பிரபஞ்சத்தைக் கடந்து அப்பால் செல்லும்போதுதான் துன்பத்தைத் துடைப்பதில் வெற்றி கிடைக்கின்றது.

ஸ்ரீ மாதா என்பது அம்பிகையினுடைய நாமங்களில் ஒன்று. அம்பிகையினிடத்தில் தாய் இணக்கம் கொள்ளவேண்டும். தாய் இணக்கம் வைத்து அன்பைப்பெருக்க வேண்டும். அம்பிகையினிடத்தில் பக்தியைப் பெருக்கிக்கொண்டே போகப் போக நம்மிடத்துள்ள குறைநிலை நிறைநிலையாக மாறி அமைகின்றது. மனிதன் தன்னைத் திருத்தி அமைக்க அமைக்க அம்பிகையோடு அவன் கொள்ளுகின்ற இணக்கம் மேலானதாக மாறி அமைகின்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வாழ்க்கையை

எடுத்துக்கொள்வோம். சாதாரண ஜீவனுகத் தம் வாழ்க்கையைத் துவக்கினர். அன்னை பராசக்தியோடு இணக்கம் வைத்தார். தம்மைச் சேயாகவும், அன்னை பராசக்தியைத் தாயாகவும் பாவித்துப் பக்தி செலுத்திவந்தார். அவ்விணக்கத்தின்மூலம் அவருடைய மனது திருந்தி அமைந்தது. அம்பிகையோடு வைத்த இணக்கம் பேரிணக்கமாக அமைந்தது. அவ்விணக்கத்தின்மூலம் பேரறிவு படைத்தவராக அவர் மாறிவந்தார். அவர் போன்று அம்பிகையினிடத்தில் நாம் இணக்கம் வைக்கத் தெரிந்துகொண்டால் வாழ்வாங்கு வாழத் தெரிந்தவர்வர்கள் ஆகின்ஞேம்.

நாம் மானுடராகப் பிறந்திருப்பது கடவுள் வழிபாட்டுக்கே என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். அப்படிப் பகர்ந்ததற்கு ஏற்ப அவர் தாமே வாழ்ந்தும் காட்டியுள்ளார். பாரமார்த்திக வாழ்வில் நாம் வெற்றி அடையலாம் என்பதற்கு அவருடைய வாழ்வே சான்ருக அமைகின்றது. மக்களுள் பெரும்பாலோர் பெயரளவில்தான் கடவுள் வழிபாடு செய்து வருகின்றனர். உண்மையான கடவுள் வழிபாடு மக்கள் செய்வதில்லை.

மனிதன் புலனடக்கம் பழகுகின்ற அளவு புனிதவான் ஆகின்ருன். மனம் போன போக்கில் போகவேண்டாம் என்பது கோட்பாடு. மனம் சிறு நெறி சென்று துன்பத்தைத் தேடிக்கொள்கின்றது. அறியாமையினல் குழந்தை தீயைத் தொட முயல்கின்றது. அது ஒரு முறை தீயைத் தொட்டு சூடுபட்டுவிட்டால் பிறகு அது தீயைத் தொடாது. அறியாமையினல் குழந்தை தீயைத் தொடுவது போன்று உயிர்களிடத்தில் நிகழ்கின்ற செயல்கள் அறியாமையினல் நிகழ்கின்றன. உண்மையை அறிந்து செயல்பட்டால் திருந்தி அமைகின்ற வாய்ப்புக் கிடைக்கின்றது. உண்மையை அறிந்து செயல்படுகின்றபொழுது நாம் யோக மார்க்கத்தில் செல்பவர்கள் ஆகின்ஞேம். இன்பத்தை நாடித் துன்பத்தைப் பெறுகின்ற பொழுது உயிர்கள் சென்ற மார்க்கம் போக மார்க்கம் ஆகின்றது. மனிதன் தன்னிடத்துள்ள அறியாமையினல் தனக்குத் தானே உபத்திரவத்தைத் தேடிக்கொள்கின்ருன். அறியாமையினல் காலமெல்லாம் துன்பப்பட்டுக்கொண்டிருப்பது ரோகமாகும். இன்பத்தை நாடி ஓரளவு அதில் வெற்றிபெறுதல் போகமாகும். யாண்டும் இன்புற்றிருத்தல் யோகமாகும். மனிதன் யோக வாழ்வு வாழக் கடமைப்பட்டிருக்கின்ருன்.

மனிதன் உண்மையான சமய வாழ்வைப் பின்பற்றுகிறபொழுது அவன் யோகமார்க்கத்தில் செல்லுபவன் ஆகின்ருன். 'தஸ்மாத் யோகி பவார்ஜுன:' என்று கண்ணன் அர்ஜுனனை 'யோகி ஆவாயாக' என்று கூறுகின்ருர். அர்ஜுனன் மூலம் கண்ணன் உயிர்கள் அனைத்துக்கும் அச்செய்தியைத் தந்துள்ளார். 'நாம் மானுடராகப் பிறந்திருப்பது கடவுள் வழிபாடு செய்வதற்கேயாம்' என்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுகின்ருர். சான்ருேர்கள் தங்கள் வாழ்வில் அதை லட்சியமாகக் கொண்டிருந்தார்கள். நல்வாழ்க்கையில் ஈடுபட்டு ஐம்பொறிகளை வெல்லுகின்ற பொழுது நாம் யோக வாழ்வு வாழ்பவர்கள் ஆகின்ருேம். ஐம்பொறிகளை வெல்லுவது யோக மார்க்கமாகும். ஐம்பொறிகளுக்கு அடிமைப்பட்டு வாழ்வது பிரபஞ்ச வாழ்வு ஆகும்.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்ருர் நீடுவாழ் வார்" என்பது ஆன்ருேர் வாக்கு. பொறிகளை வெல்லுகின்ற அளவு துயரத்தை வெல்லுகின்ருன். துயரத்தை வெல்லுவதற்கு முதலில் தன் மனதை வெல்லவேண்டும். மனது ஐம்பொறிகளின் மூலம் சிறு நெறிநின்று கேட்டை விளைவிக்காமல் மனிதன் பார்த்துக்கொள்ள வேண்டும். 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கலாற்றின் எழுமையும் ஏமாப்புடைத்து' என்ற கோட்பாட்டின்படி ஆமை போன்று ஐம்பொறிகளையும் அடக்கத் தெரிந்தவன் வாழத்தெரிந்தவன் ஆகின்ருன். ஆமைக்கு நான்கு கால்களும் ஒரு தலையும் இருக்கின்றன. ஆபத்து வருகின்ற பொழுது ஆமை ஐந்து உறுப்புக்களையும் தன் ஓட்டுக்கு உள்ளே சுருக்கிக்கொள்கிறது. முதிர்ந்த ஆமையின் ஓடு யானையின் பாரத்தையும் தாங்க வல்லது. ஆமை தனக்கு ஆபத்து வருங்காலத்தில் தன் ஓட்டினுள் சென்று தன்னைக் காப்பாற்றிக்கொள்கிறது. அதுபோன்று மனிதன் தன் மனதை முற்றிலும் வென்று ஐம்பொறிகளை

அடக்க வல்லவன் ஆகின்றபொழுது அவன் யோகத்துக்குத் தகுந்தவன் ஆகின்ருன். அத்தகையவனே கடவுள் வழிபாடு செய்வதற்குத் தகுதியுடையவன்.

கடவுள் வழிபாடு யோகம் என்று பெயர் பெறுகின்றது. ஐம்பொறிகளை எவ்வளவுக்கெவ்வளவு நாம் வென்று வருகின்ருேமோ அவ்வளவுக் கவ்வளவு நம் வாழ்வு பெருவாழ்வாக மாறுகின்றது. ஐம்பொறிகளைக் கருவிகளாகக்கொண்டு நாம் உலகை அறிந்து வருகின்ருேம். ஐம்பொறிகளை அடக்கி ஆள ஆள மனம் தெளிவடைகின்றது. தெளிவடைந்த மனதில் சத்துவ குணம் ஓங்குகின்றது.

மனது என்பது ஓர் அதிசயமான சக்தி. தாவரங்களுக்கு மனம் வடிவெடுக்கவில்லை. ஜங்கமமான பிறகு மனம் வடிவெடுக்கிறது. மனித நிலைக்கு வருகிறபொழுது மனம் முழு வடிவெடுக்கின்றது. மனது மேல்நிலை அடைகின்ற அளவுதான் மனிதன் மேலோன் ஆகின்ருன். "வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு" என்பது குறள். தடாகத்தில் நீர்மட்டம் மேலே வரவர அத்தடாகத்திலுள்ள தாமரை மேலே வருகிறது. மனது பெரியது ஆகஆக மனிதனும் மேலோன் ஆகின்ருன். மனதை வெல்லாது, இந்திரியங்களை அடக்கி ஆளாது மனிதன் மேலோன் ஆகமுடியாது. ஐம்பொறிகளையும் அடக்கி ஆண்டுகொண்டுவரும்பொழுது மனம் தெளிவடைந்து ஞானத்துக்குத் தகுதியுடையதாகிறது. அம்பிகைக்கும், சிவனருக்கும் மூன்று கண்கள் இருக்கின்றன. ஆகையால் சிவனருக்குத் திரையம்பகன் என்றும், அம்பிகைக்குத் திரையம்பகி என்றும் பெயர்கள் அமைந்திருக்கின்றன. நமக்கு அமைந்துள்ள ஊனக்கண்கள் இரண்டும் உலகைக் காணப் பயன்படுகின்றன. ஞானக்கண் அமையுமிடத்து அது பரவஸ்துவைக் காணப் பயன்படுகின்றது. அந்த ஞர்னக்கண்ணை நெற்றிக்கண் என்று சொல்லுகின்ருேம். தெளிந்த மனதுதான் ஞானக் கண்ணை வடிவெடுக்கின்றது.

மனிதன் வாழ்வாங்கு வாழ்வானுனல் ஞானக் கண்ணைப் பெறுகின்ருன். அப்பொழுது அவன் தான் உடல் அல்லன் என்பதையும், தான் ஆத்மா என்பதையும் அறிகிருன். இதற்கு நிகரான பேறு இல்லை. சிருஷ்டியோடு நல்லிணக்கம் வைத்து அந்த நல்லிணக்கத்தின் மூலமாக நம்முடைய கீழான இயல்பை வெல்லுதல் வேண்டும். கீழான இயல்பை வெல்லுகின்ற அளவு பேரியல்பு வடிவெடுக்கின்றது. பேரியல்பு படைத்தவனுக்கு ஞானக்கண் ஏற்பட்டபின் 'தான் ஆத்ம சொரூபம்' என்பதை அறிய விரும்புகின்ருன். ஆத்ம சொரூபத்துக்கு அழிவில்லை என்பதையும், உடலுக்குத்தான் அழிவு என்பதையும் உணர்கிருன்.

நம் உடல் வாழ்க்கையை முறைதவறிக் கையாளுவதே நாம் அடையும் துன்பத்துக்குக் காரணமாகும். உடல் வாழ்க்கை குறைநிலையில் இருந்தாலும், ஞானிக்கு அது உபத்திரவமாக இருப்பதில்லை. 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்பது அப்பர் வாக்கு.

மனதை வென்றவனுக்கு, ஐம்பொறிகளை வென்றவனுக்குத் தெய்வபக்தி ஓங்குகின்றது. தெய்வபக்தி வளருகின்றபொழுது மனிதன் திருந்தி அமைகின்ருன். பக்திவச்யா என்றும் பக்தி ப்ரியா என்றும் அம்பிகை அழைக்கப்படுகின்ருள். பிரபஞ்சத்திலுள்ள எல்லா உயிர்களையும் நல்வழியில் நடாத்தி வருகின்ருள் என்பது அதன் பொருள். சத்யம் வத—தர்மம் சர; தர்மத்தை அனுஷ்டித்து வா, சத்தியத்தையே பேசு என்ற இரண்டு வாக்கியங்களில் இந்து மதம் முழுதும் அடங்கிவிடுகின்றது.

உடல் உறுதி அல்லது மனத்தெளிவு தர்மத்தின் விளைவாகும். எது சரீரத்தை வலுவுடையதாக்குகிறதோ அது தர்மம். எது மனதை உறுதி உடையதாகச் செய்கின்றதோ அது தர்மம். எது மனதைத் தளர்ச்சி அடையச் செய்கின்றதோ அது அதர்மம். இனி தர்மம் எது என்பதை நாமே அறிந்துகொள்ளலாம். எந்த எண்ணத்தின் மூலம் நாம் மேன்மையடைகின்ருேமோ, அது தர்மம். எந்த எண்ணத்தின் மூலம் நாம் கீழ்மையடைகின்ருேமோ அது அதர்மம். எந்தச் செயல் மூலம் நாம் மேன்மையடைகின்ருேமோ, அது தர்மம். எந்தச் செயல் மூலம் நாம் கீழ்மையடைகின்ருேமோ அது அதர்மம்.

எங்கும் நிறைபொருளாயிருக்கும் பரம்பொருள் நம்மிடத்து மனச்சாட்சியாக அமைந்

திருக்கின்ளுர். அவரைப் பராசக்தி என்றும் சொல்லலாம்; அப்பன் என்றும் சொல்லலாம்; பேரறிவு என்றும் சொல்லலாம். அவர் மனச் சாட்சியாக இருந்து நல்லது கெட்டதை நமக் குக் காட்டித் தந்துகொண்டிருக்கின்ளுர். அப் பொருளுக்கு மேலான குரு இல்லை. பராசக்தி யைச் சரண் புகுந்து பராசக்தியின் அருளை நாடியிருக்கின்றவர்களுக்கு நல்வழி தானே விளங்குகின்றது. பிறவியிலேயே ஞானியாகப் பிறந்த சுகப்பிரம்மத்தை உலக ஐதிகத்தை முன்னிட்டு அவருடைய தந்தை வியாசர் குருவி னுடைய அனுக்கிரகம் பெறுவதற்காக ஜனக மகாராஜனிடம் அனுப்பிவைத்தார். ஜனக மகாராஜா சுகரைப் பரீட்சை செய்து பார்த்து விட்டுத் தாம் அனுபூதி அடைந்திருப்பதும், சுகப்பிரம்மம் அடைந்திருப்பதும் சாசுவத மானது என்று உறுதி கூறினர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரும் குருவை நாடிப்போக வில்லை. அவர் அருளை நாடி நின்ளுர். அம்பிகை யினுடைய அருளைப் பெற்ளுர். அம்பிகையின் அருளால் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தேடிக் கொண்டு குருமார்கள் வந்தார்கள். அவர் தாந் திரிக சாதனம் பயில விரும்பினர். ஒரு நாள் ஓர் ஓடம் ஊர்ந்து தக்ஷிணேசுவரம் வந்து சேர்ந்தது. அவ் ஓடத்திலிருந்து பைரவி பிராம்மணி என்னும் சந்நியாசினி இறங்கி ஸ்ரீ ராமகிருஷ்ணர் இருந்த அறைக்குச் சென் ளுர். ஆங்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்த்து, "மகனே, உனக்காக நான் எங்கெல்லாம் தேடி அலைவது? உன் பெருமையை யார் அறிவார் கள்? உனக்குத் தாந்திரிகச் சாதனத்தைப் பற்றி உபதேசம் செய்வதற்கு என் உள்ளத் திலிருந்து ஏதோ ஒரு சக்தி உந்தித்தள்ள நான் உனைத் தேடிவந்துள்ளேன்" என்ளுர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அத்வைத சாதனை யைப் புகட்டுவதற்குத் தோதாபுரி என்ற மஹாபுருஷர் அவரைத் தேடிக்கொண்டு வந் தார். தோதாபுரி சங்கர மரபிலே வந்துள்ள தசநாமிகளுள் 'புரி' என்னும் பட்டம் தரித் துள்ள பிரிவைச் சார்ந்தவர். அவர் நர்மதை நதிக்கரை ஓரத்தில் நாற்பது ஆண்டுகள் கடுந் தவம் புரிந்து நிர்விகல்ப சமாதி அடைந்தவர். தெய்வ சக்தியால் தூண்டப்பட்டு அவர் ராம கிருஷ்ணரிடம் வந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண ரைப் பார்த்து "நீ முதிர்ந்த பக்குவம் அடைந் தவனுக இருக்கின்ளுய். உனக்கு அத்வைத சாதனை கற்றுக்கொடுக்க நான் வந்துள்ளேன். உனக்குச் சம்மதமா?" என்ளுர். ஸ்ரீ ராமகிருஷ் ணர் சந்நிதிக்குச் சென்று அம்பிகையினுடைய விருப்பத்தைத் தெரிந்துகொள்ள விரும்பினர். அன்னை பராசக்தி "பிள்ளாய்! அத்வைத வேதாந்தமும் கற்றுக்கொள். உனக்கு அதைப் புகட்டுவதற்கெனவே அம்மகான் இங்கு வந்தி ருக்கிளுர்" என்று அருள்புரிந்தாள். நாமும் அம் பிகையைச் சரண்புகுந்து தூயவாழ்வு வாழ்ந்து வருவோமானுல் தர்மத்தைப் பின்பற்றுபவர் கள் ஆகின்ளேம். தர்மத்தை விட்டுப் பிசகு வோமானுல் துன்பம் வந்து அமையும். சத்தி யத்தைக் கையாளுவதற்கு ஏற்ப மனத்தெளிவு உண்டாகின்றது. நெறி சுலபமானது; ஆனல் அதைக் கடைப்பிடிப்பதுதான் கடினம். விஷ யங்கள் மட்டும் ஏராளமாய்த் தெரிந்திருந்தால் போதாது. அனுஷ்டானத்தில் கொண்டு வரா விட்டால் நாம் கீழ்மையடைய வாய்ப்பு உண்டு. உறுதியான எண்ணம் படைத் தவர்களாகப் பாரமார்த்திகப் பெருவாழ் வில் தீவிரமாக ஈடுபடுவோமானுல் மானுட ஜன்மத்தை நன்கு பயன்படுத்தியவர்கள் ஆவோம். எடுத்துக்கொள்கின்ற முயற்சிக்கு ஏற்ப இதே ஜன்மத்தில் மேன்மை அடைய முடியும்.

நாம் தீவிர அதிகாரிகள் ஆவதற்கு அம்பிகை அருள்புரிவாளாக. ஊக்கம் படைத்தவர்களாக இருந்து எவ்வளவு தூரம் சாதனையில் ஈடுபடு கின்ளேமோ அவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைவோம்.

'யாதேவி சர்வ பூதேஷு ச்ரத்தா ரூபேண ஸம்ஸ்திதா, நமஸ்தஸ்யை, நமஸ்தஸ்யை, நமஸ்தஸ்யை, நமோ நம:' எல்லாரிடத்திலும் எந்தத் தேவி சிரத்தையாக வடிவெடுத்திருக் கின்ளுளோ அந்தத் தேவியை நான் வணங்கு கின்றேன். உள்ளத்தில் குடிகொண்ட பராசக்தி நம் உள்ளத்தைத்தூண்டி அவளுடைய மகிமை களையெல்லாம் நமக்கு விளக்கி நம்மையும் மகிமை உடையவர்களாக ஆக்குவாளாக. பரா சக்தியின் மகிமையில் மூழ்கியிருந்து அவளை நாம் வழிபடுவோமாக. அன்னை நம்மிடமுள்ள மகிமையை வெளிப்படுத்துவாளாக. (முற்றும்)

# குசேலமாமுனிவர் சரிதம்

( *101* ஆம் பக்கத் தொடர்ச்சி )

குசேலர் தம்மிடம் வருவதைப் பார்த்த புருஷோத்தமன் ஆகிய கண்ணன் அணைகடந்த வெள்ளம்போல் உள்ளத்தில் அன்பு பெருகக் குசேலமுனிவரை எதிர்கொண்டு அழைக்கச் சென்றார். அன்புப் பெருக்கினல் இருவரும் ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்துகொண்டனர். குசேலரை அன்புடன் அழைத்துப்போய் பொற்குடத்தில் வைத்திருந்த புதிய நீரால் அவருக்கு அபிஷேகம் செய்து பீதாம்பரம் அணிவித்து மலர்மாலை அணிவித்து அறுசுவையோடு கூடிய உணவும் படைத்தார். குசேலரை நோக்கிக் கண்ணன் பகர்ந்ததாவது: "வேதவேதாந்தங்களையெல்லாம் உணர்ந்த தவசிரேஷ்டரே! உம்முடைய தரிசனத்தால் நான் பெருமகிழ்வு அடைந்தேன். நான் யாண்டும் உம்மை நினைத்துக்கொண்டே இருக்கின்றேன். உம்மைக்காட்டிலும் எனக்கு மற்றொன்றில் பிரியம் இல்லை. நல்லவர்கள் சொல்லில் விருப்பம் கொள்வதும், அவர்களைக் காண்பதும், அவர்களுக்கு உதவி செய்வதும், அவர்களைப் போற்றுவதும் நலன்தரும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பொன்னும், பொருளும், புத்தியும் உடையவனுக இருந்தும் நல்லவனுக ஒருவன் இல்லாவிட்டால் அவன் நட்பு பயன் உடையது ஆகாது. முன் செய்த தவத்தினல்தான் நல்ல சிநேகிதர்களைப்பெற முடியும். நல்லவர்களுடைய நட்பு கிடைத்தற்கு அரியது. நல்லவர்களுடைய நட்பு தேடக் கிடைக்காத திரவியமாகும்" என்று கண்ணபிரான் அருளியபின் குசேலருடைய யோக க்ஷேமத்தை விசாரிக்க ஆரம்பித்தார். "உங்களுக்கு மணம் ஆயிற்று? மணமாகியிருப்பின் உம் மனைவி நற்குண நற்செயல்கள் உடையவரா? உம்மைத் தம்முயிர்போல் பாதுகாக்கின்ருரா? குடும்பத்தில் வரவுக்கேற்ற செலவு செய்து வருகின்ருரா? உமது சொல்லுக்கு இசைந்து நடப்பாரா? குடும்பத்தில் எத்தகைய வறுமை வரினும் அதைப் பொருட்படுத்தாது வீட்டுக் குறையைப் பிறரிடம் சொல்லாதிருப்பாரா? உமக்குக் குழந்தை எத்தனை வாய்த்திருக்கின்றன? உமது குழந்தைகளை நன்குவளர்த்து வருகிறீர்களா? குழந்தைகளுக்குத் தக்க கல்வி கொடுத்திருக்கிறீர்களா? ஜப தபம் முறையாகச் செய்து வருகின்றீர்களா? நாம் வெகுநாளாகிப் பிறகு கூடியிருக்கின்ருேம். நாம் இருவரும் ஒரே பள்ளியில் கல்வி பயிலும் பொழுது பேசிய பேச்சுக்களெல்லாம் உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா? கல்வி கற்கும்பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை இப்பொழுது உம்முடைய ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறேன். ஒருநாள் நம் இருவரையும் அமுது சமைப்பதற்கு விறகு கொண்டு வரும்படி நம் குருநாதர் அனுப்பினர். நாம் விறகு தேடிக் கட்டாகக் கட்டிக்கொண்டு வரும் பொழுது மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. நம்முடைய சரீரம் முழுவதும் நனைந்து, விறகுக் கட்டும் நனைந்து குளிரில் நடுநடுங்கிக்கொண்டிருந்தோம். மழை விடாமல் பெய்துகொண்டிருந்தது. இரவு முழுவதும் மழையிலும், குளிரிலும் அகப்பட்டுக்கொண்டு திகைத்தோம். இரவு முழுவதும் கானகத்தில் கழித்து விட்டு அடுத்த நாள் சூரிய உதயத்தின் போது ஊர் நோக்கி வந்தோம். நம் குரு சாந்தீப முனிவர் நம்மைத் தேடிக்கொண்டு வந்தார். நாம் இருந்த நிலையைப் பார்த்து "நீங்கள் எனக்காக மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறீர்கள்" என்று கூறி நம் பிற்கால வாழ்வில் நாம் எல்லா நலன்களும் பெற்று வாழ்வோம் என்று கூறி ஆசீர்வதித்தார். அது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? நீங்கள் பந்தபாசங்களை ஒழித்துவிட்டீர்கள். பல நாட்களுக்குப் பிறகு என்னைக் காண வந்துள்ளீர்கள்.எனக்கு என்ன கொண்டு வந்துள்ளீர்கள்? கொண்டுவந்த பொருளை எனக்குத் தாருங்கள்" என்று கண்ணபிரான் கேட்டார்.

குசேலர் பாலன்னம் புசிப்பவருக்கு அவலையா கொடுப்பது என்று சும்மா இருந்தார். கண்ணபிரானே அவர் பக்கத்தில் சென்று அவர் கந்தைத்துணியில் முடிந்து வைத்திருந்த அவல் மூட்டையைக் கண்டு அகமகிழ்ந்தார். அம்மூட்டையை அவிழ்த்து அதிலுள்ள அவலை எடுத்து வாயில் போட்டு மெல்லும்பொழுது

"அவல் மிகவும் ருசியாக இருக்கிறது" என்றார். ஒரு பிடி அவலை உண்டு அதனுடைய அருமை பெருமையைச் சொல்லி அகமகிழ்ந்தார். மற்றொரு பிடி எடுத்துத் தன் வாயில் போடப் போகும்பொழுது ஸ்ரீ ருக்மணி பிராட்டியார் பரபரப்புடன் ஓடிவந்து அவருடைய கையைப் பிடித்துக்கொண்டார். ருக்மணி தேவியார் தடை செய்தபோது அந்த அவலைக் கந்தையிலேயே கண்ணன் முடிந்துவிட்டார். பிறகு குசேலரை நன்கு உபசரித்துஅன்று இரவு முழுவதும் தங்கியிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தார். மறுநாள் காலை குசேலர் தம் ஊருக்குப் புறப்பட கண்ணபிரான் அவருடன் அரண்மனை வாயில் வரை வந்து ஆசி கூறி குசேல முனிவரை அவருடைய ஊருக்கு அனுப்பி வைத்தார்.

குசேலர் அரண்மனையைக் கடந்து ஊர் செல்லும் வழியை அடைந்தபொழுது ஸ்ரீ கண்ணபிரானின் திருவருளினால் அவர் அணிந்திருந்த கந்தைத்துணி பீதாம்பரமாக மாறியது. அவர் அணிந்திருந்த துளப மாலை ரத்தின மாலையாய்த் துலங்கிற்று. யானை, ரதம், குதிரை, காவலர்கள் கொண்ட பல மன்னர்கள் வந்து குசேலரைப் பணிந்து "தவசிரேஷ்டரே! ரதத்தின் மேல் எழுந்தருளுங்கள்" என்று வேண்டிக் கொண்டனர். முன்னும் பின்னும் அரசர்கள் ஏவலாளர்களைப் போல் அணியணியாய் அவரைக் கைகூப்பித் தொழுது வரவும், பரிவாரங்கள் அவரைச் சூழ்ந்து வரவும் குசேலர் தம் ஊர்ப்புறத்தை அடைந்தார். குசேலர் தம் ஊரை அடைந்ததும் அவ்வூர் பெரு நகரமாகியது. அவ்வூரில் உள்ளும் புறமுமுள்ள காடுகளெல்லாம் மாட மாளிகைகளாக மாறின. வைகுந்தமே அவ்வூருக்கு இறங்கி வந்தது போல் இருந்தது. அந்நகரத்துள் குசேலர் உட்செல்வதற்கு மதில் வாயிலை அடைந்தார். குசேலரை எதிர்கொண்டு அழைப்பதற்கு நகர மக்கள் கைகளில் கனிவர்க்கங்களைக் கொண்டு வந்து மங்கள வாத்தியங்கள் முழங்க குசேலர் எதிரில் நின்று வீழ்ந்து வணங்கினார்கள். மக்கள் குசேலரை ரதத்தினின்று கீழே இறக்கினார்கள். அவர்கள் கொண்டு வந்திருந்த பல்லக்கில் ஏற்றினார்கள். வீதிகளில் அவரை அழைத்துக்கொண்டு போகும்போது, வீதிகளின் இருபுறமும் உள்ள மாளிகைகளினின்று குசேலரைப் பார்த்தவர்கள் எல்லாரும் மகிழ்ச்சியடைந்து "குசேலமுனிவர் முற்பிறப்பில் என்ன தவம் செய்தாரோ" என்று போற்றிப் புகழ்ந்தனர். இத்தகைய புகழ்ச்சியில் குசேலர் மயக்கம் அடையாதவராகச் சென்றார். குசேலர் தம் வீட்டை அடைந்ததும் அவருடைய மனைவி வந்து திருவடிகளை நீரால் அலம்பி வணங்கினாள். குசேலர் வீட்டுக்குள் சென்றதும் தம் வீட்டில் செல்வம் நிறைந்திருப்பதையும், தம் மக்கள் முருகனைப்போல் அழகுடன் திகழ்வதையும்பார்த்தார். குடும்பத்திலுள்ள வறுமை நீங்கி மனைவி மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார்கள்.

ஒருநாள் குசேலமாமுனிவர் அறையில் தனியாக இருந்து சிந்தனை செய்யலானார். "பொருள் சம்பாதிப்பதிலும், அதைக் காப்பதிலும், பிறகு அதை இழப்பதிலும் துக்கமே ஏற்படுகிறது. பொருள் பற்றினால் பிறப்புக்கள் பெருகிக்கொண்டே போகின்றன. என் வீடு, என் பொருள் என்ற மயக்கம் உண்டாகின்றது. அம்மயக்கத்தை ஒழித்தால்தான் பரமபதத்தை அடைய முடியும். மயக்கத்தை ஒழித்தவன், ஆசையை ஒழித்தவன், ஞானியாகின்றான். செல்வத்தைப் பெற்று ஈசனை அநேகர் மறந்து விடுகின்றனர். ஆனால் நானோ ஈசனுக்கு அடியவராக இருப்பதையே பெரும் செல்வமாக வேண்டுகின்றேன். இந்த உலகச் செல்வம் எனக்கு வேண்டாம். வறுமையே இருக்கட்டும். இறைவா, நீர் தந்த இந்தச் செல்வம் பிறவிக்கு ஏதுவாக அமையும். ஆதலால் இச்செல்வம் எனக்கு வேண்டாம். உமக்கு அடியவனாக இருக்கின்ற செல்வத்தையே விரும்புகின்றேன். உம்மை நான் என்றும் மறவாதிருக்கும் பேற்றினைத் தந்து அருள்வீராக. இச்செல்வத்தையெல்லாம் நீர் திருப்பி எடுத்துக்கொள்வீராக." குசேலருடைய வேண்டுதலைக் கேட்ட பரந்தாமன் பகர்ந்ததாவது: "அன்பரே! உமக்குத் தந்த இச்செல்வம் உம்மைச் சார்ந்தவர்களுக்கே ஆகும். உம்பொருட்டு இந்தச் செல்வத்தை நான் உமக்குத் தரவில்லை. இச்செல்வத்தால் உமக்கு ஒரு தீங்கும் வந்து விடாது. பாம்பின் விஷம் மந்திரவாதியை ஒன்றும் செய்யாது.

அது போன்று தெய்வத்தைச் சார்ந்திருக்கும் உம் உள்ளத்தை இச்செல்வம் கெடுத்து விடாது. இச்செல்வத்தோடு நீர் நெடுங்காலம் இவ்வுலகில் தவநெறி வழுவாது வாழ்ந்து வருவீராக. உம் வாழ்வு மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமையட்டும்'

'முதலில் ஈசுவரனைக்காண்; பிறகு உலகக் காரியங்களில் ஈடுபடலாம்' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். உண்மையான பக்தியை முதலில் நாம் உள்ளத்தில் வளர்க்க வேண்டும். பகவத் சிந்தனையில் மனம் ஈடுபட்டுவிட்டால் உலகப்பற்று உள்ளத்தில் புகாது. ஆகவே தெய்வ பக்தியை வளர்த்துக் கொண்டு உலக வாழ்க்கையில் ஈடுபடவேண்டும். குசேலர் கொண்டிருந்த பக்தி அவருடைய உள்ளத்தைப் பந்தப்படுத்தாது வைத்திருந்தது. பக்தன் உடல் உலகத்தில் இருந்தாலும், அவனுடைய உள்ளம் பரமனிடத்தில் இருக்கிறது. ஆகையால் அவனுக்கு ஆபத்து உண்டாவதில்லை. பக்தி இல்லாதவர்களுக்கு உடல் ஆலயத்தில் இருந்தாலும் உள்ளம் உலக விஷயங்களில் ஓடிக்கொண்டிருக்கும். அத்தகையவர்கள் துயரத்துக்கு ஆளாகவேண்டும். படகு நீரில் இருக்கலாம். ஆனால் நீர் படகுக்குள் நுழைந்துவிடுமானல் படகு நீரில் மூழ்கிப்போய்விடும். உள்ளத்துக்குள் உலகம் புகுந்துவிடுமானல் ஆபத்து ஏற்பட்டுவிடும். உள்ளத்துக்குள் உலகம் புகாமல் இருப்பதற்கு அதை இறைவனிடத்துக் கொடுத்துப் பழக வேண்டும்.

குசேலர் யாண்டும் உள்ளத்தைத் தெய்வத்தின்பால் ஒப்படைத்திருந்தார். ஆகையால் அவருக்கு வந்த செல்வமும், உலகப்புகழும் அவர் மனத்தில் எத்தகைய மாறுதலையும் உண்டுபண்ணவில்லை. வறுமையுற்றிருந்த பொழுதும், செல்வம் வந்து வாய்த்தபொழுதும் குசேலருடைய மனம் தெய்வத்தையே சார்ந்திருந்தது. ஆதலால் அவர் உலக வாழ்வு வாழ்ந்ததற்கிடையில் உலகத்தில் கட்டுப்படாது வாழ்ந்திருந்தார். இறுதியில் முக்தி என்னும் பெறும் பேற்றுக்கு அவர் தகுதியுடையவர் ஆனர். குசேலர் போன்ற பக்திமான்கள் நமக்கு நல்வாழ்வுக்கு வழிகாட்டுபவர்களாகிறார்கள். (முற்றும்)

---

ஒரு சமயம் செம்படவன் ஒருவன் மீன் பிடித்துக் கொண்டிருந்தான். கழுகு ஒன்று வேகமாகக் கீழ்நோக்கிவந்து மீன் ஒன்றை அலகால்பற்றிக்கொண்டு போய்விட்டது. கழுகின் அலகிலிருந்த மீனைக் காக்கைகள் பார்த்துவிட்டன. காக்கைகள் கூட்டமாகச் சேர்ந்து அக் கழுகை வட்டமிட்டு 'கா,கா' என்று கரைந்து கொண்டே இருந்தன. கழுகு எங்கே பறந்து சென்றாலும் காக்கைகள் அதைப் பின் தொடர்ந்து சென்றன. கழுகு கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்ற நான்கு திசைகளிலும் சென்று பார்த்தது. காக்கைகளும் அந் நான்கு திசைகளிலும் அதைப் பின் தொடர்ந்தன. கடைசியில் கழுகின் அலகிலிருந்த மீன் நழுவிக் கீழே விழுந்தது. உடனே கழுகை வட்டமிட்டுக்கொண்டிருந்த காக்கைகள் கழுகை விட்டு விட்டு மீன் விழுந்த இடத்துக்குப் பறந்து ஓடின.

கழுகு காக்கைகளின் உபத்திரவத்திலிருந்து விடுபட்டது. அது ஒரு மரத்தின் கிளையில் உட்கார்ந்து அமைதியாக அலகால் தன் இறகுகளைக் கோதிக் கொண்டிருந்தது. இக் காட்சியை ஓர் அவதூதர் பார்த்தார். அமைதியாக இருந்த கழுகைப் பார்த்து "நீதான் எனக்குக் குரு. உன் அலகில் மீன் இருந்தபொழுது உனக்கு உபத்திரவம் இருந்தது. உன் அலகில் இருந்த மீனை நீ கீழே போட்டதும் உனக்கு உபத்திரவம இல்லை. உன் அலகில் மாமிசத் துண்டு இருந்தது போன்று என் உள்ளத்தில் உலகப்பற்றை வைத்திருப்பேனானல் துன்பங்கள் என்னைத் தாக்கிக்கொண்டே இருக்கும். நீ மீனைக் கீழே போட்டது போன்று என் உள்ளத்தில் உள்ள உலகப்பற்றை நான் ஒழித்து விடுவேனானல் துன்பங்களும் என்னை விட்டு நீங்கிவிடும். இவ் அரியபாடத்தை உன் மூலம் நான் இன்று கற்றுக்கொண்டேன்" என்று கூறிக் கழுகுக்கு வணக்கம் செலுத்தினர்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்.

---

# அநுபூதி

(சகோதரி நிவேதிதையின் கட்டுரையைச் சேலம் சகோதரி தங்கம் தமிழில் மொழிபெயர்த்தது)

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் சுவாமி விவேகானந்தரும் சமீபத்தில் நம்மிடையே வாழ்ந்து மறைந்த பெரியவர்கள். அவர்களுடைய ஜீவிதங்கள் வருங்காலச் சந்ததியினர் படித்துப் பயன்பெறும் வண்ணம் எழுதப்பட்டுள்ளன. இந்தப் பெருமக்களுடனும் அவர்களோடு நெருங்கி இருந்தவர்களுடனும் வாழும் நற்பேறு சிலருக்குக் கிடைத்திருக்கிறது. "இத்தகைய பாக்கியம் நமக்குக் கிடைக்கவில்லையே; இந்த மஹான்களைத் தரிசித்தவர்களைத் தரிசிக்கும் பாக்கியம் கூட நமக்கு வாய்க்கவில்லையே" என்று பிற்காலத்தவர் நினைக்கக்கூடிய அளவிற்கு அவர்கள் பெரும் பாக்கியம் செய்தவர்கள் ஆகிறார்கள். இந்தப் பெரிய மூர்த்திகளுடனும், அவர்களுடைய நெருங்கிய சீடர்களுடனும் வாழ்வதற்கிடையில் இவர்களைப்பற்றிக் கேள்வியால் மட்டுமே அறிகின்ற இளையதலைமுறையினரையும் அறியும் வாய்ப்பும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது; இருவருடைய மன உணர்ச்சிகளும் அவர்களுக்குப் புரிகின்றன. இப்படிக் காணுதவரும் விரும்பும்படியான இந்த அரிய ஜீவிதங்கள் நமக்கு என்ன செய்தி அளிக்கின்றன என்பதைச் சிந்திக்க வேண்டும்.

ஆன்மீக அனுபவமே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரது வாழ்க்கையின் முடிவாகவும் லட்சியமாகவும் இருந்தது. தமக்குவாய்த்த அனுபூதியை நழுவவிடாமல்அவர் பிரயாசைப்பட்டுப் பாதுகாத்து வைத்திருந்ததைக் காண்கிறோம். "அனுபூதி வாய்ப்பதற்கு அரியது;எனவே கிடைத்த சிறிது அனுபவத்தை விடாமல்பிடித்துக்கொள்வோம்" என்று நினைக்கும்படி அந்த அனுபவங்கள் அவருக்கு வாய்த்தனவா என்றால் அப்படியும் இல்லை. அவர் சதா பாவசமாதியிலேயே இருந்தார். அப்படியிருந்தும் அனுபூதியில் பிறந்த ஞானத்திற்கு அவர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்! சிறிதே அனுபவம் உள்ள நாமோ—அந்தச் சிறிய அனுபவத்தைப் போற்றிப் பாதுகாக்க என்ன செய்கிறோம்? ஒன்றும் செய்வதில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருவாய் மலர்ந்தருளிய அமுத மொழிகளைக் குறித்து வைத்த 'ம' ஒரு நிகழ்ச்சியைப்பற்றி எழுதுகின்றார். ஒருநாள் காலை பூஜைக்காகக் குருதேவர் மலர் கொய்துகொண்டிருந்தாராம். அப்போது அவருக்கு மனதில் ஓர் உண்மை பளிச்சென்று தோன்றியது. இவ்வுலகமே ஒரு பெரிய தேவாலயம். செடிகளில் மலர்ந்திருக்கும் மலர்களெல்லாம் ஏற்கனவே இறைவனுக்கு அர்ச்சிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி உணர்ந்த அந்தக்கணமே அவரால் மலர்களைப் பறிக்கமுடியாமல் போய்விட்டதாம். அதற்குப் பிறகு பூஜைக்காக அவர் மலர் கொய்யவே இல்லையாம். அத்துணை ஆழமாக ஒவ்வொரு உணர்வும், அனுபூதியும் அவர் உள்ளத்தில் பதிந்தது.

நம் உள்ளத்திலும் எப்போதாவது மின்னல் போல் தோன்றி மறைகின்ற நல்லெண்ணங்களையும், எதிர்பாராத நேரங்களில் தம்மைத் தாம் விளக்கிக் காட்டுகின்ற பேருண்மைகளையும் பாதுகாக்க நாம் என்ன தியாகங்கள் செய்கிறோம்?

தீர்த்த யாத்திரை செல்கின்றவர்கள் அந்த யாத்திரையின் நினைவாக ஏதாவது ஒரு பிரியமான பொருளை விட்டுவிடுகின்றனர். உண்மையை நோக்கிச் செல்லும் ஆன்மாவின் யாத்திரைகளுக்கு நாம் என்ன நினைவுச் சின்னங்கள் எழுப்பியுள்ளோம்? யாத்திரை முடிந்தபின் வழக்கமான அலுவல்களில் ஈடுபடும்போது யாத்திரை சென்றவன், தான் விட்டுவிட்ட பொருளைக் காண நேரும்போதெல்லாம் அந்தத் தியாகத்திற்குக் காரணமான அனுபவத்தை நினைவு கூறுகிறான். அந்த நினைவானது ஒரு கணம் அவனைத் தெய்வ சாந்நித்தியத்திற்கே இட்டுச் செல்கின்றது. அவ்வாறே ஸ்ரீ ராமகிருஷ்ணரும் தாம் பறிக்க வேண்டாமென்று விட்டுவிட்ட மலர்களைப் பார்க்கும்போதெல்லாம் அவை ஏற்கனவே இறைவனுக்குப் படைக்கப்பட்டிருக்கின்றன என்று முதலில் ஏற்பட்ட அனுபவத்தில் மீண்டும் திளைத்தார். நாள்தோறும் மலர்களைக் காணும்போதெல்லாம் அந்த அனுபவத்தைப் புதுப்பித்து, ஆழப்படுத்திக்கொண்டே இருந்

தார். நம்முடைய நிலேயோ இதற்கு முற்றிலும் மாருக இருக்கிறது. வாழ்க்கையின் சின்னஞ் சிறு விஷயங்களும் நம் மனதில் ஏற்படுத்தும் பதைபதைப்பும், அழுத்தமும் ஆன்மீக வாழ்க்கையின் முக்கியத்துவத்தை நம்மிட மிருந்து மறைத்து விடுகின்றன. வாழ்க்கை யின் அற்பமான விஷயங்கள்தாம் நமக்கு ஒரு பொருட்டாகத் தெரிகின்றன; பெரிய அனுபவங்களல்ல. இப்படி அற்பத் தனமான விஷயங்கள் மனதை அடைத்துக் கொண்டு வேறு எதற்கும் இடமில்லாதபடி செய்துவிடும் போது உயர்ந்த அனுபவங்கள் எப்படி நமக்கு அளிக்கப்படும்? மிக நீண்ட போராட்டத்தின் முடிவில்தான் நமக்கு ஞான ஒளி சிறிது தென்படுகிறது. அப்படி அருமையாகக் கிடைக்கும் ஞானத்திற்கு என்ன மதிப்புக் கொடுத்து வைத்திருக்கின்ருேம்? வாய்த்த அந்த ஞானத்தின்படி எவ்வளவு காலம் உண் மையாக நடந்துகொள்கிருேம்? உண்மையில் நம்மில் பெரும்பாலோரின் வாழ்வெல்லாம் மணல் குன்றின்மீது ஒருவன் சாண் ஏறி முழம் சறுக்கியது போல்தான் இருக்கிறது! வாராது போல் வந்த மாமணியை உடனே இழந்து விடுகிருேம்! அதற்குள் புதிய ஆசை களும் ஈடுபாடுகளும் மனதைச் சூழ்ந்து கொண்டு விடுவதால் என்ன நடந்திருக்கிறது என்பதுகூட நமக்குத் தெரிவதில்லை!

ஆனல் நம் நிலே பரிதாபகரமாக இருப்பது போல் தென்பட்டாலும், நம்மில் யாராலும் ஆன்மீக வாழ்விலிருந்து முற்றிலும் தப்பமுடி யாது. பாரமார்த்திகப் பெருவாழ்வு, பல உண்மைகளில் முக்கியமான ஒரு உண்மை அன்று; அதுதான் நம்மைச் சூழ்ந்து, நம்முள் பரவியிருக்கும், ஒரே உண்மை. நாம் பெரிதும் நம்பியிருக்கும் இந்திரியங்கள் உண்மையிலி ருந்து நம்மைப்பிரித்து வைத்திருக்கின்றன. உண்மைதான். ஆனல் அவை அந்த வலிவை இழக்கும் காலங்களும் வரும். அப்போது பொறிகள் என்னும் கனத்த திரையை விலக்க வேண்டியதுதான் தாமதம். இறையருள் எல் லாத் திசைகளிலிருந்தும் நம்மை நோக்கிப் பாயும். அகண்ட ஜோதியாய் இருக்கும் அந்த மூல ஒளியை நம் கண்களினின்றும் மறைப்பது எது? இந்தத் தேகத்தை ஆத்மா என்று தவருக நம்பி அதில் ஆழ்ந்ததுதானே குற்றம்? உண்மையான பிரகாசத்திற்கு நம்மைத் திறந்துவிட்டால்; தன்னைப் பலவாகக் காட்டிக் கொண்டிருக்கும் ஒரு பொருளுக்கு இடம் கொடுத்தால்—ஆத்ம சக்தியே பிரபஞ்சத்தில் எல்லாவற்றையும் தோற்றுவித்து ஆளுகிறது என்பது விளங்கும். வாழ்வோ சாவோ, இன்பமோ துன்பமோ, ஞானமோ அக்ஞானமோ, எல்லாம் ஆத்மா வின் பேராற்றலாலேயே நிர்ணயிக்கப்படுகின் றன. இந்த ஆத்ம சக்திக்கு முன் மற்ற எல் லாச் சக்திகளும் வளைந்து கொடுக்கின்றன; இதன் மூலமாகத்தான் மற்றவை எல்லாம் அளக்கப்பட வேண்டும்; விளக்கப்பட வேண் டும். எனவே என்ன கற்றுக்கொண்டிருக் கிருேம் என்பது மட்டும் அன்று, பெற்ற அந்த ஞானத்தைப் போற்றிப் பாதுகாக்க என்ன தியாகம் செய்திருக்கிருேம் என்பதும் மிக முக்கியமான கேள்வி ஆகும்.

அரசன் ஒருவன் தன் நாட்டையே துறந்தா லும்—வண்ணத்துப் பூச்சிகளைப் பிடிப்பதற் காக! காதலன் ஒருவன் தன் அன்புக்குரிய வளை விட்டுப் பிரிந்தாலும், பட்டங்கள் விட்டு விளையாடுவதற்காக! என்ன மதியீனம் என்று நமக்கே தெரிகிறது. ஆனல் ஸத்தியப் பொரு ளாகிய இறைவனை விட்டு விட்டு உணவுக்கும் உடைக்கும் உலகப் பொருட்களுக்குமாக அலைந்து திரியும் நாம் செய்வதும் அதே மதியீனம் தானே! இந்த அறியாமையிலிருந்து விடுபட, ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திவ்ய சரிதத் தைப் படிக்கும் நாம், மறந்துவிட்ட உண்மை களை மீண்டும் கற்றுக்கொள்வோம். பாரமார்த் திகப் பெருவாழ்வுதான் ஒரே பெருவாழ்வு; பரம்பொருளாகிய இறைவன்தான் ஒரே உண் மைப் பொருள். எனவே ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோருடனும் மற்ற நேர் சிஷ்யர்களுடனும் வாழக் கொடுத்து வைக்கவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக் காமல், அந்த மஹான்கள் அனுபூதிக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை உணர்ந்து, நாமும் அனுபூதி பெறுவதில் கண்ணுங் கருத்துமாக முயல்வோமாக. அங்ஙனம் முயல் வதே இப்பெரியவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டதற்கு அறிகுறி ஆகும்.

# நான் யார்?

**சாஸ்திரங்களின் பயன்**

நமது வாழ்க்கையைச் செவ்வனே நடத்துவதற்கு வழிகாட்டுவன சாஸ்திரங்களாகும். மெய்ப்பொருளை அடைகின்ற மார்க்கத்தை நமக்குச் சாஸ்திரங்கள் காட்டுகின்றன. ஆனால் அவற்றைக் கற்று விடுவதால் மட்டுமே ஒருவன் வாழ்க்கையில் உயர்வடைவதில்லை. சாஸ்திரங்களில் கற்றவற்றை நடைமுறைக்குக்கொண்டு வந்தால்தான் மெய்ஞானத்தைப் பெறுவது சாத்தியமாகும். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஓர் உதாரணத்தின் மூலம் இதனை விளக்குகிறார். பஞ்சாங்கத்தில் தேதி வாரியாகப் பலன் போடப்பட்டிருக்கும். அதில் மழை பெய்யும் நாளும் குறிக்கப்பட்டிருக்கும். அந்தப் பக்கத்தைக் கிழித்துக் கசக்கினால் நீர் வருமா? வராது! அது போன்று வெறும் ஏட்டுக்கல்வி அனுபவ ஞானத்துக்கு உதவாது. அதற்கு ஆழ்ந்த சாதனமும், இடைவிடாத பயிற்சியும் வேண்டும்.

**உண்மையும் கற்பனையும்**

மெய்ப்பொருளை அடைவதற்கு ஞானம், கர்மம், பக்தி, ராஜயோகங்கள் ஆகிய நான்கு வழிகளின் நடைமுறைகளை சாஸ்திரங்கள் விளக்குகின்றன. இவற்றில் ஞான மார்க்கம் என்பது மெய்ப்பொருளுக்கும், மற்றவற்றுக்கும் உள்ள வேறுபாட்டினைக் குறிப்பாக எடுத்துக் கூறுகிறது மெய்ப்பொருள் ஒன்றிருக்க கற்பிக்கப்பட்ட பொருள்மீது கவனம் செலுத்துவது சாதாரண மானிடர்களின் இயல்பு. சான்றாக, ஒளியற்ற நடுநிசியில் பாதையில் பழுதையைக் கண்டவன் அதைப் பாம்பு என்று எண்ணி அலறினான். விளக்கைக் கொண்டு வந்து பார்த்தபோது அது வெறும் கயிறு என்று உணர்ந்தான். ஆக, ஆதாரமாக இருந்தது கயிறு; ஆரோபிக்கப்பட்டது பாம்பு. இதில் கற்பனை உண்மை இரண்டும் உண்டு. எப்படியெனில் கயிற்றினைக் கண்டபோது அவன் அது பாம்பு என்று உண்மையாகவே நம்பினான். அப்பொழுது கயிறு என்ற பொருள் அவன் கண்ணிலோ, கருத்திலோ பதியவில்லை. ஆனால் விளக்கு வெளிச்சத்தில் பார்த்தபோது அது பாம்பு அன்று; கயிறுதான் என்ற உண்மையைத் தெரிந்து கொண்டான். ஆக ஒரே பொருள் ஒரு நேரத்தில் பாம்பாகவும் மற்றொரு நேரத்தில் கயிறாகவும் காட்சி தந்தது. ஆனால் இரண்டு காட்சிகளும் ஒரே நேரத்தில் நிகழவில்லை. அதாவது கற்பனை செய்யும் நேரத்தில் உண்மையோ, உண்மையை உணர்கின்ற நேரத்தில் கற்பனையோ சாத்தியமாகா.

**ரமணர் கண்ட மெய்ப்பொருள்**

மெய்ப்பொருள் ஆராய்ச்சியில் நாமாகத் தோற்றுவித்துக் கொள்ளும் கற்பனைகளை விலக்கி விட்டு உண்மை நிலையை அறிவதற்கு முயலவேண்டும். முதலில் 'நான் யார்?' என்று ஒரு கேள்வியை எழுப்புவோம். 'நான்' என்பது இந்த உடலோ, இதனைச் சுற்றியுள்ள ஏனைய வஸ்துக்களோ அல்ல. ஏனெனில் அவையாவும் அழியும் தன்மை உடையவை. அழிந்து போகும் ஒரு பொருளை அழியாத, நிலையான பொருளாக நினைப்பது பேதைமையாகும். ஸ்ரீ ரமணர் இந்தக் கேள்விக்கு ஏற்ற விடையைக் கண்டு தெளிந்தார். ஆகவே மஹரிஷியுமானார்.

மெய்ப்பொருளைக் குறித்து நான்கு வேதங்களும் கூறுபவை நான்கு மஹாவாக்கியங்களில் அடங்கியிருக்கின்றன. ப்ரக்ஞானம் பிரம்மம், அஹம் பிரம்மாஸ்மி, தத் த்வம் அஸி, அயம் ஆத்மா பிரம்மம் என்பன அந்த நான்கு மஹாவாக்கியங்களாகும். உள்ளது ஒரு பொருள்; அது மெய்ப்பொருள்; அதுவே நான்; மற்றவை காலகதிக்கு உட்பட்டு அழிகின்ற வெறும் தோற்றங்களே என்ற பேருண்மையையே இந்த மஹா வாக்கியங்கள் உணர்த்துகின்றன. 'நான்' என்பதை ஒரு வெங்காயத்திற்கு ஒப்பிடலாம். அது தோற்றத்தில் ஒரு வடிவத்துடன் தென்படுகிறது. உள்ளே என்ன இருக்கிறது என்று உரித்துப் பார்த்தால் சருகுகள் வரும். எல்லாவற்றையும் உரித்த பின் கடைசியில் உள்ளே ஒன்றுமே இல்லை. ஆகவே கற்பனைகள், பல வகையான எண்ணங்கள், நினைவுகள் ஆகிய எல்லாம் ஒழிந்தபின் கடைசியில் ஏற்படும் நிலையே நான் எனப்படுவது. அங்கே மிஞ்சியிருப்பது கலப்பு இல்லாத பூரண ஆனந்தமே. அது சத்சித் ஆனந்தமாகும்.

**ஆனந்தத்தின் பிறப்பிடம்**

இந்த ஆனந்தமானது வெளியே எங்கேயும் போய்த்தேடிப் பெறுவதன்று. அது நமக்குள்ளேயே இருக்கிறது. உயிர்கள் யாவும் யாண்டும் விரும்பித் தேடுவது இன்பம். வித்தியாசம் இல்லாமல் உயிரினங்கள் அனைத்தும் வெறுத்து ஒதுக்குவது துன்பம். துக்க நிவிருத்தி, சுகப் பிராப்தி என்ற ஒரே நோக்கத்தோடு உயிர் வகைகள் யாவும் ஓயாது உழன்று வருகின்றன. காரண, காரியங்களைக் கொண்டு ஒருபொருளை விரும்பவோ, வெறுக்கவோ செய்கின்றோம். ஆனால் எக்காரணத்தினாலும் நம்மை நாமே வெறுத்து ஒதுக்குவதில்லை. மனிதர்களாகிய நாம் நம்மை நாமே நேசிக்கிறோம். ஏனெனில் நமக்குள்ளே இன்பம் என்ற உணர்ச்சி என்றும் பொங்கித் ததும்பிக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்த உண்மையை மறந்து இன்பத்தை வெளியே தேடும்போதுதான் சகல விதமான துன்பங்களும் நேருகின்றன. உள்ளத்தின் உள்ளே மெய்ப்பொருள் இருப்பதை நாம் மறந்து போகும்படி செய்கின்ற சக்திக்கு மாயா சக்தி அல்லது மனோசக்தி என்று பெயர்.

**மனோசக்தி தோன்றும் விதம் :**

மனம் தன்னளவில் நல்லதுமன்று, கெட்டதுமன்று. அது நமது அனுபவங்களின் வெளிப்பாடே. இப்பிறப்பிலும், அதற்கு முற்பட்ட பிறவிகளிலும் பெற்ற அனுபவங்கள் நம் உள்ளத்தில் புகுந்துள்ளன. அந்த அனுபவங்கள் தோற்றுவிக்கும் உணர்ச்சிக்கு வாசனை என்று பெயர். ஆகவே நல்ல வாசனையோடு கூடியது நல்ல மனது எனவும், தீய வாசனைகளைக் கொண்டது கொடிய மனம் எனவும் பொருள் படுத்தப் படுகிறது. காற்று தன்னளவில் மணமற்றது. ஆனால் அது செல்லும் வழியில் அழுகிய பொருட்கள் இருந்தால் துர்க்கந்தமும், மணமுள்ள மலர்கள் மலர்ந்துள்ள சோலை வழியே சென்றால் இனிய நறுமணமும் ஏற்படும். அதுபோன்றே நம் வாசனைகளுக்கு ஏற்ப நம் மனமும் அமைந்திருக்கும். நம் மனதிலுள்ள வாசனைகளை அகற்றினால் பிறகு அது பரம்பொருளை நோக்கிப் போகும். மனம் ஒடுங்கிய பின்பு நினைவுகள் தோன்றுவதில்லை. சான்றாக ஆழ்ந்த உறக்கத்தில் மனம் செயல்படுவதில்லை; அத்தகைய ஒடுக்கத்தில் ஒரு நிம்மதி இருக்கின்றது. விழித்த பின்பு 'நன்கு உறங்கினேன்' என்கின்றோம். உடலும், மூளையும், மனமும் சலனமில்லாமல் ஓய்வு எடுத்த நிலையில் பரிபூரண ஆனந்தம்தான் இருக்கின்றது.

ஆகவே மனோசக்தி என்பது நம்முடைய மனத் திண்மையைப் பொறுத்தே அமைகிறது. மனதில் நல்ல வாசனைகள் இருந்தால் நல்ல எண்ணங்களே தோன்றும். வாசனை என்பது வாழ்க்கை அனுபவத்தின் பதிவு. மனம் எந்தப் பொருளைச் சாருகிறதோ, அதன் வாசனைகளை சூட்சும ரூபத்தில் மனது ஏற்கிறது. சத்சங்கம் நல்ல வாசனைகளை ஏற்படுத்தும். நல்லார் இணக்கம் நல்ல நினைவுகளையும், சம்ஸ்காரங்களையும் ஏற்படுத்தும். நம் நடை, உடை, பாவனைகள் மூலமாகவும், எண்ணம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் நல்ல வாசனைகளையே நாம் நாளும் பெறவேண்டும். 'எத்தொழிலைச் செய்தாலும் ஏது அவத்தைப் பட்டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே' என்றவாறு நம் மனோ விருத்தியைத் திருத்துவதிலேயே கவனம் செலுத்த வேண்டும். ஜபம், தியானம், பிரார்த்தனை போன்ற பயிற்சிகள் மனதில் நல்ல பதிவுகளை ஏற்படுத்தும்.

**மனதின் வடிவங்கள்**

ஒவ்வொரு நாளும் சிறிதுநேரம் நாம் மௌனத்தை அனுஷ்டிக்க வேண்டும். நம் மனமானது எப்படியெல்லாம் வடிவெடுக்கிறது என்பதை அந்த நேரத்தில் ஆராய்ச்சி பண்ணலாம். முதலில் அது 'நான்' என்ற இலக்கையே சுற்றி வருகிறது. ஆனால் படிப்படியாக அறிவுறுத்திக் கொண்டே போனால் 'இது நான் அல்ல; அது நான் அல்ல' என்று விலக்கிக்கொண்டே போனால், முடிவில் அழியாத அறிவுப் பொருளை நாம் அடைந்துவிடலாம். அரசனைப் பார்ப்பதற்காக அரண்மனைக்குள் முதன் முதலாக நுழைந்த ஒருவன் காவலாளி, சேவகன், படைத்தலைவன், அமைச்சன் ஆகியோரைப் பார்த்து 'இவர்தான் அரசரா, அவர்தான் அரசரா' என்று கேட்டுக் கொண்டே சென்றான். முடிவில் ராஜ கம்பீரமாக வீற்றிருந்த அரசன் முன்னிலையில் போய் நின்றதும் அவனிடத்தில் கேள்வி எழவில்லை.

கேள்வியொன்றும் கேளாமலே அவன் அரசன் என்றறிந்து தலைவணங்கினன். நம் மனத்தின் அனுபூதி நிலையும் அத்தகையதே.

ஜாக்ரதம், சொப்பனம், சுஷுப்தி என்று மூன்று நிலைகள் நமக்கு நாள்தோறும் மாறி மாறி அமைகின்றன. சுஷுப்தியாகிய ஆழ்ந்த உறக்கத்தில் உடல், உலகம் ஆகியவை பற்றிய ஞாபகம் எதுவும் இருப்பதில்லை. தன்மீது படிந்துள்ள வாசனைகள், எண்ணங்கள், நினைவுகள் அனைத்தையும் மனது அப்பொழுது புறக்கணித்துவிடுகிறது. ஆகவே ஆழ்ந்த இன்பம் பெறுகிறது. இப்படி நினைவுகளையும், எண்ணங்களையும் சுஷுப்தியில் புறக்கணிப்பது போன்று ஜாக்ரத நிலையில் விழித்திருக்கும் போதும் நம்மால் புறக்கணிக்க முடியுமானல் அப்பொழுது பேரின்பம் வந்து வாய்க்கும். அத்தகைய வல்லமையும், திறமையும் நமக்கு வந்து அமையவேண்டும். நமக்கு அது இயலாது என்று நாம் மயங்கி இருப்பது அக்ஞானம். அதிலிருந்து விடுபட்டால்தான் அதன் ஆதிக்கம் ஒழியும்.

'தவம் செய்வார் தம் கருமம் செய்வார்' என்பது குறள். அகத்தில் படிந்து கிடக்கும் அக்ஞானத்தை அகற்றுதலே நமது கடமையும், தருமமும் ஆகும். சாதாரண மனிதர்கள் ஆசைக்கு வசப்பட்டுத் தம் வாணுளை வீணுக்கு வர். அப்பொழுது மனமானது ஆசை,வெறுப்பு, கோபம், பொருமை போன்ற பல வடிவங்களை எடுக்கும். அகங்காரமே தனது வடிவமாகக் காட்டிக்கொள்ளும். அத்தகைய சிறையிலிருந்து மனத்தை விடுவிப்பதே உண்மையான தவம் ஆகும். யாண்டும் பிரம்ம சொருபத்தில் லயித்திருப்பதே மாசுபடாத மனத்தின் இயல்பாகும். அப்பொழுது அது வாசனைகளுக்குக் கட்டுப்படுவதில்லை. தூய மனத்தின் இந்தச் சுதந்திரத் தன்மையைத் தாயுமான சுவாமிகள் 'சும்மாயிருக்கும் சுகம்' என்றும் 'சுட்டற்ற பூரணம்' என்றும் குறிப்பிடுகின்ருர்.

**ஆனந்தம் பிரம்ம**

மனம் சும்மா இருத்தல் என்பது வினை எதுவும் இயற்றுமல் சோம்பியிருத்தல் என்னும் பொருளில் கூறப்படுவதன்று. அது தமோ குணத்தைக் குறிக்கும் சொல் அன்று. உலகம் சுகம் தரக்கூடியது என்ற எண்ணம் உள்ள வரை மனதை உலகப்பற்றிலிருந்து விடுவிக்க முடியாது. அதற்கு விடுதலை கிடையாது. ஆனல் உண்மையை உணர்ந்து விடுதலை பெற்ற பிறகோ, அகங்காரம் முதலிய உணர்ச்சிகள் அதனைத்தாக்கி வீழ்த்த முடிவதில்லை. புறவுலகில் நடக்கும் செயல்கள் எதுவும் மனத்தை அலக்கழிப்பதில்லை. 'நடப்பது யாவும் நன்மைக்கே'; 'ஏது நேரினும் அஞ்சமாட்டோம்'; 'அனைத்தும் அகிலத்தை ஆட்டுவிக்கும் அந்த அன்னைக்கே சமர்ப்பணம்' என்று அலைகள் இல்லாத மானச ஸரோவரம் போன்று மனம் அமைதியாக இருக்கின்றது. இதுவே சும்மா இருக்கின்ற சுட்டற்ற நிலையாகும்.

நாம் ஆழ்ந்து எண்ணுகின்ற எண்ணமே, திரும்பத்திரும்ப எண்ணுவதே, நம் மனோமயம் ஆகின்றது. அதுவே பற்று அல்லது காமம் என்று வளர்கிறது. ஆன்ம லட்சியத்தில் கண்ணுங்கருத்துமாய் இருப்பவர்களுக்கு அது குறைந்து போய் நாளடைவில் நிவிருத்தியாகி விடுகின்றது. சுயநலம், உடல் நினைவு ஆகியவற்றைத் துறந்து கடமையில் ஈடுபடுபவர் எவருக்கும் சொரூபஞானம் சித்திக்கும். விசுவாமித்திரர் பிரம்ம ரிஷி என்ற நிலையை எய்துவதற்குப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். அவர் உள்ளத்தில்வாசனைகள் இருந்தவரையில் காமம்,கோபம் என்று பல வகையான தடைகள் தோன்றின. வசிஷ்டரும் அவரைப் பிரம்ம ரிஷியாக ஏற்க மறுத்தார்.முடிவில் நான்என்ற நினைவையே அடியோடு ஒழித்ததும் அவர் பிரம்ம ரிஷியானுர்.'நானே இதைச் செய்தேன்; நானே மிகச் சிறந்த பக்தன்' என்றெல்லாம் ஒருவன் பிறரிடமிருந்து தன்னைப் பிரித்து எண்ணுகின்ற வரையில் ஒருவனுக்கு நிறை ஞானம் வந்து வாய்ப்பதில்லை. தான் வேறு, மற்ற உயிர்கள் வேறு என்ற அகங்காரம் உள்ளத்தில் தோன்றினல், ஆன்ம விசாரத்தின் மூலம் உடனே அதைத் திருத்தவேண்டும். அதைத் துடைக்கத் துடைக்க மனோநாசம் நிகழும். மனம் நாசமானல் சொரூபமயம் ஆவார்கள். அத்தகையவர்கள் தவம் உடைய அருளாளர்கள் ஆவார்கள். இன்று நாட்டில் அத்தகைய அருளாளர்கள் கூட்டம் குறைந்து வருகிறது. இதனல் நாட்டிற்குப் பெருந்தீமையே விளையும். இன்று பெருகி வரும் துன்பங்களுக்கு

அடிப்படைக் காரணம் எது வெனில் மனம் உள்முகமாக நோக்கும் பயிற்சி இல்லாமையே. தனித்திருந்து பழகி, தன்னை ஆராய்ச்சிபண்ணு பவர்களுக்கு 'ஆனந்தம் பிரம்மம்' என்ற அநு பூதி நிலை வாய்க்கும். பரமஹம்சர் கையாண்ட வழிமுறை இதுவே. அந்தர்யோகத்தில் பெறு கின்ற பயிற்சியும் இத்தகையதே. முடிவில் நாம் அஹம் பிரம்மாஸ்மி என்று உணர்ந்து அதில் லயித்திருப்போமானால் வாழ்க்கையில் மேனிலை அடைந்தவர்களாவோம்.

**தாயுமானவர் காட்டும் வழி**

நாம் ஞானசொரூபம்; வெறும் உடல் அன்று என்ற ஞானத்தைப்பெறுவதே நமது வாழ்க் கையின் குறிக்கோள் ஆகும். இந்த உண் மையை மறைக்கும் கருவி கரணங்களை நாம் சரியானபடி திருத்தியமைக்கவேண்டும். மனதைத் திருத்தி அமைக்கும் வழி முறையைத் தாயுமானுர் ஒரு பாடலில் விளக்கிக் கூறுகின் ருர். கருணைகரக்கடவுள் என்ற பகுதியில் உள்ள எட்டாம் பாடலில் அவர் மனதைத் தெய்வத்திற்குச் சமர்ப்பித்து அதன் வழியே இறைவனோடு ஒரு நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்ருர்.

தெய்வத்தோடு வைத்துள்ள இணக்கத்தின் புற அடையாளமாகப் பலிகொடுத்தல், அபி ஷேகம், நைவேத்தியம், தூபதீபம், ஆறுகால பூஜை முதலியன நிகழ்கின்றன. இவ்விதமே தன்னைத்தானே ஒருவன் தெய்வத்திற்கு அர்ப் பித்துக்கொள்ளும்பொழுதும் அகவழி பாட்டில் பல புதுமைகள் நிகழ்கின்றன.

**அகவழிபாடு**

அகவழிபாட்டில் முதலில் நாம் நம் மனதைக் கடவுளுக்குப் பலிகொடுக்கின்ளும். கட்டில் அடங்காத மனதைக் கைவசம்கொண்டு வர அதுவே சிறந்த உபாயம். மனது எத்தகை யது? அது எப்பொழுதும் துள்ளித்திரிவது; விவேகம் இன்னது என்று அறியாதது. கீழான போக்குடைய அந்த மனதை இறைவ னுக்குக் கொடுத்தபின், கால் வைக்கவும் தகுதி யற்றதாய் இருக்கும் சாக்கடை நீர் கங்கை யில் கலந்த பின் தூய்மையுறுவதுபோன்ற நிலையை அது அடைகிறது. உடனே கர்மவினை என்ற துஷ்டதேவதை மனதை விட்டு விலகி ஓடிப்போகிறது. இறைவன் பூரணமாயுள்ள ஆத்மாவே வடிவெடுத்தவன். ஆகவே துரிய நிறை சாந்த தேவதை என்று தாயுமானவர் குறிப்பிடுகிருர். 'நான் உனக்கே தொழும் பன்; அதாவது தொண்டன்' என்று உறுதி கூறுகிருர். மானசீக பூஜையில் மனமே சமர்ப் பணம் செய்யப்படுகிறது. இதுவே உச்சநிலை.

"இறைவா! உனக்கு மட்டுமே என் மன மானது அடிமை செய்யும். அதில் அன்பு ஊற்றெடுக்கும். அதுவே உன்மீது கொட்டும் அபிஷேகநீர். உள்ளே உறைகின்ற உயிரையே நான் நைவேத்தியமாகச் சமர்ப்பிக்கின்றேன். என்னுடைய பிராணனை ஒழுங்குப்படுத்துவது உனக்குக் காட்டப்படும் தூபம் ஆகும். நான் பெற்றுள்ள நல்லறிவு அகவழிபாட்டில் பயன் படுத்தும் தீபம் ஆகும். இது நான் உயிர் வாழும் பரியந்தம் ஒவ்வொரு கணமும் செய்யப் படும் சதாகாலப் பூஜையாகும். என்னை உன் னிடம் முறையாக ஒப்படைத்து விட்டேன். ஏனெனில் நீ அத்தகைய நம்பிக்கை வைக்கத் தக்க உயர்ந்த பொருள் ஆவாய். உன்னிடத் தில் சேர்ந்தால் நான் நலன் பெறுவேன். ஏனெனில் நீ கருணையே உருவான அமுதப் பிழம்பு; தெளிந்த தேன்; நீ தித்திக்கும் சீனி; திவ்விய ரசம் யாவும் திரண்டு ஒழுகும் பாகு; தெவிட்டாத ஆனந்தம்; நீ கள்ளத்தனம் மிகுந்த என்னுடைய அறிவின் ஊடேபுகுந்து என்னுள் கலக்க வருகின்ற நல்ல உறவு; கருத்திற்கு எட்டாத சிற்சபையில் ஆனந்தமாய் நடனம் செய்கின்ற கருணைகரக் கடவுள்." இங்ஙனம் தாயுமான சுவாமிகள் இயம்புகிருர்.

**தனக்குத்தானே துணை**

இவ்விதம் தன்னையும், தன் மனதையும் இறைவனிடத்தில் ஒப்படைப்பதால் தோன்று கிற நல்ல உறவு என்றும் நிலைத்திருப்பது; அது கிடைத்தற்கரியது; அழியாத பேரின்பத்தை நல்குகிறது. ஜாக்ரதம், ஸ்வப்னம், சுஷுப்தி ஆகிய மூன்றையும் கடந்த நிலையையே தாயு மானவர் துரிய நிறை சாந்த தேவதை என்று குறிப்பிடுகிருர். புறவழிபாட்டில் தேங்காயும், பழமும் சமர்ப்பிக்கப்படுகின்றன. அகவழி பாட்டில் மனமே ஆகுதி ஆகின்றது. நாம் அணிந்துள்ள கண்ணுடி பச்சை நிறமானல் எதிரே காண்பதெல்லாம் பச்சைவண்ணத்தில் தெரியும். கண்ணுடி கறுப்பு நிறத்தில் இருந்

தால் காண்பதெல்லாம்கருமையாய்த் தெரியும். அது போன்று மனதின் தன்மைக்கேற்பப் புற வுலகம் காட்சி தருகிறது. மனதைத் தூய்மைப் படுத்துவதற்கு ஆத்ம சாதனம் என்று பெயர். இதுவே மனிதன் தனக்குத்தானே செய்து கொள்ளும் பேருதவியாகும். கோவிலில் வழி பாடு முடிந்த பிறகு பக்தன் ஒருவன் தன்னைத் தானே ஒருமுறை சுற்றிக்கொள்கிருன். மூல ஸ்தானத்தில் கண்டதெய்வத்தைப் பிரபஞ்சம் எங்கும் காணவேண்டும் என்பதை உணர்த் தவே அவ்வாறு செய்கிருன். அகவழிபாட்டின் மூலம் 'தன்னுள் இருப்பது அமுதப் பிழம்பு; தேன்; சீனி; திவ்யரசம் யாவும் திரண்டு ஒழு கும் பாகு; தெவிட்டாத ஆனந்தம்' என்ற ஞானம் ஏற்படவேண்டும்.

**பரமஹம்சர் பாதையில்**

உலக வாழ்க்கையின் அல்லல்கள், பிரச்னை கள் இவற்றுக்கிடையே ஓயாது அல்லலுற்று வாடுகின்ற மனமானது இங்ஙனம் எப்பொழு தும் தன்னைத் திருத்தி அமைத்துக் கொள்வதி லேயே குறியாக இருந்துவிட்டால் பிறகு தெய் வக் காட்சியை எங்கும் காணுதல் சாத்தியம்.

பரமஹம்சர் அவல் இடிக்கும் மாதுவை உதாரணம் காட்டி இதனைத் தெளிவுபடுத்து கிருர். மாது ஒருத்தி அவலை இடிக்கையில் ஒரு கை உலக்கையைப் பற்றிக்கொண்டுள்ளது. மற்ருெரு கை அவலை உரலில் தள்ளுகிறது. இடுப்பில் தன்னுடைய குழந்தையை வைத் துக்கொண்டு பால் கொடுத்துக் கொண்டிருக் கிருள். வாடிக்கையாளருடன் அவலை விலை பேசிக்கொண்டிருக்கிருள். இத்தனை செயல் களுக்கு இடையில் அவள் கை உலக்கையில் இடிபடாமல் அவளுடைய மனதின் ஒரு பகுதி பார்த்துக்கொள்கிறது. அது போன்று நம் மனமும் ஈசுவர அனுபூதியில் ஈடுபடவேண்டும். உழைப்புக்குத் தகுந்த ஊதியம் அவளுக்குக் கிடைப்பது போலவே உண்மையான ஆத்ம சாதகனுக்கும் கிடைக்கும்.

இறைவனை மறைபொருள் என்கின்ருர் தாயுமானவர். குழம்பிய உள்ளத்தினருக்கு அந்த மெய்ப்பொருள் விளங்குவதில்லை. அது உள்ளத்தினுள்ளே மறைந்தே நிற்கின்றது. அப்போது அது மறைபொருளே ஆகும். ஆனல் நம்மைச் சுற்றிலும் உள்ள இயற்கைக் காட்சிகளை ஊன்றிக் கவனித்தால் யாவும் வேதக் கருத்துக்களுக்கு விளக்கமாகவே வந்து அமைந்திருத்தலைக் காணலாம். இளமையில் பரமஹம்சர் வயல் வெளியில் நடந்து சென்ற போது வானத்தையும், பறவைக் கூட்டத்தை யும் பார்த்தார். அக்கணமே அதில் இறை நிலையை உணர்ந்து பரவசநிலையடைந்தார். இளமையிலேயே மனத்தை இறைவனுக்குக் கொடுத்து விட்டதால் அவருக்கு இது சாத்திய மாயிற்று. ஆனல் நாமோ கள்ளன் நிலையில் இருக்கின்ருேம் என்கிருர் தாயுமானவர். தான் திருடியபொருளை மறைத்து வைத்துக்கொண்டு அது தன் கைவசம் இல்லை என்று கள்ளன் சொல்வது போலக் கடவுள் யாண்டும் உள்ளத் தில் ஒளிர்ந்து கொண்டிருக்க, நாம் புறவுலகில் அலைந்து அவரைத் தேடுவதால் நம்மைக் கள்ளன் என்று சொல்கிருர்.

இறைவனைச் சேர்ந்த பிறகு பஞ்சேந்திரியங் களும் நமக்கு ஆனந்தத்தையே தருகின்றன. ஆகவே இன்பச் சுவையை அளிக்கின்ற தேன், பாகு போன்ற பொருள்களுக்கு இந்தப் புதிய உறவை ஒப்பிட்டுப் பாடுகிருர். அமரநாத் முதலிய இமயமலையிலுள்ள தலங்களுக்கு நாம் யாத்திரை போனல், அங்கே நமக்கு ஒருவரும் துணையாக இருக்க இயலாது. நம் உயிர் நம் கையில்தான். அதே போன்று கனவில் நாம் அடிபடும் பொழுது பக்கத்தில் படுத்திருக்கும் நமது ஆப்த நண்பனல் நமக்கு உதவி செய்ய இயலாது. எனவே நாம் உய்வதற்கு நாம் தான் வழி செய்துகொள்ள வேண்டும். "வான் கெட்டு மாருதம் மாய்ந்து அழல், நீர், மண் கெடினும் தான் கெட்டல் இன்றிச் சலிப்பு அறி யாத் தன்மையனுக்கு ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வு கெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்டவா பாடி தெள்ளேணம் கொட் டாமோ" என்று மணிவாசகப்பெருமான் இந் நிலையைவிவரிக்கின்ருர். 'இறைவா, உன்னையே சார்ந்திருக்கின்றதகுதியை நீ எனக்குக் கொடு' என்று வேண்டுகின்ருர் தாயுமான சுவாமிகள். நமது உள்ளத்தை இறைவனுக்கு ஒப்படைக் கின்ற அளவுக்கு நாமும் வாழ்வில் பெருநிலை எய்துவோம். திருவருள் துணையினல் அந்தத் தெவிட்டாத ஆனந்த நிலை நமக்குக் கைகூடு வது ஆதுக.

## ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம்

50. विश्वकर्मा விச்வகர்மா—பிரபஞ்சத்தின் கண்ணுள்ள அனைத்தையும் அற்புதமாக அமைத்துக்கொண்டிருப்பவர்.

அவருடைய திறமைக்கு எல்லையோ முடிவோ இல்லை. பிரபஞ்சத்தை ஆராய்ந்துபார்த்தால் அதில் நிகழ்ந்துகொண்டிருக்கின்ற அற்புதங்களனைத்தும் விசுவகர்மனுடைய அதிசயச் செயல்களாம். சில சமயங்களில் அரிய பெரிய செயல்களை மக்கள் செய்துவிடுகின்றனர். அறிந்தோ அறியாமலோ அவர்கள் பெற்றுள்ள ஆற்றல்கள் அனைத்தும் விசுவகர்மனிடமிருந்து வந்தவைகளாம். மனிதன் மட்டுமல்லன், சிற்றுயிர்களும் ஓயாது தங்கள் திறமைக்கேற்றவாறு அரிய பெரிய செயல்களைச் செய்துகொண்டேயிருக்கின்றன. அவை யாவும் விளையாட்டாக விசுவகர்மனால் ஆற்றப்படும் அதிசயங்களாம்.

51. मनुः மனு:—ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருப்பவன்.

மனிதன் பெறுகின்ற சிந்தனா சக்திகள் அனைத்தும் மனுவிடத்திருந்து வந்துகொண்டிருப்பவைகளாம். எண்ணிப் பார்க்கும் திறமையை வளர்ப்பதற்கேற்ப மனிதன் மஹாவிஷ்ணுவைப் போற்றுபவன் ஆகிறான். மனு என்னும் பதத்துக்கு மற்றோர் அர்த்தம் உண்டு; அது மந்த்ரம் என்பதாம். எந்தச் சொல் அல்லது சிந்தனை மனதை உறுதிப்படுத்துகின்றதோ அது மனு ஆகிறது. ஓங்காரம், சிவ, நாராயண, ராம ஆகிய சொற்கள் மந்த்ரங்களாக அமைந்திருக்கின்றன. அவை யாவும் மனுவின் சொரூபங்களாம். அவைகளை உச்சரிப்பதற்கேற்ப மனிதனுடைய மனோசக்தி அதிகரிக்கிறது. 'யக்ஞங்களுள் நான் ஜபயக்ஞமாயிருக்கிறேன்' என்று கிருஷ்ண பரமாத்மா கீதையில் பகர்ந்துள்ளார். ஜபிப்பதற்கேற்ற சொற்களனைத்தும் மந்த்ரங்களாம். அவை யாவும் மனுவிடத்தினின்று தோன்றி வந்தவைகள்.

ஒவ்வொரு திட்டமும் முதலிலே மனதில் வடிவெடுக்கிறது. இறைவனிடத்திருந்து விசுவமனம் வடிவெடுக்கிறது. அந்த விசுவ மனதுக்குப் பிரஜாபதி என்று பெயர். பிரஜைகளை அல்லது மக்களைத் தோற்றுவிப்பவன் என்பது இந்த நாமத்தின் பொருள். மக்களுக்கும் மற்ற உயிர்வகைகளுக்கும் இடையில் பெரிய வித்தியாசமிருக்கிறது. சிந்தனைசக்தி அல்லது எண்ணிப்பார்க்கும் திறமை மனிதனுடைய தனி உரிமையாம். ஆதலால் மனிதனுடைய நிலையைப் பரிணமித்து எட்டியுள்ள ஜீவர்களனைவரும் ஆழ்ந்து சிந்தித்துப் பழக வேண்டும். சிந்தித்துப் பழகுமிடத்தே ஒவ்வொரு பொருள் அல்லது செயலிலுள்ள பாங்குகளனைத்தும் வெளியாகின்றன. முறையாகச் சிந்தித்துப் பழகுதல் கடவுள் வழிபாடாகிறது.

52 त्वष्टा த்வஷ்டா—பிரளய காலத்தில் ஒடுக்குபவன் த்வஷ்டா எனப்படுகின்றான்.

சிந்தனா சக்தியில் ஊறி வளர்ந்திருக்கின்ற மானுடனுக்குப் பகவானிடத்துள்ள இந்த மகிமையை அறிந்துகொள்ளுதல் மிக எளிதாம். ஒவ்வொருநாளும் மனிதன் உறங்கப் போகின்றபொழுது அவனுடைய மனது அவனிடத்து ஒடுங்குகிறது. மனம் ஒடுங்குதற்கேற்ப மாநிலத்திலுள்ள விரிந்த வடிவங்களனைத்தும் ஒடுங்குகின்றன. அப்படி ஒடுங்குகின்றபொழுது மனிதன் தன்னுடைய சிந்தனையை அதனிடத்தில் செலுத்துவானாகில் அதில் ஓர் இன்பம் காண்பான். ஆதலால் சிருஷ்டியில் இன்பம் இருப்பதுபோன்று பிரளயத்திலும் இன்பம் இருக்கிறது. உறங்கப்போகின்றவர்கள் அனைவரும் மகிழ்வுடன் அச்செயலைச் செய்கின்றனர். உறங்கிய மனிதன் அதே சரீரத்தில் மீண்டும் அடுத்தநாள் காலையில் ஞாபகத்துக்கு வருவானாகில் அது உறக்கம் அல்லது சுஷுப்தி அவஸ்தை எனப்படுகிறது. அதற்கு மாறாகத் தான் படைத்திருந்த சரீரத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் புதிய சரீரத்தில் தோற்றத்துக்கு வருவானாகில் அது சிருஷ்டி அல்லது மறுபிறப்பு எனப்படுகின்றது. இக்கோட்பாட்டை உள்ளபடி அறிந்துகொள்ளாதவர்களே மரணத்துக்கு அஞ்சுகின்றனர். வாழ்க்கைத் தத்துவத்தை உள்ளபடி அறிந்துகொள்பவனுக்கு ஜாக்ரதாவஸ்தையும் சுஷுப்தி அவஸ்தையும் ஒன்றாயிருப்பதைப் போலவே சாவதையும்

பிறப்பதையும் ஒரேபாங்கில் பொருள்படுத்து கின்றான்.

53. स्थविष्ठः—ஸ்தவிஷ்ட: அனைத்துமாய் இருப்பவர்.

பரம்பொருளுக்குப் புறம்பாகப் பொருள் ஏதும் இல்லை. ஆகையினால் 'உலகனைத்தும் ஆனாய் நீயே!' என்னும் கோட்பாடு வந்துள்ளது. விரிவடைந்துள்ள பிரபஞ்சத்தை ஆராய்ந்து பார்த்தால் அது எல்லை காணாது அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிறது. அதனிடத்து அமைந்துள்ள இந்த மகிமைகள் மஹாவிஷ்ணுவிடமிருந்து வந்தவையாம். ஆதலால் பிரபஞ்சத்தில் எதுவெல்லாம் மிகப் பெரியதாகத் தோன்றுகின்றதோ அதனிடத்தெல்லாம் பக்தியுடன் கருத்தைச் செலுத்துவது நல்ல வழிபாடாகிறது. பக்தியில் ஈடுபட்டிருப்பவன் அரிய பெரிய சொருபங்கள் மூன்றனிடத்துத் தன் கருத்தைச் செலுத்தவேண்டுமென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்கின்றார். கரைகாணாத அகண்டாகாரத்தில் விரிந்தோடும் கடல் முதலாவது. வானைப் பொத்துக்கொண்டு முடி காணவண்ணம் ஓங்கி நிற்கும் மலை இரண்டாவது. வழிபாட்டுக்கென்று கூடியிருக்கும் மக்கள் திரள் மூன்றாவது. இவைகளை நன்கு பயன்படுத்த மனிதன் கற்றுக்கொள்வானாகில் அவனிடத்துப் பக்தி ஓங்குகிறது. எனவே, இயற்கையின்கண் அசாதாரணமான வடிவெடுத்து இலங்கும் பொருள்கள் யாவும் ஈசனுடைய மகிமையையே விளக்குகின்றன என்பது தேற்றம்.

54. स्थविरोध्रुवः—ஸ்தவிரோத்ருவ: தொல்லோனும் நிலைத்துள்ளவனும் இருப்பவன்.

பரம்பொருள் காலத்துக்குக் கட்டுப்பட்டது அன்று.

காலம் அவனிடத்துத் தோன்றி அவனிடத்து நிலைபெற்றிருந்து மீண்டும் அவனிடத்தே ஒடுங்குகின்றது. ஆகையால் அவன் அதீதனாக இலங்குகின்றான். அகண்டாகாரத்தில் விரிந்தோடிய காலம் எவ்விதத்திலும் அவனைத் தொடுவதில்லை. ஆதலால் அவன் தொல்லோனாகவும் பழையதிலெல்லாம் பழையவனாகவும் இருந்து வருகிறான்.

மண்ணுலகில் முக்காற்பங்கு நீராக இலங்குகிறது. மண்ணுலகு இருக்கும் வரையில் நீரும் அதில் இருந்து வரும். ஆயினும் அது ஓயாது வடிவம் மாறியும் நிலை மாறியும் இருந்து வருகிறது. இன்றைக்கு ஆவியாயிருப்பது நாளைக்கு உறைபனிக் கட்டியாக ஆவது சாத்தியம். அதற்கு அடுத்த நாள் அது உருகி ஓடையாக ஓடுவதும் சாத்தியம். இவ்விதம் மாறியமையும் தன்மையுடையது நீர். ஆனால் துருவத்தினுடைய பாங்கு அத்தகையதன்று. எது துருவமோ அது யாண்டும் இருந்தபடி இருந்து வருகிறது. எத்தகைய மாறுதலையும் அதனிடத்துக் காணமுடியாது. பரம்பொருள் பழையதிலெல்லாம் பழையவனாகவும் யாண்டும் மாறாதபாங்கு உடையவனாகவும் இருந்து வருகிறான்.

55. अग्राह्यः அக்ராஹ்ய:– இந்திரியங்களுக்கு எட்டாதவன்.

பிரபஞ்சம் இந்திரியங்களுக்கு எட்டுகின்ற பாங்குடையதாய் இருக்கின்றது. உயிர்வகைகள் படைத்துள்ள இந்திரியங்கள் ஐந்து. அந்த ஐந்து இந்திரியங்களின் துணைகொண்டு உயிர்வகைகள் பிரபஞ்சத்தை அறியவும் பொருள்படுத்தவும் செய்கின்றன. அவைகள் முறையே சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப் பாகுபடுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஐந்து இந்திரியங்களுக்கப்பால் மாயப்பிரபஞ்சம் இல்லை. இத்தகைய பிரபஞ்சத்தோடு எவ்விதத்திலும் சம்பந்தப்படாதிருப்பவன் பரமன். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று கரணங்களைக்கொண்டு பிரபஞ்சத்தை விளக்குவது சாத்தியம். ஆனால் பரமனோ இந்த மூன்று கரணங்களுக்கும் அப்பாற்பட்டவன். அப்படியிருக்கின்ற அவனை அறியும் வல்லமை ஜீவனுக்கு அவனருளால் வருகிறது. மூன்று கரணங்களையும் தூயவைகளாக மாற்றியமைக்கவும் அதற்கிடையில் அவனைச் சார்ந்திருக்கும் பாங்கையும் ஜீவாத்மன் பெறுவானாகில் பிறகு இந்த மூன்று கரணங்களைக் கொண்டே ஏகதேசம் அவனை அறியும் திறமை அவனுக்கு வருகிறது. ஆதலால் மனதைச் சுத்தப்படுத்துதல் ஒன்றே அறிய முடியாத அவனை ஒருவாறு அறிந்து கொள்வதற்கு உற்ற உபாயமாகிறது. அப்பொழுது இந்தப் பிரபஞ்சத்தை அறியும் திறமைக்கும் அவன்தான் மூலகாரணம் என்பதை ஆத்ம சாதகன் அறியவருகிறான்.

# ஸ்ரீமத் பாகவதம்

( சுவாமி ஸதானந்தர் )

மானுட வாழ்வின் ஒரே லக்ஷியம், தலே சிறந்த பயன், ஸ்ரீ வாசுதேவரை அடைதலே யாகும் என்பதைப் பாண்டவர்கள் அறிந்தவர் கள். ஜீவிதம் முழுவதும் நல்வாழ்வு வாழ்ந்து ஆத்ம சாதனங்களை நன்கு செய்தவர்கள். சாஸ்திர நியமனங்களை எல்லாம் நன்கு கடைப் பிடித்தார்கள். அவர்கள் உலகில் பற்றற்ற சீலமான வாழ்வு வாழ்ந்ததால் அவர்களுக்குத் தெய்வ சகாயம் ஏராளமாக அமைந்தது. அவர் களுக்குத் தியானம் பண்ணுவது எளிதாயிற்று. மனம் நன்கு ஒருமைப்பட்டது. மனம் பரிசுத்தத் தின் விளைவாக அவர்களுக்குக் கடவுள் தத்து வங்கள் நன்கு விளங்கின. அவர்களுடைய பர நாட்டமும், தெய்வ விசுவாசமும் நாளுக்கு நாள் மேலோங்கின. இவை யாவற்றின் விளைவாக அவர்களுடைய அந்தியகாலம் மகோன்னதமாக அமைந்தது. அவர்கள் ஸாயுஜ்யம் அடைந்தார் கள். அவர்கள் வாழ்நாள் எல்லாம் நேசித்த ஸ்ரீ ஹரியின் திருவடிகளை அடைந்தார்கள். கால் போன போக்கில் சஞ்சரித்து வந்த விதுரரும் பிரபாசா வந்து சேர்ந்தார். சதா சர்வகாலமும் கண்ணனையே தியானித்துக் கொண்டிருந்த அவரும் உடலை உதறி எறிந்து விட்டுப் பித்ருலோகம் அடைந்தார். தன் கணவன்மார்களைப் பின்பற்றித் திரௌபதியும் வைகுண்ட பதவி அடைந்தாள். முன்பு பல தடவை அவளுடைய பக்தியினல் ஈர்க்கப்பட் டுப் பகவான் அவளுக்குப்பிரத்யக்ஷமாகி ஆபத் திலிருந்தும், அவமானத்திலிருந்தும் அவளை ரக்ஷித்திருக்கிறர் அல்லவா ! திரௌபதி ஓர் உயர்ந்த பக்திமதி ஆவாள். கடவுளால் மிகவும் நேசிக்கப்படுவதை விட வாழ்வில் ஒப்பற்ற பாக்கியம் வேறு என்ன இருக்கிறது! பகவான் பாண்டவர்களை மிகவும் நேசித்தார். வாழ் நாள் எல்லாம் அவர்களுக்குத் தெய்வ சகாயம் தேவையான பொழுதெல்லாம் கிடைத்தது. அவர்களுடைய வாழ்வின் இறுதிப்பகுதி, அவர் கள் கிருஷ்ணபதம் அடைந்த வரலாறு மிகவும் புனிதமானது. புனிதமானவைகளுள் புனித மான இந்தப் பகுதியை யாரெல்லாம் பக்தி யுடன் கேட்கிறர்களோ, தாமே வாசிக்கிறர் களோ அவர்களுக்கு ஞான வைராக்கியம், பக்தி எல்லாம் பன்மடங்கு வளரும். அவர்கள் முக்தி அடைவார்கள்.

**அத்தியாயம் 16.**

சூதர் சொன்னது: சௌனகரே! பரீக்ஷித்துச் சிறந்த பக்திமான். பாண்டவர்களுக்குப் பிறகு அவன் நீதியாக ரிஷிகளின் ஆக்ஞைப்படி அர சாண்டான். பரீக்ஷித்து உத்தரன் மகளாகிய ஐராவதியை மணந்து கொண்டான். அவனுக்கு நான்கு புதல்வர்கள் பிறந்தார்கள். மூத்த குமா ரன் ஜனமேஜயன். கிருபர் ராஜகுருவாக அமைந் திருந்தார். கங்கையின் கரையில் ஒன்றன்பின் ஒன்ருக மூன்று அசுவமேதயாகங்களைச் செய்து அவைகளின் முடிவில் அவன் மக்களுக்குக் கணக்கற்ற சன்மானம் வழங்கினன். அந்த யாகங்களுக்குப் பிரசன்னமாயிருந்த தேவர் களும் கூட அதில் பங்குபெற்ற மானுடர்களுக் கெல்லாம் காட்சிக்கு எளியவர் ஆயினர். இங்ங னம் பரீக்ஷித்துப் பெரும் வெற்றிகள் பெற்றுப் சீரும் சிறப்புமாக ராஜ்ய பரிபாலனம் பண்ணி வரும் காலத்தில் ஒரு நாள் கலிபுருஷன் சூத்திர சரீரத்தில் ராஜ கோலத்துடன் பரீக்ஷித்துக்குத் தென்பட்டான். ஒரு பசுவையும் காளைமாட்டை யும் அவன் காலால் உதைத்துத் துன்புறுத்திக் கொண்டிருந்தான்.

சௌனகர் கேட்டார்: — "இந்த விபரீத கோலத்திலும், செயலிலும் காணப்பட்ட அந் தக் கலியைப் பரீக்ஷித்து எதனல் தண்டித்துக் கொல்லாமல் வெறுமனே விட்டான்? ஐயனே! இக்கேள்வியின் மூலம் ஸ்ரீ கிருஷ்ணனைப் பற்றியும், அவனது திருவடிகளிடத்து மாருத, அசையாத பக்தி என்னும் அமுதைச் சதா அருந்திவரும் பக்தர்களைப் பற்றியும் வர்ணனை யாக, விளக்கமாக அமையுமாயின் அதை எங்களுக்கு எடுத்துச் சொல்லுவீராக. இல்லா விட்டால் வேண்டாம். பகவானைப்பற்றியோ அல்லது பக்தர்களைப்பற்றியோ அல்லாத பேச்சுப் பேசுதலும் கேட்டலும் அரிய வாழ் நாளை வீணடித்தலாகும். மானுட வாழ்நாளோ மிகவும் குறுகியது. இந்த எங்கள் யாகத்தில் ஜீவர்களின் முடிவைக் கொண்டு வருபவனுகிய

யமதர்மராஜன் ஆவாஹனம் பண்ணப் பட்டிருக்கிறார், (எழுந்தருளப் பண்ணப் பட்டிருக்கிறார்.) அவருக்கு எங்கள் விலங்கு இயல்புகளைப் பலியாகத் தந்துவிட்டோம். ஆண்டவனையும், தர்மத்தையும் பற்றிமட்டுமே சிந்திப்பது, பேசுவது, செயல்படுவது என நாங்கள் இந்த யாகத்தில் சங்கல்பம் பண்ணியிருக்கிறோம். யமனைப்பற்றிச் சிந்திப்பவர்கள் உபாசிப்பவர்கள் மரணபயத்தை வென்றவர்கள் ஆகிறார்கள்; காலத்தை வென்றவர்கள் ஆகிறார்கள். அவர்களுக்கு வீண்காலம் போக்கவே மனம் வராது. அதற்கு நேரமில்லை. ஆகையால் தேவரீர் பகவான்,பக்தன் இவர்களைப்பற்றிமட்டுமே சொல்லுவீராக. மரணபயமின்றி நாங்கள் கிருஷ்ண கதாமிர்தத்தை ஏகாக்ரதையுடன் கேட்டு வருகிறோம். வாழ்நாளில் பாதி தூக்கத்தில் கழிந்துவிடுகிறது. மீதிப் பாதி வாழ்நாளை வீண்பேச்சு, வீண் செயலில் கழிப்பவன் மண்ணுக்குப்பாரமாவான். தீயோரே இங்ஙனம் செய்வர். இதைத் தவிர்ப்பதற்கே மரண உபாசனை சொல்லப்பட்டிருக்கிறது.

சூதர் சொன்னார்:- "உத்தமரே, யுத்தத்தில் தேர்ந்தவனாகிய பரீக்ஷித்து ஹஸ்தினாபுரத்தில் வாழ்ந்து வரும்போது கலிபுருஷன் தன் ராஜ்யத்துக்குள் பிரவேசித்திருக்கிறான் எனக் கேள்விப்பட்டு மிகுந்த கோபத்துடன் தன் சிறந்த வில்லை எடுத்துக்கொண்டு கலியை வெல்லப் புறப்பட்டான். சிம்மக் கொடியுடன் நீல நிறக் குதிரைகள் பூட்டப்பெற்ற அவனது ரதத்தைப் பின்பற்றி அவனது தேர்ந்த ரத, கஜ, துரக, பதாதி ஆகிய நால்வகைப் படைகளும் புறப்பட்டன. அவன் ஒன்றன்பின் ஒன்றாக வத்ராஸ்வ, கேதுமால், உத்தர குருதேசம், கிம்புருஷம் மற்றும் பல தேசங்களை வென்றான். அத்தேசங்களின் அரசர்களும் ஏராளமான கப்பமும் காணிக்கைகளும் செலுத்தினார்கள். அந்தத் தேசமக்கள் ஸ்ரீ கிருஷ்ணன் புகழ்பாடினார்கள். அவனுடைய மூதாதையர்களான பாண்டவர்களைப்பற்றியும் அவன் பிரம்மாஸ்திரத்தினின்று பகவானால் காப்பாற்றப்பட்டதையும், யாதவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையில் இருந்த பிராண சிநேகிதத்தையும், பாண்டவர்களுக்கு இருந்த ஆழ்ந்த கிருஷ்ண பக்தியையும் குறித்து அவர்கள் பாடினார்கள். அபிமன்யுவின் புதல்வனாகிய பரீக்ஷித்துக்கு இவைகள் எல்லாம் மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தன. அவன் காதுகளுக்கு இவைகள் எல்லாம் மிகவும் இனிய செய்திகளாயின. ஆனந்தத்தால் அவனது கண்கள் மலர்ந்தன. மக்களுக்கு ஏராளமான சன்மானங்களை மகிழ்வுடனும் அன்புடனும் வழங்கினான்.

எந்தப்பெரிய பொருளை மூவுலகும் வணங்கித் துதிக்கிறதோ அந்தப் பெரிய பொருள் பாண்டவர்களுக்குச் சாரதியாகவும், தூதுவனாகவும், ஆலோசனை சபைத்தலைவனாகவும்,வாயில் காப்பாளனாகவும், மெய்க்காப்பாளனாகவும், அவர்களின் நற்குணங்களைப் பாராட்டுபவனாகவும், புகழ்பவனாகவும் இருந்தது. வயதில் மூத்தவனாக இருந்தமையால் யுதிஷ்டிரனை அவ்வப்போது பகவான் லோக சம்பிரதாயப்படி வணங்கவும் செய்தார். இங்ஙனம் மக்கள் அன்றுடம் ஒரு நிகழ்ச்சியாக உரைக்கக் கேட்டுப் பரீக்ஷித்தின் பக்தி பெருகலாயிற்று. இங்ஙனம் நாள்தோறும் நடைபெற்று வருகையில் ஒரு ஆச்சரியமான சம்பவம் நடந்தது. அதன் விபரம் தங்களுக்குச் சொல்லுகிறேன். தர்மராஜன் ஒரு காளையின் வடிவில் சஞ்சரித்துக்கொண்டிருந்தார். அதற்கு ஒரே ஒரு கால்தான் இருந்தது. பூமாதேவி ஒரு பசுவடிவில் களை இழந்து தன் கன்றை இழந்து மிகவும் துயரத்தில் ஆழ்ந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருப்பதை அக்காளை பார்த்தது. அக்காளை பசுவின் அருகில் வந்து "ஓ பூமா தேவி! நீ நலமாக இருக்கிறாயா? உன்னுடைய சோகமான முகத்தினின்று நீ மிகவும் மனத்துயருற்று இருக்கிறாய் என்று யூகிக்கிறேன். என் அன்புடைய தாயே, நீ எதைக் குறித்துத் துயருற்றிருக்கிறாய். மிக ஆப்த உறவினர்கள் யாரையாவது குறித்து விசனப்படுகிறாயா? ஒருவேளை என்னுடைய மூன்றுகால்கள் முறிந்து ஒற்றைக்காலில் இருப்பதைப் பார்த்துத் துன்பப்படுகிறாயா? அல்லது கலியின் செல்வாக்கால் உன்னைக் கீழ்த்தரமான அரசர்கள் ஆளப்போகிறார்கள் என்பதைக் குறித்து வருந்துகிறாயா? இப்பொழுது மக்கள் எந்தவிதமான யாகம், வேள்வி, யச்ஞமும் செய்வதில்லை. அதனால் ஹவிர் பாகத்தை இழந்துள்ள தேவர்களைக் குறித்து விசனப்படுகிறாயா? அல்லது பருவமழை பொய்த்தும்

மழை குறைந்தும் போவதால் மக்கள் உணவு பற்றுக்குறையினால் அவதியுறப் போகிறார்கள் என்று கவலைப்படுகிறாயா? இல்லறத்தான் இப்பொழுது தன் மனைவி மக்கள் பெற்றோர் ஆகிய தன்னைச் சார்ந்தவர்களை நன்கு அன்புடன் பாதுகாப்பதில்லை. மாறாகக் கொடூரமாக நடத்துகிறான். அதை முன்னிட்டு வருந்துகிறாயா? தற்காலத்தில் பிராமணர்கள் தங்கள் பண்புகளை எல்லாம் விட்டு விட்டார்கள். கடமை, அனுஷ்டானம், ஈஸ்வர சிந்தனை ஆகியவைகளை விட்டுவிட்டார்கள். ஆனால் புத்திக் கூர்மை மட்டும் அவர்களிடம் உள்ளது. பண்பு அற்ற அறிவு ஆபத்தானது. நல்ல நிலையில் உள்ள சில பிராம்மணோத்தமர்கள் பண்பற்ற க்ஷத்திரியர்களிடம் பணிபுரிகிறார்கள். அவர்களோ பிராம்மணர்களை நல்ல முறையில் நடத்துவதில்லை. இந்த நிலைமையைக் குறித்து வருந்துகிறாயா?

"கலியின் ஆதிக்கத்தால் அரசர்கள் இப்போது பொறுப்பற்றவர்களாகவும் சுயநலமிக்கவர்களாகவும் ஆகிவிட்டார்கள். அத்தகைய கயவர்கள் சமூகத்தை ஜாதி, மதம், கட்சி, ஏழ்மை என்கிற பெயர்களால் துண்டாடி சமூக ஒற்றுமையைப் பாழ்படுத்தி வருகிறார்கள். மக்களுக்குத் தர்ம அதர்ம விவேகம் குன்றி விட்டது. புலன் இன்பபோகங்களில் ஆழ்ந்து மூழ்கியவர்களாய் உண்ணுதல், உறங்குதல், குடித்தல், ஊர் சுற்றுதல், போகம் அனுபவித்தல் ஆகிய விஷயங்களில் மனம் போன போக்கில் வரையறை இன்றி இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் உன்னை வருத்துகின்றனவா? தாயே! ஸ்ரீ ஹரி தம் ஒவ்வொரு அவதாரத்திலும் ஆற்றிய அற்புத லீலைகள் தேவாமிர்தத்தைக் காட்டிலும் இனிமையானவை. இப்போது ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி உன்னைவிட்டுப் போய்விட்டார் என்பது உனக்கு மிகுந்த வேதனையைத் தருகிறதா? அவரது இனிய ஞாபகம் உன்னை மிகவும் வருத்துகிறதா? ஓ, வசுந்தரா தேவி, நீ வெளுத்தும், இளைத்தும், சோபை குன்றியும், மிகவும் வருந்தியும் இருப்பதற்கு என்ன காரணம்? என்பதைத் தெரிவிப்பாயாக. பிரபு கண்ணன் இங்கே வாழ்ந்த காலத்தில் நீ சகல சௌபாக்கியங்களும் சிறப்பும் பெற்றிருந்தாய். வைகுண்டவாசிகளும் உன்னைப்பார்த்துப் பொறாமைப்படும்படியாக இருந்தாய். ஆ, என்ன தௌர்பாக்கியம்! என்ன காலமாறாட்டம். கலியின் தோஷங்கள் உன்னை இவ்வளவு சோபை இழந்து மங்க வைத்து விட்டனவே."

பூமாதேவி கூறினாள்: "ஓ, தர்மா! நீ எதைக் குறித்து என்னிடம் கேட்கிறாயோ அது அனைத்தும் உனக்கே தெரிந்த விஷயம்தான். ஆயினும் நான் யாவற்றையும் உனக்குச் சொல்கிறேன். கடந்த காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் அருளால் நீ நான்கு கால்கள் வாய்த்திருந்தாய். மக்கள் தர்மத்தை அனுஷ்டித்து உன் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று மகிழ்ச்சியாக ஆனந்தமாக வாழ்ந்து வந்தார்கள். மக்கள் சத்தியம், தூய்மை, அன்பு, தானம், மன்னித்தல், திருப்தி, எளிமை, சமத்துவம், புலனடக்கம், புறமதத் துவேஷம் இன்றித் தன் மதத்தில் தீவிரப் பற்றுதல், தபஸ், பக்ஷபாதமற்ற தன்மை, கடவுள் இச்சைப்படி யாவும் நடக்கின்றன என்கிற கடவுளின் இச்சையைச் சார்ந்து வாழ்தல், லாப நஷ்டங்களில், இன்பதுன்பங்களில் நடுநிலைமை வகித்தல், சாஸ்திரங்களைப் படித்து, கேட்டு, அறிந்து கொள்ளும் அவா, ஆத்மா அனாத்ம விவேகம், துறவு, தன்னடக்கம், உயர்ந்த லக்ஷியங்களில் நிலைபெற்று நிற்கிற வல்லமை, தைரியம், தெளிவு, பராக்கிரமம், கடமை தவறாமை, சுதந்திரம், சாமர்த்தியம், அழகு, பொறுமை, கோபத்தை அடக்கிக்கொள்ளும் வல்லமை, புத்திக்கூர்மை, அடக்கம், நல்ல பண்புகள், ஏதோ ஒரு கலையில் தனித்திறமை, நன்கு புரிந்துகொள்ளும் தன்மை, அமைதி, யாவரிடத்திலும் மரியாதை, பக்தி, நல்வாழ்வு, கர்வமற்ற தன்மை, யாவருடைய நலத்தையும் பேணுதல், ஏழைக்கு இரங்குதல், கம்பீரம் ஆகிய தெய்வ சம்பத்துக்களை நாடுபவர்களாக இருந்தார்கள். நல்ல மனம் படைத்தவர்களும், கடவுளையே நாடும் பக்தர்களும், துறவியர்களும் இக்குணங்களை வளர்த்ததன் வாயிலாக அவர்கள் அருளுக்குப் பாத்திரமானார்கள். பகவான் ஸ்ரீநிவாசன் இந்த எல்லாக் குணங்களும் இவற்றிற்கு மேலும் எல்லா நற்குண சம்பத்துக்களும் உடையவராக விளங்கினார். இவை யாவற்றுக்கும் அவர் இருப்பிடமாவார். அவரது

மானுட நாடகத்தில், ஜீவிதத்தில், கோலத்தில் இந்த மங்கள குணங்கள் யாவும் அனுஷ்டித்துக் காட்டப்பட்டன. இக்குணங்கள் உயிர் பெற்றன எனலாம். அந்தோ! அவர் தமது திருக்கோலத்தைக் களைந்துவிட்டுத் தமது யதாஸ்தானம் அடைந்து விட்டார். இப்போது கலியின் தோஷங்கள் மானுடரைப் பீடித்திருக்கிறது. என் வருத்தத்துக்கு இதுவே காரணம்.

"தேவர்களில் சிரேஷ்டமானவரே! என் தௌர்ப்பாக்கியத்தை மட்டும் குறித்து நான் வருந்தவில்லை தர்மராஜாவாகிய நீரும் மற்றத் தேவர்களும், துறவியர்களும், பித்ருக்களும், வர்ணாஸ்ரம தர்மங்களும் எல்லாமே எதிர் காலத்தில் துன்பப்படப்போகின்றன என்பதும் என்னை வருத்துகின்றது. உத்தமரே! என் பிரபு ஸ்ரீ கிருஷ்ணனுடைய பிரிவை என்னால் தாங்க முடியவில்லை. யாருடைய தரிசனம் பிரம்ம தேவரையும் தேவர்களையும் எப்போதும் தியானத்தில், பேரானந்தத்தில் ஆழ்த்தி விடுகிறதோ, யாருடைய பாத சேவையைப் பெரிதும் நாடி கமலாலயத்தைத் துறந்து வந்து லக்ஷ்மிதேவி பணிவிடை பண்ணி வருகிறாளோ, யாருடைய பாதங்களில் சங்கு சக்கர, துவிஜ, கதா அடையாளங்கள் அழகு செய்கின்றனவோ, அத்திருப்பாதங்கள் என் மேல் நடமாடியதால் நான் ஒப்பற்ற தெய்வ எழிலும், நிகரற்ற சௌபாக்கியங்களும் பெற்று விளங்கினேன். அதை முன்னிட்டு நான் மிக்க பெருமைப்பட்டேன். அந்தோ! அந்தப் பெருமையின் விளைவாகவே என் பிரபு என்னை விட்டுப் போய்விட்டானே! நூற்றுக்கணக்கான கெட்ட அரசர்களும் படைகளும், அவர்களின் போராட்டங்களும், பாபங்களும், போட்டிகளும் எனக்குப் பாரமாயின. இந்தத் தீமையை, பூபாரத்தைத் துடைக்கவே தயாநிதியாகிய என்பிரபு யாதவ குலத்தில் ஜகன்மோகனாக மானுட வடிவத்தில் அவதரித்தான். அப்பொழுது நீரும் இழந்த கால்களை மீண்டும் பெற்று மகிழ்ந்து வாழ்ந்தீர். நான்கு கால்களில் சஞ்சரித்தீர். கடவுளின், என்பிரபுவின் பிரிவை நானே நீரோ யார்தான் தாங்கிக்கொள்ள இயலும்! தற்பெருமையும் கர்வமும் படைத்த சத்தியபாமா போன்ற கிருஷ்ண பத்தினிகளும் பகவானின் இனிய தன்மைகளால், அன்பால் தங்களின் கீழான குணங்களை உதறித் தள்ளிவிட்டு ஸ்ரீ கிருஷ்ண பக்தியில் மூழ்கிவிட்டார்கள் அல்லவா? அவனையே சரணடைந்து தங்களை ஒப்படைத்துவிட்டார்கள் அல்லவா? அந்த மனமோஹனன், வனமாலி தன் தெய்வத்திருப்பாதங்களால் என்மேல் நடமாடியபோது நான் மயிர்க்கூச்சு அடைந்தவளாகிப் பரவசமடைந்து நின்றேன். ஆ! மதுசூதனனாகிய அவன் திருப்பாதங்களால் கிளப்பப்பட்ட புழுதி படிந்து நான் எவ்வளவு சோபையுற்று விளங்கினேன்" என்று மேலும் பேசமுடியாமல் பூமாதேவி நின்றாள். இங்ஙனம் பூமாதேவியும் தர்மதேவரும் சம்பாஷித்துக்கொண்டிருந்தபோது பரீக்ஷித்து மகாராஜன் கிழக்கு நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் சரஸ்வதி நதியின் கரைக்கு வந்து சேர்ந்தான்.

## அத்தியாயம் 17

சூதர் சொன்னார்:—மானுடரில் சிறந்தவரே! இங்ஙனம் சம்பாஷித்துக்கொண்டிருந்த இந்த மங்களமான இரண்டு விலங்குகளையும் அரசனைப்போன்று உடைதரித்தவனும் பண்பில் சூத்திரனுமாகிய ஒருவன் தடியால் அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருப்பதைப் பரீக்ஷித்து பார்த்தான். இரக்கமின்றிக் கொடூரமாய் அடிக்கப்பட்டதால் அது பயத்தால் நடுங்கிக் கழிந்து கொண்டிருந்தது. தேவதை போன்று வணங்கப்படவேண்டிய அப்பசுவை அந்த சூத்திரன் காலால் உதைத்து வதைத்துக்கொண்டிருந்தான். தன் குழந்தையை இழந்த தாயைப் போன்று அப்பசு அழுதுகொண்டிருந்தது. தன் ரதத்தில் இருந்து இக்காட்சியைக் கண்ட பரீக்ஷித்து கையில் வில்லை ஏந்திக்கொண்டு அம்மனிதனை நோக்கி இடி முழக்கம்போல் கர்ஜித்தான்:- "அடேய்! உன் கொடிய செயலை நிறுத்து. நம்மால் பாதுகாக்கப்பட வேண்டிய எளிய ஜீவர்களை இப்படி வதைக்கும் நீ யார்? நாடகத்தில் நடிக்கும் அரசனைப்போன்று ராஜகோலத்தில் தோன்றுகிறாய். ஆனால் உன் செயலோ நீ பண்பில் கீழ்மகன்-சூத்திரன் என விளக்குகிறது. ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனர்கள் இப்போது இவ்வுலகில் இல்லை என்பதால் இந்தக் கொடிய செயலைச் செய்ய உனக்குத் தைரியமும் துணிச்சலும் உண்டாகிவிட்டதா? உன்பாபச் செயலுக்கு உனக்கு இதோ மரண தண்டனை தரப்போகிறேன்."

# சுவாமி பிரேமானந்தர் வாழ்வும் வாக்கும்

( பிரம்மச்சாரி சேகர் )

தோற்றத்துக்கு வருவன அனைத்தும் அழிந்து போய்விடுகின்றன; ஆனால் மனிதன் பேசிய வார்த்தைகளுக்கு யாண்டும் அழிவில்லை. இதயத்தின் ஆழத்திலிருந்து வெளிவரும் சொற்கள் அளவற்ற வலிமையுடையன. 'நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்' என்பது பொய்யாமொழி. திரி கரணங்களாலும் தர்மத்துக்கு முரண்படாமல் வையத்துள் வாழ்வாங்கு வாழும் சான் றோர் வாயினின்று சத்திய வார்த்தைகளே வெளிவருகின்றன. மேற்போக்காகப் பார்க்கு மிடத்து ஞானிக்கும் அறிவிலாப் பேதைக்கும் வேறுபாடு ஏதும் இருப்பதாகத் தெரிவதில்லை. யாரோ ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலான மெய்ஞ்ஞானிகள் வாழ்ந்து மறைந்ததற்கான தடயம் எதையும் விட்டுச் செல்வதில்லை. பரம்பொருளைப்பற்றிய ஞானம் அன்னவர் களிடத்து உண்டாகியிருப்பதால் இறைவனைப் பற்றிய மர்மத்தையும் அளவிடற்கரிய மகிமை களையும் அவர்களும் ஓரளவு பெற்று விளங்கு கின்றனர். பிரேமானந்த சுவாமிகள் அப்பழுக் கற்ற பரிபூரணமான துறவியாக மிளிர்ந்தார். இது குறித்துப் பரமஹம்சதேவரும், "பாபு ராம் எலும்புவரைக்கும் பரிசுத்தமானவன்; எந்தவிதமான கெட்ட எண்ணமும் அவன் மன தில் உதிக்க முடியாது" என்று வியந்து கூறி யிருக்கிறார். அவருக்கு அறிமுகமாயிருந்த அனைவருடைய ஏகோபித்த அபிப்பிராயமும் இதுதான். அவர் அன்பே வடிவெடுத்தவராக வும் இருந்தார்.

வங்காளத்தில் ஹூக்ளி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வச் செழிப்புமிக்க அன்ட்பூர் என் னும் கிராமத்தில் 1861ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பத்தாம் நாள் பிரேமானந்த சுவாமிகள் அவதரித்தார். அவருடைய பிள்ளைத் திரு நாமம் பாபுராம் என்பதாகும். அவருடைய சகோதரி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் பணம் படைத்த பக்தர்களில் ஒருவராகிய பல ராம் போஸுக்கு மணம் செய்விக்கப்பட்டிருந் தார். நற்குடியில் தோன்றி நல்லொழுக்கமும் பக்தியும் வாய்க்கப்பெற்றிருந்த அவருடைய பெற்றோர்கள் பாபுராமிடம் தென்பட்ட தெய் விக இயல்புகளைக் குறித்துப் பெரும் மகிழ்ச்சி யுற்றார்கள் என்று நாமே ஊகித்து அறிந்து கொள்ளலாம். ஐந்து அல்லது ஆறுவயது பாலகனாக இருந்தபோது பாபுராம் புனித மான வாழ்வை நடாத்தப்போகும் அறிகுறி கள் பெற்றவராக விளங்கினார். இல்லற வாழ்க் கையைப்பற்றி யாரேனும் அவரிடம் விளையாட் டாகப் பேசினாலும்கூட அவர் தம் உயிரே போய்விடுவது போன்ற வேதனைக்காளானார்.

பாபுராமிற்கு எட்டு வயதானபோது தாம் மரங்கள் சூழ்ந்த ஒருகுடிசையில் தனிமையாக வாழவேண்டும் என்ற பெரு விருப்பம் உடைய வராக இருந்தார். அவ்வப்பொழுது அவர் கங்கைக்கரையோரம் வசித்துவந்த சாதுக்க ளைத் தரிசித்து வந்த காரணத்தால் அவர் மனதில் இவ்வாறு தனிமை வாழ்வு வாழ வேண்டும் என்ற ஆசை தோன்றியிருக்கக் கூடும். ஆயினும் தம் விளையாட்டுத் தோழர் களிடையே அவர் தம் இனிய சுபாவத்தினால் பேரன்பிற்குரியவராக விளங்கினார். தொடக் கக் கல்வியை முடித்துக்கொண்டு பாபுராம் கல்கத்தாவில் ஷியாம்புகூருக்கு அருகில் இருந்த கல்விக்கூடத்திற்கு உயர் கல்வி பெறும்பொருட்டுச் சென்றார். ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிருதத்தை உலகிற்கு வழங்கிய 'ம' என்று சுருக்கமாகக் குறிப்பிடப்பட்ட மகேந்திரநாத குப்தா அப்பள்ளியின் தலைமையாசிரியராகப் பணியாற்றிவந்தார். அவரும் அதேபள்ளியில் கல்விபயின்று வந்த ராக்கால் என்னும் பிள் ளைத் திருநாமம் படைத்த பிரம்மானந்த சுவாமி களும் அத்யந்த நண்பர்களாயினர். ராக் கால் அந்தச் சமயத்தில் தக்ஷிணேசுவரத்தில் இருந்த காளிகோயிலில் அர்ச்சகராகப் பணி புரிந்துவந்த ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தரிசிக்க அவ்வப்பொழுது சென்று கொண்டிருந்தார். அந்த இளம் அர்ச்சகரைப்பற்றிக் கேள்விப் பட்ட பாபுராம் தாமும் அவரைப் பார்க்கப் பெரிதும் விருப்பம் கொண்டவரானார்.

1882 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு சனிக்கிழமையன்று சூரிய அஸ்தமனம் ஆகிய

தருணத்தில் அவர்கள் இருவரும் தக்ஷிணேசுவரம் சென்றடைந்தனர். அது முதல் மதிப்பிடற்கரிய நான்கு ஆண்டுகள் அவ்விருவரும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடனேயே தங்கி வாழ்ந்து வந்தனர். அந்நாட்களில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் எளிதில் புரிந்துகொள்ள முடியாத தத்துவ உண்மைகளை எளிய உபமானக்கதைகளாலும் எல்லாவற்றிற்கும் மேலாகத் தம்முள் பொங்கிப் பீறிட்டுக் கிளம்பிய ஆன்மீகப் பேருணர்ச்சியாலும் தம்முடைய நெருங்கிய சீடர்களைத் தங்கள் பணியைத் திறம்பட ஆற்றுவதற்கான திறம்படைத்தவர்களாக மாற்றக்கூடிய விதத்தில் போதித்து வந்தார். உலக அரங்கில் பல்வேறு தரப்பட்ட மக்களிடையே ஒரு சிம்மத்தைப்போல் கர்ஜனை புரிந்த விவேகானந்தராயினும் சரி, மிக அரிதாகப் பயணம் செய்தவரும் சொற்பொழிவு நிகழ்த்தியவருமான பிரேமானந்தராயினும் சரி, அனைவருமே தத்தமக்குரிய தகுதிக்கும் திறமைக்கும் ஏற்றவாறு குருதேவருடைய கருணைக்கு ஆட்பட்டனர்.

தக்ஷிணேசுவரத்தில் நிலவியிருந்த அமைதியான சூழ்நிலையும் அழகும் பாபுராமுடைய உள்ளத்தைக்கொள்ளை கொண்டன. மேலும் பெருமை மிக்க ஓர் அன்னையைப் போல் உயர்ந்தோங்கியிருந்த காளி ஆலயம் கூர்த்த மதியுள்ள அந்த இளைஞருக்குப் பேருணர்வூட்டக் கூடிய காட்சியாக இருந்தது. அந்த இளைஞர்கள் இருவரும் ஆலயத்தினுள் சென்றபொழுது பரமஹம்சதேவர் ஆங்கு இல்லை. எனவே, ராக்கால் தாமே விரைந்து வெளியே சென்று தெய்விகப் பரவச நிலையிலிருந்த குருதேவரைக் கையைப் பிடித்து எச்சரிக்கையுடன் உள்ளே அழைத்து வந்தார். சிறிது நேரத்தில் அவருக்குப் புறவுலக நினைவு திரும்பியது. பாபுராமை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தவுடனே குருதேவர் மகிழ்ச்சியுடன் கூறியதாவது: "ஓ! அப்படியானால் நீ பலராமின் உறவினன் ஆகிறாய்; ஆகவே, நீ எங்களுக்கும் கூட உறவினன்தான்." பிறகு பாபுராமின் அங்க அடையாளங்களை மிகக் கவனமாகக் கூர்ந்து கவனித்துவிட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் திருப்தியைத் தெரிவிப்பதுபோல் தலையை அசைத்துக்கொண்டார். ஒரு மனிதனுடைய உடற்கூறுகள் நிச்சயமாக அவனுடைய ஆன்மீக வளர்ச்சியை விளக்குவனவாகவே இருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அன்று இரவு பாபுராம் குருதேவர் தங்கியிருந்த அறைக்கு வெளியில் படுத்துக்கொண்டார். திடீரென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பாபுராம் அருகில் படுத்திருந்த ராம்தயாளை எழுப்பி மெதுவான குரலில் 'தயவுசெய்து நரேந்திரனை இங்கு அழைத்து வருவாயாக' என்று படபடப்புடன் கூறினர். மேலும் அவர், 'என் இதயத்தை யாரோ ஈரத் துணியைப் பிழிவதைப்போன்று உணர்கிறேன்' என்றும் "நரேந்திரன் சாக்ஷாத் சிவ சொரூபமேயாவான். அவனன்றி நான் ஒரு கணமும் உயிர் தரிக்கமாட்டேன்" என்றும் கூறிவிட்டு அப்பால் சென்றவர் ஒரு மணிநேரம் கழித்து அதே மனநிலையில் இருந்தவராகத் திரும்பி வந்தார். இதே மாதிரி அன்று இரவு முழுவதும் குருதேவர் விநோதமாக நடந்துகொண்டதைப் பார்த்துப் பாபுராம் வியப்பும் மன நெகிழ்ச்சியும் அடைந்தார். நரேந்திரன்பால் குருதேவர் கொண்டிருந்த அன்பு அத்தகையதாயிருந்தது. அதேசமயத்தில், நரேந்திரன் என்று அழைக்கப்பட்ட விவேகானந்த சுவாமிகள் குருதேவர் முன்னிலையில் பராமுகமாக நடந்துகொண்டது பாபுராமிற்குக் குழப்பம் தருவதாயிருந்தது. மறுநாள் காலையில் வியக்கத்தக்க விதத்தில் அமைதியும் சாந்தமும் நிரம்பிய முகத்துடன் குருதேவர் தம் அறையில் அமர்ந்திருந்ததைப் பாபுராம் பார்த்தார். அவரிடம் விடைபெற்றுக்கொள்ளப் பாபுராம் சென்றபொழுது தக்ஷிணேசுவரத்திற்கு அதிவிரைவில் மறுபடியும் வரும்படி குருதேவர் அவரிடம் கூறினர். அவரும் அடுத்த ஞாயிற்றுக்கிழமை வருவதாக மனதிற்குள் முடிவுசெய்துகொண்டார்.

அவ்வாறு பாபுராம் குறித்த நாளில் காளி ஆலயத்துக்கு வந்தபோது பரமஹம்சதேவர் அவரைப் புன்னகையுடன் வரவேற்று, 'ஆ மறுபடியும் நீ வந்து விட்டாயா? நல்லது. நீ ஏன் பஞ்சவடியைச் சென்று பார்க்கலாகாது?' என்று உற்சாகத்துடன் இயம்பினர். குருதேவர் ஹிருதயருடன் சேர்ந்து ஓரிடத்தில் தாமே ஐந்து புனிதமான மரங்களை வட்டமாக

நட்டு வைத்து அவ்விடத்தில் பல ஆண்டுகளாகத் தவத்தில் கடுமையாக ஈடுபட்டு வந்தார்; அந்த இடம்தான் பஞ்சவடி என்று அழைக்கப்பட்டது. 'நரேந்திரனுடன் மற்றும் பலர் உல்லாசமாக அங்குச் சென்றுள்ளனர்; நீ நரேந்திரனை அங்குச்சந்திக்கலாம்' என்று பரமஹம்சதேவர் பாபுராமிடம் கூறினர். அதன்படி பாபுராம் அந்த இடத்தை அடைந்தவுடனே, தாம் முன்பொரு சமயம் சிறுவனாக இருந்த போது கனவு கண்டு வந்த மரங்கள் சூழ்ந்த புனிதமான இடம் அதுதான் என்று தெளிவாகக் கண்டார்! அது மட்டுமன்று, தமக்கும் குருதேவருக்கும் இடையே காலங்காலமாக இருந்துவந்த ஆன்மீகப் பிணைப்பைப் பற்றி முழுக்க முழுக்க அறிந்துகொள்ளப் பாபுராம் பல வருடங்கள் காத்திருக்க வேண்டும் என்பதும் தெளிவாகியது.

தூய்மைக் குறைவான நபரையோ பொருளையோ பரமஹம்சதேவர் ஸ்பரிசிக்க நேர்ந்துவிட்டால் அவர் உடல் தாங்கவொண்ணாத வேதனையால் எவ்வாறு துடித்துப்போய்விடும் என்பதைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிய சரிதங்கள் தெரிவிக்கின்றன. தூய அன்னையும் கூட இதே இயல்பைப் பெற்றவராய் இருந்தார். பாபுராம் எவ்வளவு பரிசுத்தமானவர் என்பதற்குக் குருதேவர் தெய்வீகப் பரவச நிலையில் இருந்தபோதெல்லாம் பாபுராம் ஒருவர்தான் அவரை ஸ்பரிசிக்க முடிந்தது என்பதே போதுமான சான்றாக விளங்குகிறது. "பாபுராம் உணவூட்டினல் மட்டும்தான் அந்தச் சந்தர்ப்பங்களில் நான் உண்ண முடிந்தது" என்று குருதேவர் கூறியிருக்கிறார்.

பாபுராமைக் குறித்துப் பரமஹம்ச தேவரும் மகேந்திரரும் பேசிக்கொண்ட உரையாடல் பற்றி 'ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிருதத்தில்' பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

பரமஹம்சதேவர் : "நேற்றுப் பாபுராமினுடைய அந்தரங்க இயல்பு எனக்கு முற்றிலும் புலப்பட்டது. ஆகையால்தான் அவன் இங்கேயே தங்கியிருக்க வேண்டும் என்பதில் நான் இவ்வளவு அக்கறையுள்ளவனாக இருக்கிறேன். தாய்ப் பறவையானது உரிய காலத்தில் குஞ்சு பொரிக்கின்றது. பாபுராமைப் போன்ற இளைஞர்கள் பரிசுத்தமான இதயம் படைத்தவர்கள். அத்தகையவர்கள் இன்னும் 'காமகாஞ்சனம்' என்னும் வலைக்குள் வீழ்ந்துவிடவில்லை. அப்படித்தானே?"

மகேந்திரர் : "அது உண்மைதான், ஐயனே. அவர்கள் இன்னும் களங்கம் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்."

பரமஹம்சதேவர் : "அவர்கள் புத்தம் புதுப் பானைக்கு நிகரானவர்கள். அதில் வைக்கப்பட்டுள்ள பால் ஒருபொழுதும் கெட்டுப் போவதில்லை."

மகேந்திரர்: "ஆம், ஐயனே."

பரமஹம்ச தேவர்: "பாபுராம் இங்கிருப்பது எனக்கு முற்றிலும் அவசியம். நான் என்னை மறந்து பரவசநிலையில் ஆழ்ந்திருக்கும் பொழுதெல்லாம் அவனைப்போன்ற ஒருவரின் உதவி எனக்குத் தேவைப்படுகிறது. அவன் உடனடியாகத் தக்ஷிணேசுவரம் வந்து என்னுடனேயே தங்கியிருப்பது சாத்தியப்படாது என்றும் அது பல சிக்கல்களை உண்டாக்கும் என்றும் கூறுகிறான். அவனுடைய உறவினர்களாலேயே அத்தகைய தொந்தரவுகள் ஏற்படக்கூடும். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமாவது அவன் இங்கு வரவேண்டும் என்று நான் கூறிக்கொண்டிருக்கிறேன்."

இவ்வுரையாடல் பாபுராம் குருதேவரை முதன்முதலில் தரிசித்தபின் சுமார் ஒன்றரை வருடங்கள் கழித்து 1884ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் தேதி நடைபெற்றது. எனவே, படிப்பும் குடும்பப் பொறுப்புகளும் பாபுராமைக் குருதேவரிடம் அடிக்கடி வரமுடியாதபடி பிரித்து வைத்திருந்தன என்று நாம் யூகித்துக் கொள்ளலாம். குருதேவர் மிகவும் எச்சரிக்கையாய் இருந்ததால் காரணமில்லாமல் குடும்ப உறவுகளில் தாம் குறுக்கிடுவதை விரும்பியதில்லை. அவ்வாறே பாபுராம் விஷயத்திலும் அவர் நடந்துகொண்டார். இப்படி இருந்தும் கூட, பாபுராமிற்குப் பள்ளிப்படிப்பில் ஆர்வம் குறைந்துகொண்டே வந்தது. ஒருமுறை பாபுராமுடைய மனநிலையை அறிந்துகொள்வதற்காகப் பரமஹம்சதேவர் அவரிடம் கேட்டார்: "உன் புத்தகங்களெல்லாம் எங்கே? நீ தொடர்ந்து படிப்பதாக உத்தேசம் இல்

லையா?" பிறகு மகேந்திரரைப் பார்த்துக் கூறினர்: "பாபுராம் எண்ணிக்கொண்டிருப்பதுபோல் உலக வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டே இறைஞானம் பெறுவது மிகக் கடினமானது." மீண்டும் பாபுராமிடம் பரமஹம்சதேவர் கூறியதாவது: "இறைவனைப் பற்றி அரைகுறை ஞானம் பெற முயல்வதால் உனக்கு என்ன பயன்? வஸிஷ்ட மஹரிஷி கூடத் தம் மகன் இறந்துபோனது குறித்துப் பெரிதும் புலம்பித் தவித்தார். இதைப்பற்றி வியப்புற்றவனாக இலட்சுமணன் தன் தமையன் இராமனிடம் கேட்டான். இராமன் கூறியதாவது: "இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? ஞானம் உதயமான ஒருவனிடம் அக்ஞானத்தின் அறிகுறிகளும் தென்படத்தான் செய்கின்றன. நாம் செய்யவேண்டியதெல்லாம் ஞானத்தையும் அக்ஞானத்தையும் ஒருங்கே கடந்து செல்வதுதான்." காலில் தைத்துவிட்ட முள் ஒன்றை மற்றொரு முள்ளால் களைந்துவிடலாம். பிறகு, நீ இரண்டு முட்களையுமே வீசி எறிந்துவிடவேண்டும். அங்ஙனம், ஒருவன் பாப கர்மத்தைப் போக்கும் பொருட்டுப் புண்ணிய கருமத்தைச் செய்கின்ருன். பிறகு புண்ணியத்தின் பலனையும் துறந்து அப்பால் செல்கின்ருன்." இதைச் செவிமடுத்த பாபுராம் புன்னகையுடன் இயம்பியதாவது: "நான் விரும்புவதும் அதுவே."

"ஆனல், என் குழந்தாய், நீ இரண்டையுமே பற்றிப் பிடித்துக்கொள்ள முடியுமா என்ன? உனக்கு ஞானம் வேண்டுமாகில் உலகப்பற்றிலிருந்து முற்றிலும் விடுபடுவாயாக" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரிடம் அறிவுறுத்தினர்.

அவ்விளைஞரோ புன்னகையுடன், "தாங்களே என்னை உலகப்பற்று நீங்கியவனாக மாற்றி விடுங்களேன்" என்று இயம்பினர்.

பிற்காலத்தில் பிரேமானந்த சுவாமிகள் தம்மிடமும் மற்ற சிஷ்யர்களிடமும் குருதேவர் எவ்வாறு ஒரு தாயைப் போல் கருணை நிரம்பியவராகத் திகழ்ந்தார் என்பதைப் பற்றி அடிக்கடி வியந்து பேசுவது வழக்கமாயிருந்தது. ஒருசமயம் நகைச்சுவை உணர்வுள்ளவராகவும், அதே சமயம் எதிலும் கணக்குப் பார்க்கும் லௌகிக புத்தி உள்ளவராகவும், சகிக்கமுடியாத அளவிற்கு ஒரு பிரச்னையாகவும் இருந்த ஹஸ்ரா என்பவர் பாபுராமிடம் சொன்னதாவது: "ஏதாவது சித்திகள் உங்களுக்கு வேண்டும் என்று நீங்கள் ஏன் ராமகிருஷ்ணரைக் கேட்கக்கூடாது? அவர் நீங்கள் உண்பதற்கு ஏதேனும் தின்பண்டங்கள் தருகிருர்; நீங்களும் அத்துடன் திருப்தியடைந்து விடுகிறீர்கள்! அத்தகைய முட்டாளாக நீங்கள் இருக்கலாகாது. அவரிடமிருந்து உயர்ந்த ஒன்றைப்பெற முயலுங்கள்."

இவ்வாறு அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைத் தம் அறையிலிருந்தவாறே குருதேவர் கவனித்துக்கொண்டிருந்தார். பாபுராம் பின்னர் தம்மிடம் வந்ததும் அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்று குருதேவர் உசாவினர். அதற்கு விடையாகப் பாபுராம், "தங்களிடம் ஏதாவது அஷ்ட சித்திகளைக் கேட்டுப் பெறும்படி என்னிடம் ஹஸ்ரா கூறினர்" என்று எதையும் மறைக்காமல் வெளிப்படையாகத் தெரிவித்தார். உடனே பரமஹம்சர் ஹஸ்ராவிடம் சென்று கடுமையாகக் கேட்டதாவது: "இந்த இளைஞர்களுக்கு நீ எத்தகைய முட்டாள்தனமான யோசனையைக் கூறியிருக்கிருய்? அவர்கள் ஏன் என்னிடம் சித்திகளைக் கேட்டுப் பெற வேண்டும்? நான் அடைந்திருக்கும் எல்லாமே அவர்களுக்கு முற்றிலும் உரியன என்று அவர்களுக்குத் தெரியாதா? நானே முழுவதுமாக அவர்களுக்குச் சொந்தமானவன்; எனக்கும் அவர்களுக்கும் என்ன உறவு என்று அவர்கள் நன்கு அறிவார்கள். இது வேண்டும், அது வேண்டும் என்றெல்லாம் என்னிடம் கேட்கும் அற்பபுத்தி அவர்களிடம் இல்லை."

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தம் சீடர்களிடம் கொண்டிருந்த கருணைக்கு அளவேயில்லை. பாபுராம் அவருக்கு விசிறி வீசிக்கொண்டிருந்தபோது பரமஹம்சதேவர் பாபுராமிடம் "நீ என்னுடைய படுக்கையிலேயே தூங்கலாம்" என்ருர். அதற்குப் பாபுராம் "அது மரியாதைக் குறைவானது" என்று சொன்னர். அதற்குப் பரமஹம்சர், "நீ வெளியே படுத்துக்கொண்டாயானல் கொசுத் தொல்லைக்கு ஆளாவாய். நீ இங்கேயே படுத்துக்கொள். அவசியம் ஏற்படும் பொழுது நான் உன்னை எழுப்பிவிடுகிறேன்" என்ருர். (தொடரும்)

# ஞான வெட்டியான்-4

**சான்ரோர் ஒருவர் செய்த சமுதாய சேவை**

நாட்டுமக்கள் அனைவருக்கும் கல்வியறிவு கிடைக்க வழிசெய்தது பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் புரிந்த மிகச்சிறந்த நன்மையாகும். அதன் பலனாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவன் மருத்துவத் துறையில் பட்டம் பெற முடிந்தது. அந்த மாணவன் தான் டாக்டர் பல்ப்பு. அந்நாட்களில் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் தத்தம் துறைகளில் உடனே வேலை வாய்ப்புப் பெற்றார்கள். ஆனால் டாக்டர் பல்ப்பு விரும்பத்தகாத ஓர் அனுபவத்திற்காளானார். அவருடைய சொந்த மாநிலம் திருவாங்கூர் ஆகும். அங்குப் பதவி வெறியும் ஜாதி அபிமானமும் கட்டுக்கடங்காதவாறு பரவியிருந்தன. இவ்வாறு அவமரியாதைக்கு ஆளான டாக்டர் பல்ப்பு தம் மாநிலத்திலிருந்தே விரட்டப்பட்டார். மன முடைந்த நிலையில் அவர் பெங்களூர் சென்று மருத்துவராகப் பணியாற்றத் தொடங்கினார். ஆயினும், தம் சொந்த மாநிலத்தில் அவர் அடைந்த அவமானம் இன்னும் நீங்கிவிடவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் டாக்டர் பல்ப்பு அப்பொழுது யாருக்கும் அறிமுகமாகாத துறவியாக இருந்த விவேகானந்த சுவாமிகளைத் தற்செயலாகச் சந்தித்தார். தாம் யார் என்பதை வெளிப்படுத்தாமல் இருப்பதற்காக இடத்திற்குத் தகுந்தபடி பெயரை மாற்றிக் கொண்டு இந்திய நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் ஆராய்ந்து அறிந்துகொள்ளும் பொருட்டுச் சுவாமிகள் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பரிவ்ராஜகராகச் சுற்றி வந்தார். சுவாமிகளின் கம்பீரமான தோற்றப் பொலிவால் டாக்டர் பல்ப்பு கவரப்பட்டார். கேரளாவில் இருந்த ஈழவர் வகுப்பினருக்கு ஏற்பட்ட சமுதாயப் பிரதிகூலங்களால் பட்ட அவதியைப் பற்றியும் உடைந்துபோன தம் மன நிலையைப் பற்றியும் சுவாமிகளிடம் டாக்டர் மனம் திறந்து கூறினார். நாடு முழுவதிலும் பிற்பட்ட வகுப்பினர் நடத்தப்படும் இழிநிலை குறித்து அந்தத் தேசபக்தர் துறவி தெளிவாக அறிந்து கொண்டார். சிறிது நேரம் அவர் சிந்தனை உள்முகமாகத் திரும்பியிருந்தது. பிறகு கவலையில் ஆழ்ந்திருந்த டாக்டருக்கு ஆறுதல் கூறும் பொருட்டுச் சுவாமிகள் பின்வருமாறு கூறினார்: "வளர்ந்துவரும் கொடிக்கு அதன் வாழ்நாள் முழுவதும் ஓர் உறுதியான பற்றுக்கோடு தேவை. மானுடன் ஒருவன் தன்னை அந்தக் கொடி இருப்பதைப் போன்ற ஒரு சூழ்நிலையில் வைத்துக்கொள்ளக்கூடாது. உறுதியான அடிமரம் படைத்துள்ள மரம் போன்று வளர வேண்டும். மன உறுதியிலும் தற்சார்பிலும் சிறந்தவனாக அவன் தன் சொந்தக் கால்களிலேயே நிற்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையாயின் அவன் கட்டாயமாகச் சமாளித்தாக வேண்டிய பிரச்னைகளுக்கு ஒரு முடிவே இருக்காது. கூடிய விரைவில் உங்கள் வகுப்பில் ஞானி ஒருவர் தோன்றி உங்களுக்கு மன உறுதியையும் தற்சார்பையும் ஊட்டுவார்."

அவ்வாறே சான்றோர் ஒருவர் தோன்றித் தம்மிடம் தன்னம்பிக்கையையும் தற்சார்பையும் ஊட்டியதைத் தம் வாழ்நாளிலேயே டாக்டர் பல்ப்பு காண முடிந்தது. யாராலும் அறியப்படாது வாழ்ந்து பின் உலகப்புகழ் பெற்ற விவேகானந்த சுவாமிகள் தீர்க்கதரிசனமாகக் கூறிய அந்த ஆன்ம ஞானி கேரளாவில் புகழ்பெற்று விளங்கிய ஸ்ரீ நாராயண குருதான் என்று டாக்டர் அறிந்துகொண்டார். ஸ்ரீ நாராயண குரு என்ற பெயர் அவருக்குப் பிற்காலத்தில் அவருடைய சீடர்களால் சூட்டப்பெற்றது. ஆரம்பத்தில் அவர் நாராயணன் என்றோ நாணு என்றோதான் அவருடைய நண்பர்களாலும் அவருக்கு அறிமுகமான மற்றவர்களாலும் அன்புடன் அழைக்கப்பட்டார். கன்னியாகுமரிக்கு அருகில் மருத்துவாமலை என்னுமிடத்தில் இந்த இளைஞர் பல ஆண்டுகள் தொடர்ந்து தவ வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார். மலையாளம், சம்ஸ்கிருதம். தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் அவர் பெரும் புலமை பெற்றிருந்தார். அந்த மலையினின்று ஸ்ரீ நாராயண குரு ஒரு பூரண ஞானியாக முகிழ்த்தெழுந்தார். காண்பதற்கு உயரமானவராகவும் கம்பீரமான

வராகவும் அவர் தென்பட்டார். இறையருளால் முற்றிலும் பக்குவமான தருணத்தில் ஓர் உயரிய பிரபஞ்சத் திட்டத்தை நிறைவேற்று வதற்காகவே அவர் தெய்வாதீனமாகத் தோன்றினர்.

பாரத நாட்டின் முதுகெலும்பு போன்றது ஆன்மிகமேயாகும். எனவே ஆன்மீகத்தை ஒதுக்கி வைத்துவிட முயலும் எந்த இயக்கத் திற்கும் இந்நாட்டில் தோல்வியே உண்டா கும். சரியான சந்தர்ப்பத்தில் தோன்றியவராக ஸ்ரீ நாராயண குரு விளங்கினர். இறைவனரு ளால் அவர் தம் இனத்தாரை அழிவினின்றும் அவமானத்தினின்றும் விடுவிப்பவராகப் பரி ணமித்தார். ஸ்ரீ நாராயண குரு சென்ற இடங் களிலெல்லாம் தாய்க்கோழியிடம் சரண்புகும் குஞ்சுகளைப் போல் அவர்பால் மக்கள் ஈர்க் கப்பட்டனர். அப்போது உருவான புனருத் தாரண இயக்கத்திற்கு ஏற்ற 'ஏக ஜாதி, ஏக மதம், ஏக தெய்வம்' என்னும் பொருத்தமான சுலோகம் ஒன்று தன்னைத்தானே விளக்கிக் கொள்ளும்படியாக உருவெடுத்தது. மக்கள் அறியாமையிலிருந்து அறிவுடையவர்களாக விழித்தெழுந்தார்கள். நெடுங்காலமாக ஒதுக் கப்பட்டுவந்த ஈழவர் இனம் வீறுகொண்டு தன் பழைய சான்னித்தியத்தையும், பெருமையை யும் மீண்டும் பெற்றது. இதற்கெல்லாம் மூல காரணமாக அமைந்தது ஸ்ரீ நாராயண குரு விடமிருந்து பொங்கிக்கிளம்பிய ஆன்மீகச் சூழலேயாகும்.

ஸ்ரீ நாராயண குரு சாந்த சொரூபியாகவும் உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவராகவும்இருந் தார். தர்க்கரீதியாகவும் தீர்க்கமான தெளி வுடனும் அவர் தம் அறவுரையை வெளியிட் டார். அவர் விடுத்த செய்தியானது நிரந்தர மாகச் சமுதாயத்தில் வேரூன்றியது. பின் தங்கியிருந்த மக்கள் ஆத்ம போதத்தையும் உற்சாகத்தையும் தங்களுக்குள்ளே விரைவாக உயிர்ப்பித்துக்கொண்டனர்.

சமுதாயச் சீர்திருத்தத்தை விளைவித்த அவ ருடைய செய்தியை அந்தத் துறவி எவ்வாறு அழகுற வெளியிட்டார் என்பதை ஒரு சான் றின் மூலம் விளக்கலாம். கேரளாவில் பண் பில் மேலோங்கியிருந்த நம்பூதிரி பிராம்மணர் கள் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம்செலுத்தி வந்தார்கள். அந்த மாநிலம் எங்கும் நிறைந் திருந்த வயல் வெளிகளினூடே மனிதர்கள் கடந்து செல்வதற்கு உரிய வரப்புகள் அமைந் திருந்தன. அந்த மாகாணத்தில் தம்பிரான் என்று அழைக்கப்பட்ட நம்பூதிரி பிராம்மணன் ஒருவன் அந்த வரப்பில் நடந்துவந்தால் எதிரே வரும் சாதாரண மனிதன் ஒருவன் இறங்கி வழிவிடுவதே வழக்கமாயிருந்தது. ஒரு முறை ஸ்ரீ நாராயண குருவும் வேறொரு தம்பிரானும் ஒரு வரப்பில் எதிரெதிராக நடந்து வந்துகொண்டிருந்தார்கள். இருவரும் பாதிவழியில் சந்தித்துக்கொண்டார்கள். அப் போது தம்பிரான்செல்வதற்காக ஸ்ரீ நாராயண குரு வழிவிட்டிருக்கவேண்டியதுதான் முறை. ஆனல் அவர் அவ்வாறு செய்யவில்லை. இரு வரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு நின்றிருந்தனர். அவர்களுக்குள் பின்வருமாறு உரையாடல் நிழ்ந்தது:

தம்பிரான்: உம்முடைய ஜாதி என்ன?

ஸ்ரீ நாராயணகுரு: தயவு செய்து அதை நீரே பார்த்துத் தெரிந்து கொள்ளும்.

தம்பிரான்: பார்த்து எவ்வாறு ஜாதியைத் தெரிந்து கொள்வது?

ஸ்ரீ நாராயணகுரு: பார்த்து அறிய முடி யாத ஒன்றைக் கேட்டு அறிவது சாத்தியமா?

நம்பூதிரி திகைத்துப்போய்விட்டார். பண் பாடு மிக்கவராக இருந்த அவர் அந்த வாக்கி யத்தில் பொதிந்திருந்த அர்த்தத்தை ஊகித் தறிந்தார்; அவ்வாறு பேசிய அந்த மனிதரின் முகத்தையே உற்றுப்பார்த்த வண்ணம் இருந் தார். அந்த ஆப்த மொழியை ஆமோதிக்கும் வண்ணம் அந்த நம்பூதிரி தாமே வரப்பிலி ருந்து இறங்கி வழிவிட்டதன் மூலம் தம் நீண்டநாள் கௌரவத்தையும் முன்னுரிமை யையும் விட்டுக்கொடுத்துவிட்டார்.

தம்முடைய பிரபுத்துவத்தைப் புறக்கணித்து விட்ட அந்த நம்பூதிரியை மதிக்கும் பொருட்டு ஸ்ரீ நாராயண குரு வரப்பின் மறுபுறம் இறங்கி அவருக்கு வழிவிட்டார்.

ஸ்ரீ நாராயண குரு போதனையூட்டும் முறை யானது அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு யாண்டும் மகிழ்ச்சி ஊட்டுவதாகவும் நகைச் சுவை ததும்பியதாகவும் தர்க்கரீதியானதாக வுமே இருந்தது. இவருடைய நடைமுறை

களின் விளைவாக வெறுப்புணர்ச்சியோ மாறுபாடான எதிர்ச் செயலோ சிறிதும் ஏற்பட்டதில்லை. சமுதாயத்தில் பிரதிகூலமான சூழலில் அறியாமையில் மூழ்கிக்கிடந்த மக்களுக்கு ஆன்மீகமே உருவெடுத்தவரான ஸ்ரீ நாராயண குரு புது வாழ்வையும், தன்னம்பிக்கையையும், தற்சார்பையும் ஊட்டினர்.

தக்க தருணத்தில் ஸ்ரீ நாராயண குரு கேரள மாநிலத்தில் தோன்றியிருக்காவிட்டால் அம் மாநிலம் இந்தியக் கலாச்சாரத்தின் தனித் தன்மையை முற்றிலும் இழந்து அங்கிய மத இயக்கத்தால் விழுங்கப்பட்டிருக்கும். பிரச்னைகள் அப்போது சுலபமான தீர்வு காண முடியாத வகையில் சிக்கலாகி இருக்கும். இன்று கேரளாவிலுள்ள ஈழவர்கள் சமயம், கலாச்சாரம், கல்வி, சமூகம், பொருளாதாரம் ஆகிய பலதுறைகளிலும் வெகுவாக முன்னேறி வருகிறுர்கள். வெளித் தோற்றத்திலும் முற்றிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக அவர்கள் விளங்குகிறுர்கள். இவ்வளவு காலம் தங்களை அடிமைப்படுத்தி வைத்திருந்ததற்காக உயர் ஜாதியினர்மீது எந்த விதமான வெறுப்புணர்ச்சியும் அவர்களிடம் இல்லை. ஸ்ரீ நாராயண குரு தாராளமாக ஆன்மீக அமிர்தத்தை அவர்களுக்கு வாரி வழங்கியதே இதற்கெல்லாம் காரணமாய் அமைந்திருக்கிறது.

---

## விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-4

1889-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதினேழாம் தேதி பிரமததாஸ் மித்ரா அவர்களுக்கு சுவாமிஜி எழுதிய கடிதத்தில் காணப்படும் கருத்துக்களாவன: “ஐயனே! தாங்கள் கிருஹஸ்த ஆச்ரமத்துக்கு உரியவர் என்றும் நான் சன்னியாச ஆச்ரமத்துக்கு உரியவன் என்றும் குறிப்பிடுகிறீர்கள். சந்நியாச ஆச்ரமம் முடிந்த நிலை. கிருஹஸ்த ஆச்ரமமோ இரண்டாவது இடம் பெறுகிறது. ஆதலால் நாலாவது ஸ்தானமாகிய சன்னியாச ஆச்ரமத்தில் இருப்பவன் இரண்டாவது ஸ்தானமாகிய கிருஹஸ்த ஆச்ரமத்தில் இருப்பவனுக்கு அதிகமாக மரியாதை காட்டலாகாது என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது விஷயத்தில் என் குருநாதராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சதேவர் நடந்துகொண்டது அலாதியானது. இத்தகைய ஆச்ரம பேதத்தை அவர் உண்டுபண்ணவில்லை; மனதிலும் கருதக் கிடையாது. மனிதனிடத்தில் பெருமை ஏதேனும் இருக்குமாகில் அப்பெருமையையே அவர் போற்றி வந்தார். அவரைப் பின்பற்றுகின்ற நானும் அதே முறையைக் கையாளுகின்றேன். அறிவிலும் ஆராய்ச்சியிலும் தாங்கள் தலைசிறந்தவராக இலங்குகின்றீர்கள். அந்த ஒரு சிறப்பை முன்னிட்டே ஆச்ரம பேதத்தையெல்லாம் மறந்துவிட்டுத் தங்களை என் தந்தைக்கு நிகராகவும் என்னைத் தந்தைக்கேற்ற தனயனுகவும் வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

சன்னியாச ஆச்ரமத்தைச் சேர்ந்தவர்கள் ஆச்ரம வாழ்க்கையில் தம்மைவிட முதியோராய் இருப்பவர்களிடம் ஓம் நமோ நாராயணுய என்று சொல்லி வணங்க வேண்டும். தமக்கு நிகராய் இருப்பவர்களிடம் நமோ நாராயணுய என்று சொல்லி வணங்க வேண்டும். மற்றவர்கள் தம்மை வணங்குகின்றபொழுது வெறும் நாராயணு என்று பகர வேண்டும். இது நம் நாட்டில் வந்துள்ள ஐதிகமாகிறது. ஒரு காலத்தில் இக்கோட்பாடு ஒருவாறு பயன்பட்டிருக்கலாம். இன்றைய சூழ்நிலையிலோ இது பொருளற்றதாகத் தென்படுகிறது. ஆதலால் தான் என் குருநாதர் இதுபோன்ற கோட்பாடுகளைத் தம் கருத்தில் வாங்கிக்கொள்ளவில்லை. மனிதனேடு மனிதன் வைக்கவேண்டிய இணக்கத்திற்கு என் குருநாதர் கையாண்ட முறையே சாலச் சிறந்ததாகிறது. உலகத்தவர்களால் ஒழுக்கத்தில் மிகக் கீழோனுகக் கருதப்படுபவனையும் பரமஹம்ஸதேவர் நாராயண சொரூபமாகக் கருதினர். அவருடைய கருத்துப்பிரகாரம் நாரயணனே புலியாகவும் போக்கிரியாகவும் பக்தனுகவும் வடிவெடுத்து விளையாடுகிருன். புலி நாராயணனுக்கு எட்ட நின்றுகொண்டு வணக்கம் செலுத்திப் போக்கிரி நாராயணனுக்கு இரண்டொரு இன்சொல் சொல்வதோடு நின்றுவிடு. பக்த நாராயணனுக்கு வேண்டியவாறு வணக்கம் செலுத்து என்பது பரமஹம்சதேவருடைய கோட்பாடாகிறது. மானுடன் ஒருவன் இம்முறையை யாரோடும் கையாளலாம். இதன் விளைவாக நலனே விளையும்.

---

# ஸத் ஸம்பாஷணை

**கேள்வி: (403)** ருத்ர தாண்டவப்படத்தை வீட்டில் வைத்து வணங்கக்கூடாது என்பது சரியா?

ருத்ரன் சம்ஹார மூர்த்தி; உயிர்களையெல்லாம் காலக்கிரமத்தில் முடிவுக்குக் கொண்டு வருகிறவன் ருத்ரன்; ஆகையினால் அந்த மூர்த்தியை வீட்டில் வைத்து வணங்கக்கூடாது என்பது கோழைகளுடைய கொள்கை. உயிர்ப் பற்று வைத்துள்ள கோழைகளே மரணத்தைக் கண்டு அஞ்சுகின்றனர். அஞ்சுகின்றவர்கள் மரணத்தைத் தடுத்துக்கொள்ள முடியுமா? தீக்கோழியைப் பிடிக்க வேட்டைக்காரர்கள் அதைத் துரத்திக்கொண்டு போகின்றனர். மேற்கொண்டு ஓடமுடியாத இடத்து அது தன் தலையை மணலுக்குள் புதைத்து வைத்துக்கொண்டு தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்துவிட்டதாக எண்ணுகிறது. உண்மை என்ன? வேட்டைக்காரர்கள் கையினின்று அது தப்பிக்க முடியாது. சம்ஹாரத் தாண்டவம் ஆடுகின்ற ருத்ர மூர்த்தியினுடைய படத்தை வீட்டில் வைத்து வணங்கலாகாது என்று சொல்லித் தங்களைப் பாதுகாத்துக்கொள்கின்றவர்களுடைய கதியும் இத்தகையதேயாம்.

பிறந்த உயிர்கள் மடிந்தே ஆகவேண்டும். இந்த நியதியினின்று யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. 'யானேதும் பிறப்பஞ்சேன்; இறப்பு, அதற்கு என் கடவேன்?' என்று மாணிக்கவாசகர் பகர்ந்துள்ளார். இறப்பா, அது தன்போக்கில் வந்துகொள்ளட்டும். அதைக் குறித்து நான் செய்யவேண்டியது யாதுமில்லை. நிகழ்வது நிகழ்ந்தே தீரும். இங்ஙனம் எண்ணித் தன்னை மரணத்துக்கு ஆயத்தப்படுத்துகிறவனே நல்ல பக்தனாகிறான். சூரிய அஸ்தமனத்தைக் குறித்து எவ்வளவு தான் அழுது புரண்டாலும் அச்செயலை யாரும் தடுக்க முடியாது. அது இயற்கையின் பாங்கு. அதேவிதத்தில் பிறந்துள்ள ஜீவர்களும் மரணத்தின் வாயிலாக ஒடுங்குவது இயல்பு. இங்ஙனம் மனிதன் தன்னை வாழ்வுக்கு ஆயத்தப்படுத்திக்கொள்வது போன்று மரணத்துக்கும் ஆயத்தமாயிருத்தல் வேண்டும். ஆதலால் சம்ஹாரத் தாண்டவம் ஆடுகின்ற ருத்திரனுடைய மூர்த்தியைத் தங்குதடையின்றி வீட்டில் வைத்து வணங்கலாம்.

**கேள்வி : (404)** ஆந்திரத்தில் பாலயோகி முப்பத்தைந்து ஆண்டுகளாக உணவில்லாமல் இருக்கிறாரே, அதனால் பயன் என்ன ?

இயற்கையின் கூறுகள் பல. சில உயிர் வகைகள் உணவு அகப்படாவிட்டாலும் நெடு நாள் வாழ்ந்திருக்கின்றன. வேறு சில உயிர் வகைகள் உணவு அகப்படாவிட்டால் அதி விரைவில் அழிந்துபட்டுப்போகின்றன. மானுட வர்க்கத்தில் இயற்கையில் உள்ள எல்லாப் பாங்குகளையும் காணலாம். யோக சாதனம் செய்தும் செய்யாமலும் சில சித்திகள் மனிதனுக்கு வந்து வாய்க்கின்றன. யோக சாஸ்திரப்படி ஏழாவது ஞான பூமியாகிய உச்சந் தலையில் உள்ள சஹஸ்ராரம் என்னும் ஆதாரத்தினின்று அமிர்ததாரையை ஒரு சொட்டாவது புசிக்கும் வாய்ப்பு மனிதனுக்கு அமையுமாகில் பிறகு உணவு உண்ணாமலேயே அவன் நெடுங்காலம் வாழ்ந்திருக்கலாம். பின்பு நெடுங்காலம் வாழ்ந்திருக்கிற கோட்பாடு வேறு; ஆன்ம பரிபாகம் அடைந்திருக்கும் கோட்பாடு வேறு. ஆந்திரப் பிரதேசத்தில் இருக்கும் இந்தப் பாலயோகியைத் தூக்கி வந்து ஆண்டுக்கு ஒருதடவை மஹாசிவராத்திரி சமயத்தில் மக்கள் தரிசனத்துக்காக வெளியே வைக்கிறார்கள். அந்த மூர்த்தியின் சரீரம் வளர்ந்து வருவது வெளிப்படை. ஆனால் ஆத்ம பரிபாகத்தைப் பற்றி இன்னும் யாரும் ஆராய்ச்சி செய்யவில்லை. பக்தியுடனும் விசுவாசத்துடனும் அந்த மூர்த்தியைத் தரிசித்து வந்தால் மட்டும் போதாது. சரீர வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஆத்ம பரிபாகம் அடையாவிட்டால் அதனால் தனக்கோ உலகுக்கோ நலன் ஏதும் வாய்க்காது. சரீரம் மட்டும் வாழ்ந்திருந்தால் போதாது. உடல் வளர்ச்சி உயிர்களனைத்துக்கும் பொதுவானது. ஆனால் உயிர்களனைத்தும் அதற்கு ஏற்ற உணவைப் புற உலகினின்று உட்கொள்கின்றன. நிச்சயமாக இந்த யோகி சுவாசிக்கிறார். சுவாசத்தின் மூலமாக வருகிற உணவு அமிர்த தாரையினின்று வருகிற சக்திக்குத் துணைபுரிகிறது. அந்த மட்டில்

யோகி ஒருவன் நெடுநாள் உடல் தாங்கி இருந்தால் போதாது. வாழ்க்கைத் தத்துவங்களை அன்னவன் சரியாக அறிதல் வேண்டும். அறிந்த அறிவை வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும். இதுகாறும் இத்தகைய நிகழ்ச்சி ஏதும் இந்த மூர்த்தியினின்று வெளியாகவில்லை. ஆகையினால் இது வெறும் உடல் வளர்ச்சியே ஒழிய ஆத்ம பரிபாகத்தின் அறிகுறி ஏதும் இங்குத் தென்படவில்லை. மக்களிடத்து விசுவாசத்தை ஊட்டுதற்கு மட்டும் இது பயன்படுகிறது. ஆனால் இதுபோதாது. இந்த மூர்த்தியின் வாழ்க்கையைப் பரிசீலனை பண்ணுவது உசிதம்.

**கேள்வி: (405)** *பிரளயம் வந்தால் அதில் பாரதமும் அழிந்துவிடுமா?*

பிரளயத்தின் பாங்கு மனிதனுடைய நித்திய வாழ்க்கையில் நாள்தோறும் நிகழ்ந்து வருகிறது. உயிர் வாழ்கின்ற ஜீவர்கள் அனைவருக்கும் நனவு, கனவு, கனவற்ற உறக்கம் ஆகிய மூன்று நிலைகள் யாண்டும் நிகழ்ந்து வருகின்றன. கனவற்ற உறக்கத்தில் பிரபஞ்சம் முழுதும் காட்சியினின்று மறைந்துபட்டுப் போகின்றது. இது இயற்கையின் கூறு. பரதகண்ட வாசிகள் இந்த அமைப்புக்கு விலக்காயிருக்கிறார்கள் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். உலகம் முழுதுக்கும் நிகழ்ச்சிகள் யாவும் ஒரே பாங்குடையவை. பிரளய காலத்தில் எல்லாம் அழிந்துபட்டுப்போவது போன்று பரதகண்டமும் அழிந்துபட்டுப்போம். பிரளய ஒடுக்க நியதிக்கு விலக்கு யாருக்கும் இல்லை, எப்பொழுதும் இல்லை.

**கேள்வி: (406)** *சிந்தனை, புத்தி, மனது— இவற்றிற்குள்ள தொடர்பு யாது?*

மனிதனிடத்து அந்தக்கரணம், பாஹிய கரணம் ஆகிய இரண்டு விதமான கரணங்கள் இருக்கின்றன. புறஉலகோடு தொடர்பு கொள்ள உதவுவது பாஹிய கரணம். பாஹிய கரணங்கள் ஐந்து உள. அவை முறையே சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப் பெயர் பெறுகின்றன. அவைகளுள் ஒரு கரணத்தின் செயலை மற்றொன்று செய்ய மாட்டாது. பார்ப்பதற்குக் கண் உதவுவது போன்று கேட்பதற்குக் காது உதவுகிறது. காதைக்கொண்டு காணமுடியாது.

இனி, அந்தக்கரணம் ஒன்று. செயலுக்கேற்ப அந்த ஒரே கரணம் நான்கு பெயர்கள் பெறுகின்றன. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆக நான்குவித வடிவெடுத்து ஒரே அந்தக்கரணம் வேலை செய்கிறது. இன்ப துன்பங்களை உணர்வது மனது. நல்லது, கெட்டது என்று பாகுபடுத்துவது புத்தி. அனுபவங்களையெல்லாம் தன்னிடத்து அடக்கி வைத்திருப்பது சித்தம். இத்தகைய செயல்களையெல்லாம் 'நான்' அனுபவித்து வருகிறேன் என்று உணர்வது அகங்காரம்.

சித்தத்தில் சலனம் உண்டாகின்றபொழுது எண்ணம் தோன்றுகிறது. இன்பதுன்பங்களை உணரும் உணர்ச்சி ஏற்படுகிறது. அது மனதின் செயலாகிறது. இன்பதுன்பஉணர்ச்சிகளை அனுபவத்தின் மூலம் பொருந்தியவை பொருந்தாதவை என்று புத்தி அறிகிறது. அதற்கு விவேகம் என்று பெயர். உணர்ச்சிகளில் கட்டுப்பட்டு அவ்வுணர்ச்சிகள் தனக்குரியவைகள் என்னும் அகங்காரம் இருக்கும்வரையில் மனிதன் இன்பதுன்பத்துக்கு ஆளாகியாக வேண்டும். அவ்வுணர்ச்சிகளெல்லாம் அந்தக்கரணத்தின் செயல்கள் என்று அறிந்து அந்தக்கரணத்துக்கு அப்பால் உள்ள சொரூபம் 'தான்' என்று உணர்பவன்தான் யாண்டும் இன்புற்று இருக்கமுடியும்.

ஒருமனிதன் குடும்பத் தலைவனாக இருந்து தன் குழந்தைகளுக்கெல்லாம் தந்தையாகின்றான். அதே மனிதன் வயலுக்குச் சென்று ஆட்களிடம் வேலை வாங்கும்போது வேலையாட்கள் அவனை எஜமானன் என்று அழைக்கின்றார்கள். அவன் ஊரில் இரண்டுபேர்களுக்கு இடையில் உள்ள சண்டை சச்சரவுகளை நடுவனாகவிருந்து தீர்த்து வைக்கும்போது மத்யஸ்தன் என்னும் பெயர் பெறுகிறான். அவன் ஒரு சங்கத்தின் காரியங்களைப் பார்த்து வருகிறபொழுது காரியதரிசி என்னும் பெயர் பெறுகிறான். ஒரு மனிதன் தான் செய்யும் செயலுக்கு ஏற்பத் தந்தை என்றும், எஜமானன் என்றும், மத்யஸ்தன் என்றும், காரியதரிசி என்றும் அழைக்கப்படுவது போன்று அந்தக்கரணம் தன் செயலுக்கு ஏற்பச் சித்தம் என்றும், மனம் என்றும், புத்தி என்றும், அகங்காரம் என்றும் அழைக்கப்படுகின்றது.

# தத்தாத்ரேயர்

மக்களுள் விலங்குத் தன்மை உடையவர்கள் இருக்கின்றனர்கள். மக்கள் வடிவத்தில் இருந்தாலும் அவர்களிடம் விலங்குத் தன்மை ஓங்கி இருக்கும். பிற உயிர்களைத் துன்புறுத்தித் தாங்கள் இன்பம் அடைய அவர்கள் விரும்புவார்கள். ஈவு, இரக்கம் இல்லாது பிற உயிர்களுக்குக் கொடுமை செய்து தாங்கள் வாழ விரும்புவார்கள். மக்களுள் மனிதத் தன்மை உடையவர்கள் இருக்கின்றனர்கள். அவர்கள் தங்களைப் போல மற்றவர்களும் வாழவேண்டும் என்று விரும்புவார்கள். தாங்கள் பெற்றதை மற்றவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்து மகிழ்ச்சி அடைவார்கள். தாங்களும் இன்பம் அடைய வேண்டும், மற்றவர்களும் இன்பம் அடைய வேண்டும் என்று விரும்புபவர்கள் மனிதர்களாவார்கள். இனி மனித வடிவத்தில் இருந்தாலும் தங்களிடம் தெய்வத் தன்மையை மேலோங்கச் செய்தவர்கள் தேவர்களாகின்றனர்கள். அவர்கள் மற்றவர்களுடைய நலனுக்காகத் தங்களைத் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்கின்றனர்கள். தங்களுடைய வாழ்வு பிறருக்கு நலம் செய்யவே அமைந்திருக்கிறது என்பதை முற்றும் உணர்ந்திருக்கின்றனர்கள். மந்திரங்களினுடைய உண்மைகளைத் தரிசித்தவர்களாகையால் அவர்கள் மந்திர த்ருஷ்டாக்கள் என்று அழைக்கப்படுகின்றனர்கள். முனிவர்கள் என்றும், ரிஷிகள் என்றும், மகான்கள் என்றும், ஞானிகள் என்றும், யோகிகள் என்றும், சாதுக்கள் என்றும், தவ சிரேஷ்டர்கள் என்றும், சான்றோர்கள் என்றும் அவர்கள் அழைக்கப்படுகின்றனர்கள். உலகம் அவர்களால்தான் நிலைத்து நிற்கிறது. அத்திருக் கூட்டத்தைச் சேர்ந்தவர் தத்தாத்ரேயராவார்.

அனுசூயை என்னும் கற்பரசி ஒரு சமயம் பூலோகத்தில் வாழ்ந்து வந்தாள். சூயை என்றால் பொறாமை. அனுசூயை என்றால் பொறாமை அற்றவள் என்பது பொருள். அவள் அத்திரி மகரிஷியினுடைய பத்தினியாக இருந்தாள். அவள் மஹா பதிவிரதையாக இருந்தமையால் கற்பரசி என்று அவள் போற்றப்பட்டாள். மும்மூர்த்திகளினுடைய அம்சங்களாக அனுசூயைக்கும், அத்திரி மகரிஷிக்கும் மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். பிரம்மாவின் அம்சமாகச் சந்திரனும், மஹாவிஷ்ணுவின் அம்சமாகத் தத்தாத்ரேயரும், பரமசிவனின் அம்சமாகத் துர்வாசரும் அவ்விருவர்களுக்கும் புத்திரர்களாகப் பிறந்தார்கள். மஹாவிஷ்ணுவின் அம்சமாகப் பிறந்த தத்தாத்ரேயர் அவர்களுக்கு இரண்டாவது புதல்வராவார்.

தத்தாத்ரேயர் இளமையிலேயே வேதத்தை நன்கு பயின்றனர். துஷ்டர்களை அழித்தும் சாதுக்களை ஆதரித்தும் அவர் உலகைக் காப்பாற்றி வந்தார். தாய் தந்தையர்களைப் பிரிந்து சித்தன் போக்கு சிவன் போக்கு என்பதற்கு ஏற்ப உலகமெல்லாம் தம் விருப்பப்படி சென்றனர். அவருடைய திவ்ய சக்தியானது ரிஷிகள் எல்லாரையும் அவர்பால் இழுக்கலாயிற்று. எனவே ரிஷிகள் பலர் அவரை எப்பொழுதும் சூழ்ந்து இருந்தார்கள். தத்தாத்ரேயர் தனிமையில் இருக்கவே விரும்பினர். எனவே அவர்களைவிட்டுப் பிரிய விரும்பித் தம் யோக சக்தியால் ஓர் ஏரிக்குள் பல நாட்கள் மூழ்கி இருந்தார். ஆனல் முனிவர்கள் அவரை விட்டு நீங்க மனமில்லாமல் அந்த ஏரியின் கரையிலேயே வாசம் செய்து வந்தார்கள். ஆண்டுகள் பல கடந்தும் முனிவர்கள் ஏரியின் கரையை விட்டு அகலவில்லை.

தத்தாத்ரேயர் அம்முனிவர்களைத் தம்மை விட்டுப் போகும்படி செய்வதற்காக அழகிய மார்பும் இடையும் உடைய ஒரு திவ்விய ஸ்திரீயுடன் ஏரியிலிருந்து வெளியே வந்தார். தத்தாத்ரேயர் ஸ்திரீயுடன் இருப்பதைக் கண்டும் முனிவர்கள் அவரை விட்டு நீங்கவில்லை. புறச் செயல்களில் தம்மைக் கீழ்மகன் போல் தத்தாத்ரேயர் காட்டிக் கொள்வதற்காகச் சமுதாயம் புறக்கணிக்கும் சில செயல்களைச் செய்தார். முனிவர்கள் அவருடைய உள்ளத்தின் உயர்வை அறிந்திருந்ததால் அவருடைய புறச் செயலை முன்னிட்டு அவரைப் புறக்கணிக்கவில்லை. தத்தாத்ரேயர் ஒரு மஹாத்மா என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள்.

தத்தாத்ரேயருடைய மஹிமையைக் கேகய தேசத்து அரசனான கார்த்தவீர்யார்ஜுனன் கேள்விப்பட்டான். அவன் தத்தாத்ரேயரு

டைய ஆச்ரமத்துக்குச் சென்று அவரைப் பக்தி பூர்வமாகப் பூஜித்து வந்தான். அவன் தேன், கிழங்கு முதலிய ஆகாரங்களைக் கொண்டு வந்து கொடுத்தும், அவர் கை கால்களைப் பிடித்தும் அவருக்குப் பணிவிடை செய்து வந்தான். "ஸ்திரியுடன் இருந்துகொண்டு நான் சக்தியற்றவனாக வாழ்ந்து வருகின்றேன். என்னைப் பூஜிப்பதில் உனக்கு என்ன பிரயோஜனம்? உன்னுடைய விருப்பம் நிறைவேறுவதற்கு யாராவது ஒரு மஹானைத் தேடிப்போ" என்று தத்தாத்ரேயர் அவ் அரசனுக்குக் கூறினார். "பகவானே! சகல மாயா சக்தியும் கூடிய நீர் என்னை ஏன் இவ்வாறு மயங்கச் செய்கிறீர்? நீர் ஒரு பெரிய மஹான். காமத்தையும், கோபத்தையும், பயத்தையும் அறவே வென்றவர். உங்களிடம் இருக்கும் தேவி உலக மாதா ஆவாள். அவளிடம் சிறுமை எப்படி அணுகும்?" என்றான் கார்த்தவீர்யார்ஜுனன். தத்தாத்ரேயர் அவ் அரசன் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தார். "அரசனே! நீ என்னுடைய உண்மையான சொருபத்தை அறிந்திருக்கின்றாய். உண்மையை அறிந்துள்ள உன்னிடத்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். லக்ஷ்மி சமேதராக இருக்கும் என்னை உள்ளத்தூய்மையுடன் யார் ஆராதிக்கிறார்களோ அவர்கள் செல்வம், மனைவி மக்களைப் பெறுவார்கள். என்னை அவமதிப்பவர்கள் அல்ப ஆயுளை அடைவார்கள். நீ என்னுடைய மஹிமைகளை அறிந்தபடியால் உன் மீது எனக்குப் பிரியம் ஏற்பட்டுள்ளது. உனக்கு வேண்டுவது யாது?" என்றார் தத்தாத்ரேயர்.

'ஓ! பகவானே! உங்கள் கிருபையைப்பெற்றதால் நான் பெரும் பாக்கியம் அடைந்தேன். என் குடிகளை நான் நன்கு காப்பாற்றவும், என்னிடத்துப் பயம் அணுகாமல் இருக்கும்படியும், பிறர் வல்லமையை நான் அறியத்தக்கவனாக இருக்கும்படியும், யாரையும் எதிர்த்துப் போர் செய்யும் திறமையுடையவனாக இருக்கும்படியும், மலை, நீர், பூமி, ஆகாயம், பாதாளலோகம் ஆகிய இடங்களுக்குப் போகக்கூடிய வல்லமையுடையவனாக இருக்கும்படியும், என்னை விடப்பலவான் ஒருவனாலேயே மரணம் உண்டாகும்படியும், என்னிடத்திலுள்ளதைக் கரவாது வழங்கும் இயல்புடையவனாக இருக்கும்படியும், உம்மிடத்துத் திடபக்தியுடையவனாக இருக்கும்படியும் நீங்கள் அருள்புரிய வேண்டும்" என்றான் கார்த்தவிர்யார்ஜுனன். "நீ கேட்ட வரங்களைத் தந்தேன். நீ இப்பூமண்டல முழுவதையும் ஏக சக்கராதிபதியாய் இருந்து ஆள்வாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார். தத்தாத்ரேயர் தாமே அவ் அரசனை உலக க்ஷேமத்தின் பொருட்டு வாழக்கடவாய் என்று ஆலிங்கனம் செய்து ஆசீர்வதித்தார். தத்தாத்ரேயருடைய கிருபையால் அவ் அரசன் பராக்கிரமத்தையும், நாடு நகரங்களையும், செல்வங்களையும், சேனைகளையும் பெற்றான். தனக்கு நிகர் யாருமில்லை என்ற நிலையில் ஆட்சி செய்தான். யாகங்கள், தானங்கள் செய்து நீதி வழுவாது அற ஆட்சி செய்து வந்தான்.

ஒரு சமயம் தேவர்களுக்கும், தைத்திரியர்களுக்கும் போர் நிகழ்ந்தது. தேவர்கள் அசுரர்களை எதிர்த்து நிற்க முடியாமல் தங்கள் குருவான பிரஹஸ்பதியின் ஆலோசனைப்படி தத்தாத்ரேய முனிவரைத் ஸ்தோத்திரம் செய்தார்கள். தத்தாத்ரேயர் தேவர்களை நோக்கி 'தேவர்களே, நீங்கள் மறுபடியும் சென்று தைத்திரியர்களைப் போருக்கு அழைத்து என் முன்கொண்டு வாருங்கள்" என்றார். தேவர்களும் அவ்வாறே செய்தார்கள். தைத்திரியர்கள் தத்தாத்ரேயர் முன் வந்தபொழுது அவருடைய இடப்பக்கத்தில் சந்திரன்போன்ற முகமும், தாமரை போன்ற கண்களும், அழகான இடையும், மார்பும் உடைய லக்ஷ்மிதேவி இனிய வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். அக்காட்சி அவர்களுடைய மனத்தில் காமத்தை எழச் செய்தது. காமத்தால் கலக்கம் அடைந்த அவர்கள் தேவர்களை விட்டுவிட்டு அம்மாதை அபகரித்துப் போக வேண்டுமென்று நினைத்தார்கள். அப்பாபிகளான அசுரர்கள் லக்ஷ்மிதேவியை ஒரு பல்லக்கில் வைத்துக்கொண்டு தங்களுடைய இருப்பிடங்களுக்குத் தூக்கிச் சென்றார்கள். அப்பொழுது தத்தாத்ரேயர் புன்சிரிப்புடன் தேவர்களிடம் பகர்ந்ததாவது: "லக்ஷ்மிதேவி ஒரு மனிதனுடைய தொடையில் இருந்தால் பலவிதத் திரவியங்களைத் தருகின்றாள். மார்பில் இருந்தால் மனிதனுடைய விருப்பங்களை

நிறைவேற்றுகின்ருள். கழுத்தில் இருந்தால் சாதுர்யமான வாக்குச்சக்தியை அளிக்கின்ருள். வாயில் இருந்தால் கவிதா சக்தியைத் தருகின்ருள். ஒருவனுடைய தலைமீது இருப்பாளானல் அவனை விட்டு விரைவில் நீங்கிவிடுவாள். இப்பொழுது அசுரர்களுடைய தலைமீது லக்ஷ்மிதேவி இருப்பதால் விரைவில் அவர்களை விட்டு நீங்கிவிடுவாள். அசுரர்கள் பிறருடைய மனைவியை அபகரித்ததினல் அவர்களிடமிருந்த தர்மங்கள் யாவும் நசித்துப் போயின. அவர்களுடைய சக்தியும் அழிந்து போயிற்று. அவர்களை நீங்கள் இனிமேல் தாக்கினல் தோல்வி அடைவார்கள்.''

தைத்திரியர்கள் சுமந்து சென்ற பல்லக்கிலின்று லக்ஷ்மிதேவி குதித்துத் தத்தாத்ரேய மகாமுனிவரைப் போய் அடைந்தாள். உடனே தேவர்கள் தைத்திரியர்களைத் தாக்கி வெற்றி அடைந்தார்கள். பராக்கிரமம் படைத்தவர்கள் வீரர்களென்றும், சூரர்களென்றும் அழைக்கப்படுகின்ருர்கள். வீரர்கள் தங்கள் பராக்கிரமத்தை முறையாகக் கையாளுகின்றனர். கேட்டை ஒழிப்பதற்கும், கெட்டவர்களை அழிப்பதற்கும், நலத்தை வளர்ப்பதற்கும், நல்லவர்களைக் காப்பதற்கும் வீரர்கள் தங்களிடத்துள்ள பராக்கிரமத்தைப் பயன்படுத்துகின்ருர்கள். ராமன், கிருஷ்ணன் போன்றவர்கள் அத்தகைய வீரர்களாகிருர்கள். சூரர்கள் தங்களிடமுள்ள பராக்கிரமத்தை முறைதவறிக் கையாளுகின்ருர்கள். பிறருக்குத் துன்பத்தைத் தந்து தாங்கள் இன்புற்றிருக்கவே அசுரர்கள் தங்களிடமுள்ள பராக்கிரமத்தைப் பயன்படுத்துகின்ருர்கள். இராவணன், கம்சன், சூரபத்மன் போன்றவர்கள் அத்தகைய சூரர்களாகிருர்கள். தொல்லை தரும் சூரர்களை அடக்குவதற்கும், நம்மிடமுள்ள அசுரத் தன்மையை அழிப்பதற்கும் நாம் பலம் மிக படைத்தவர்களாக இருக்கவேண்டும். வலிவு படைத்தவனே வாழ்வுக்குரியவன் என்பது கோட்பாடு. நல்லவனகவும், வல்லவனகவும் இருப்பதற்கு நாம் பயிற்சி பெறவேண்டும்.

தங்களிடத்திலுள்ள கேட்டைக் களைந்து தங்களைத் திருத்தி அமைப்பதில் வெற்றி கண்டவர்கள் முனிவர்களாகிருர்கள். ஒவ்வொருவரிடத்திலும் அளப்பரிய மஹிமை மறைந்திருக்கிறது. அம் மஹிமையைக் கேடுகள் மறைத்து வைத்திருக்கின்றன. நல்வாழ்வு அல்லது யோகவாழ்வின் மூலம் கேடுகளை எல்லாம் அழிப்பதைத்தான் தவம் என்கின்ருேம். தவம் செய்கின்றவர்கள்தாம் தம் கர்மத்தைச் செய்கின்ருர்கள். தங்களிடத்திலுள்ள கேட்டை ஒழித்தவர்கள்தாம் உலகத்திலுள்ள கேட்டை ஒழிப்பதற்குப் பயன்படுகிருர்கள். கேடு நீங்க நீங்க உள்ளத்துக்கு உறுதியும் திட்பமும் வந்து வாய்க்கின்றன. தத்தாத்ரேயர் தம்மிடத்திலுள்ள கேட்டை முழுவதையும் நீக்கிச் சிறந்த முனிவராகத் திகழ்ந்தார்.

காமத்துக்கு வசப்படுகிறவர்கள் மனக் குழப்பத்தை அடைகின்ருர்கள். தங்களிடத்திலுள்ள சக்தியையும் இழக்கின்ருர்கள். தைத்திரியர்களுடைய வாழ்க்கை இவ்வுண்மையை விளக்குகின்றது. முனிவர்களுடைய வாழ்வு நமக்கு லக்ஷியமாக அமையவேண்டும். அசுரர்களுடைய வாழ்வு நமக்கு எச்சரிக்கையாக அமைகின்றது. அசுரர்களைப் பின்பற்றினல் வாழ்வில் வீழ்ச்சியும், முனிவர்களைப் பின்பற்றினல் வாழ்வில் மேன்மையும் பெறலாம் என்பதை நாம் யாண்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தத்தாத்ரேயருடைய வாழ்வு நமக்கு லட்சிய வாழ்வாக அமைகின்றது. பெரியோர்களைச் சிந்திப்பதும், பெரியோர்கள் வாழ்வைப் பின்பற்றுவதும் நம் வாழ்வைப் பெருவாழ்வாக மாற்றியமைக்கும்.

## செய்திகள்

*15—4—84* ஞாயிற்றுக் கிழமையன்று மதுரை ஜில்லா திருவேடகம் ஸ்ரீ விவேகானந்த கல்லூரியில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் ஒரு நாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

*24—4—84* செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் கோடை விடுமுறைக்காக அவரவர் ஊருக்குப் புறப்படுவார்கள்.

*5-5-84* சனிக்கிழமை இராமநாதபுரம் ஜில்லா திருச்சுழியில் ஸ்ரீமத் நித்தியானந்தர் காலை 9-30 மணி முதல் மதியம் 12-00 மணி வரை அந்தர் யோகம் நடாத்துவார்கள்.

# ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
## இயற்றிய நூல்கள்

| | | |
|---|---|---|
| திருவாசகம் | பிரசார விலை ரூ. | 23-00 |
| ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு | ,, ... | 21-00 |
| மஹாபாரதம் | ,, ... | 8-00 |
| இராமாயணம் | ,, ... | 5-00 |
| ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் | ,, ... | 6-00 |
| ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ | ,, ... | 6-50 |
| தினசரி தியானம் | ,, ... | 4-50 |
| ராஜயோக விளக்கம் | ... | 12-00 |
| கர்மயோக விளக்கம் | ... | 10-00 |
| பக்தியோக விளக்கம் | ... | 9-00 |
| ஞானயோக விளக்கம் | .. | 8-00 |
| பரமஹம்சரின் பெருமை | ... | 6-00 |
| ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் | ... | 6-00 |
| கடவுளின் வடிவங்கள் | ... | 6-00 |
| சந்தேகம் தெளிதல் பாகம்—1 | ... | 5-50 |
| சந்தேகம் தெளிதல் பாகம்—2 | ... | 5-50 |
| விவேகானந்த விவரணம் | ... | 4-00 |
| சகோதரி நிவேதிதை | ... | 3-75 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் | ... | 3-50 |
| ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம் | ... | 3-00 |
| அனுஷ்டான வேதாந்தம் | ... | 3-00 |
| எதிர்கால இந்தியா | ... | 3-00 |
| திருக்கயிலாயகிரி யாத்திரை | ... | 3-00 |
| பஜனைப்பாடல்கள் | ... | 3-00 |
| தேவரகசியம் (முதலிய கதைகள்) | ... | 2-50 |
| தாயுமானவர் இயற்றிய | | |
| கருணாகரக் கடவுள் | விரிவுரை ... | 3-50 |
| பரிபூரணானந்தம் | ஷை ... | 3-00 |
| சின்மயானந்த குரு | ஷை ... | 3-00 |
| ஆனந்தமானபரம் | ஷை ... | 3-00 |
| சுகவாரி | ஷை ... | 3-00 |
| மௌனகுரு வணக்கம் | ஷை ... | 3-00 |
| எங்கும்நிறைகின்றபொருள் | ஷை ... | 2-50 |
| மலைவளர் காதலி | ஷை ... | 1-50 |
| பரசிவ வணக்கம் | ஷை ... | 1-00 |
| கண்ணன் என்னும் கடவுள் | ... | 2-50 |
| அறம் வளர்த்த நம்பி | ... | 2-50 |
| விரதவீரர் பீஷ்மர் | ஷை ... | 2-50 |
| சந்நியாசி | ... | 2-50 |
| ஹரிச்சந்திரன் | (நாடகம்) ... | 2-00 |
| தவப்புதல்வர்கள் | ஷை ... | 2-00 |
| பாதுகாபட்டாபிஷேகம் | ஷை ... | 1-75 |
| விபீஷணன் சரணாகதி | ஷை ... | 1-50 |
| பரமஹம்சர் பாமாலை | ... | 1-50 |
| காயத்ரீ | ... | 1-50 |
| நன்மக்களைப் பெறுதல் | ... | 1-50 |
| மாணாக்கன் | ... | 1-25 |
| செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? | ... | 1-25 |
| சைவன் யார்? | .., | 1-25 |
| *ஆலய வழிபாடு | ... | 1-25 |
| இறைவணக்கம் | ... | 1-00 |
| குழந்தைகளின் களிக்கூடம் | . | 1-00 |
| இராவண தத்துவம் | ... | 1-00 |
| வாலி மோட்சம் | (நாடகம்) ... | 1-00 |
| ஏகலைவ்யனின் குருபக்தி | (நாடகம்) ... | 1-00 |
| தானவீரன் கர்ணன் | (நாடகம்) ... | 1-00 |
| மார்க்கண்டேயன் | (நாடகம்) ... | 1-00 |
| பிரஹ்லாதன் | (நாடகம்) ... | 1-00 |
| தபோபலன் | (நாடகம்) ... | 1-00 |
| பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம் | ... | 1-00 |
| இந்துமதமும் கிறிஸ்துவமதமும் | ... | 1-00 |
| நோய்க்கு இடம் கொடேல் | ... | 1-00 |
| *ஆத்ம சக்தி | ... | 1-00 |
| *சக்தி தத்துவம் | ... | 0 90 |
| *சூரியநாராயணன் | ... | 0-75 |
| தெய்வீக மகிமைகள் | ... | 0-75 |
| *மனிதனது நிஜசொருபம் | ... | 0-70 |
| தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு | ... | 0-60 |
| நன்னெறிகளும் அருள்வாக்குகளும் | ... | 0-60 |
| *கணபதி | ... | 0-60 |
| *முருகக்கடவுள் | ... | 0-50 |
| விஷ்ணு தத்துவம் | ... | 0-50 |
| கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது? | | 0-50 |
| அருள் விருந்து (பௌண்ட் செட்) | ... | 10-00 |
| அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் | ... | 0-30 |
| விவேகானந்தரின் வீர கர்ஜனை | ... | 0-30 |
| கந்தர் அநுபூதி | ... | 0 25 |
| The Bhagavad Gita (11th Imp.) | ... | 24-00 |
| Sri Lalithambiha Sahasranama Stotram | | 15-00 |
| The Indian National Education | ... | 10-00 |
| Tirukkural (with plastic cover) | ... | 8-00 |
| Ramakrishna lives Vedanda | ... | 8-00 |
| Mahaveer Sri Hanuman | ... | 7-75 |
| The Bhagavad Gita (Small Size) | ... | 6-00 |
| Man Making Message | ... | 7-00 |
| Ramayana (with plastic cover) | ... | 7-00 |
| Mahabharata ,, | ... | 6-00 |
| Daily Divine Digest (DELUXE) | ... | 6-00 |
| Daily Divine Digest (Ordinary) | ... | 4-00 |
| Sri Krishna-The Manifest Divinity ,, | ... | 6-00 |
| Facets of Brahman or The Hindu Gods | ... | 5-00 |
| Sri Vishnu Sahasranama Stotram | ... | 4-00 |
| Siva Sahasranama Stotram | ... | 3-50 |
| Bheeshma The Superman | ... | 3-50 |
| *Introducing the Gita | ... | 2-00 |
| Holy Bible—In the Light of Vedanta | ... | 1-50 |
| Reminiscences of Master Mahashaya | ... | 1-50 |
| The Garland of Paraaparam | ... | 1-50 |
| *Key to Higher Life | ... | 1-25 |
| *The student | ... | 1-25 |
| The Teacher | ... | 1-00 |
| The School | ... | 1-00 |
| The Nursery School | ... | 1-00 |
| Tat Tvam Asi | ... | 1-00 |

# மாதேசுவரன்மலையில் அந்தர்யோகம்-7

1984ஆம் ஆண்டு மே மாதம் 2, 3 புதன் வியாழன் ஆகிய இரு தினங்களில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி திருப்பராய்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

## ஸ்ரீமத் சுவாமி 'நித்தியானந்தர் அவர்களால்

கர்நாடக மாநிலம் மாதேசுவரன் மலையில் அந்தர்யோகம் நடாத்தப்பெறும். பாலாறு செல்வதற்குச் சேலம் ஜில்லா மேட்டூர் தாலுகாவிற்கு அருகிலுள்ள கொளத்தூரிலிருந்து வேனோ லாரியோ கிடைக்கும். பாலாற்றிலிருந்து காலை 7-30க்கும், மாலை 2-30க்கும் மாதேசுவரன் மலைக்குப் பஸ் புறப்படுகிறது. மேலும் பஸ் வசதி விபரம் வேண்டுபவர்கள் சுவாமி சிதாபானந்த அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். அந்தர்யோகத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் சுவாமி சிதாபானந்த, ஸ்ரீ ராமகிருஷ்ண குரு குலம், சின்னதண்டா P. O., கொளத்தூர் (Via), சேலம் ஜில்லா என்னும் விலாசதாரரிடமோ, N. அன்னையன், சன்மார்க்க சங்கம், மேச்சேரி P. O., சேலம் ஜில்லா என்னும் விலாசதாரரிடமோ நபர் ஒன்றுக்கு ரூபாய் இருபத்தைந்து வீதம் M. O. மூலமோ நேரிலோ செலுத்திப் பதிவுசெய்து அனுமதிக் கார்டு பெற்றுக்கொண்டு மே மாதம் 1ஆம் தேதி மாலை 6-00மணிக்குள் மாதேசுவரன் மலைக்குப் படுக்கை வசதியுடன் வந்து சேரவேண்டும். அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளாதவர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது.

### வாழ்க்கை முறை

| காலை | மணிமுதல் | மணிவரை | மாலை | மணிமுதல் | மணிவரை |
|---|---|---|---|---|---|
| துயில் எழுந்திருத்தல் | 4-30 | | உணவு, ஓய்வு | 1-00 | 3-00 |
| நாம ஜபம் | 5-00 | 5-30 | உபந்யாசம் | 3-00 | 4-00 |
| ஆசனம், நீராடல் | 5-30 | 7-00 | வாசிப்பு | 4-00 | 4-30 |
| தியானம் | 7-00 | 7-45 | பானம், உலாவல், நீராடல் | 4-30 | 6-15 |
| சிற்றுண்டி | 7-45 | 8-45 | அர்ச்சனை | 6-15 | 7-15 |
| உபந்யாசம் | 8-45 | 9-45 | தியானம் | 7-15 | 7-45 |
| மௌனம் | 9-45 | 10-30 | உணவு | 7-45 | 8-45 |
| பஜனை | 10-30 | 11-15 | ஸத் ஸம்பாஷணை | 8-45 | 9-30 |
| ஆலயவழிபாடு, அர்ச்சனை, ஆரதி, | 11-15 | 12-15 | நித்திரை | 9-30 | |

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.